



# வெகுஜனப் போராளி

# கிருஷ்ணபிள்ளை

# வெகுஜனப் போராளி
# கிருஷ்ணபிள்ளை

அமரர் க.கிருஷ்ணபிள்ளை
ஞாபகார்த்த வெளியீடு

| | |
|---|---|
| நூலின் பெயர் | : வெகுஜனப் போராளி கிருஷ்ணபிள்ளை |
| பதிப்பு | : 05.09.2011. |
| பதிப்புரிமை | : திருமதி.சிவயோகம் கிருஷ்ணபிள்ளை |
| முகவரி | : பாடசாலை வீதி, தொண்டைமானாறு. |
| தொகுப்பு | : திரு.கிருஷ்ணபிள்ளை நவநீதன் |
| அச்சுப் பதிப்பு | : மதுரன் கிறா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய். |
| புத்தகத்தின் அளவு | : A5 |
| தாளின் அளவு | : 70g |

# சமர்ப்பணம்

தமிழர்கள் மத்தியிலுள்ள

சமூக ஏற்றத்தாழ்வுகள்

சமூக அநீதிகளுக்கு எதிராகக்

குரல் கொடுத்தும்

போராடியும் உயிர் நீத்தும்

அர்ப்பணிப்புக்களை

வழங்கிய தியாகிகளுக்கு

இந்நூல் சமர்ப்பணம்.

## அறிமுக உரை

ஒரு நூலின் அறிமுக உரை என்பது குறிப்பிட்ட நூலின் ஆக்கங்களைப் பற்றியதும், ஆக்கங்களை ஆக்கிய ஆசிரியரைப் பற்றிய அறிமுகமாக இருப்பது வழமை. ஆனால் இந்நூலானது எனது ஆரம்பகால ஆசான் அமரர் க.கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்களின் நினைவாக பிரசுரிக்கப்படுவதால், அமரரைப் பற்றிய, எனது அறிவாற்றலிற்கு எட்டிய, எனது நினைவில் நிற்கின்ற சில விடயங்களையும் ஆசானை சுகம் விசாரிக்கச்சென்ற வேளைகளில் அவர் வாயூடாக வெளிவந்த விடயங்களையும் சேர்த்து எழுதலாம் என எண்ணுகின்றேன்.

சிறீலங்கா வித்தியாசாலையின் ஆரம்பகால ஆசானாகவும், எனது ஆரம்பக் கல்வி ஆசானாகவும் பணியாற்றிய அமரர் க.கிருஷ்ணபிள்ளை வாத்தியார் அவர்களின் நினைவு மலருக்கு அறிமுகவுரை எழுதுவதில் நான் பெரும் புளகாங்கிதம் கொள்கின்றேன். அமரரின் ஆசிரியப்பணியில் உருவாக்கப்பட்ட பேராசிரியர்கள், பொறியியலாளர்கள், சட்டவாளர்கள், கணக்காளர்கள், நிர்வாகசேவை உத்தியோகத்தர்கள் எனப் பலருள் அடியேனும் ஒருவன். அமரரின் கை பிடியில் என் விரல் பதித்து மணலில் முதன் முதல் 'அ' எழுத கற்றவன். அமரரின் கைராசியின் பெறுபேறே தமிழ் எழுத்துலகில் கால் பதிக்காத எனக்கு சில தமிழ் ஆக்கங்களை ஆக்கும் சிற்றிறனேனும் கிடைத்தமையாகும்.

அமரர் அவர்கள் பாடசாலை நேரம் தவிர்ந்த பிறநேரங்களில் வேட்டியும் தோளில் சால்வையுமாக மாலை வகுப்புக்கள் நடத்துவார். மாணவர்களின் வீட்டிற்குச் சென்று பெற்றோர்களுடன் மாணவர்களின் கல்விநிலை பற்றிக் கலந்துரையாடுவார். இப்படியாக எனது வீட்டிற்கும் வருவதுண்டு. எனது தந்தையார், அமரரின் மேல் அதீத பற்றுக்

கொண்டவர். சந்நிதி முருகனின் பக்தனும் கூட. அமரர் அவர்களின் விவாக ஒப்பேற்றத்தில் எனது தந்தையாரின் வகிபாகமும் காத்திரமானது.

அமரரின் தன்னலமற்ற ஆசிரியப் பணியின் காரணமாக என்போன்ற பல மாணவர்கள் ஆரம்பக்கல்வி அத்திவாரம் சீராக இடப்பட்டு ஆண்டு 5 புலமைப்பரிசில் பரீட்சையிலும் சித்தியெய்தினர். இப்பெறுபேற்றுக்கு உந்து சக்தியாக விளங்கிய அமரர் மு.செல்லையா வாத்தியார் அவர்களையும் நாம் மறந்து விட முடியாது.

அமரரின் ஆசிரியத்தொண்டு தவிர்ந்த சமூகத் தொண்டு பற்றியும் இங்கு குறிப்பிட்டேயாக வேண்டும்.

“சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொருபால்
கோடாமை சான்றோர்க்கு அணி”

எனும் குறளிற்கமைய, எந்தவொரு விடயத்திலும் நடுநிலை வகித்து, நேருக்குநேர் பிழைகளைக் கூறி சரியான கருத்துக்களை வெளிப்படுத்தி சான்றோனாக திகழ்ந்தவர் அவர்.

அமரர் இன, மத, சாதி பேதங்களை முற்றாக வெறுத்தவர். சாதியின் பெயரால் அடக்கப்பட்ட, புறம் தள்ளப்பட்ட மக்களிற்காக குரல் கொடுத்தவர். சாதியின் பெயரால் மனிதம் மறைக்கப்பட்டு, ஆலய தரிசனம் மறுக்கப்பட்ட போது துடித்தெழுந்தவர். தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தில் அகிம்சைப் போராளியாக செயற்பட்டவர். மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசம், பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசம் போன்ற அகிம்சைப் போராட்டங்களில் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் ஊடாக பங்காற்றியவர்.

அமரர் S.T.N.நாகரட்ணம் அவர்களின் பின் இவ்இயக்கத்தில் தலைவராக தெரிவு செய்யப்பட்டு தம் தொண்டினைத் தொடர்ந்தவர்.

அமரர் பிறந்து வளர்ந்த மாயக்கை மண்ணில் பல ஸ்தாபனங்களை உருவாக்கினார். மாயக்கை ஐக்கிய சமூக சீர்திருத்தக் கழகம், சனசமூக நிலையம் போன்றவற்றின் ஸ்தாபகர் அமரர் அவர்களே. அமரர் R.பிரேமதாச அவர்கள் அமைச்சர் ஆக இருந்த காலத்தில் 15 வீட்டுத்திட்டத்தினையும் அதற்கான வீதி நிர்மாணத்தினையும் அமைத்து கொடுத்தபெருமை அமரர் அவர்களையே சாரும்.

அமரர் அவர்கள் எழுத்தாளனாக, கவிஞனாக, பேச்சாளனாக திகழ்ந்தவர். இவரின் ஆக்கங்கள் பல கவிதை வடிவிலும் கட்டுரை

வடிவிலும், வீரகேசரி, ஈழநாடு, தினபதி, உதயன் போன்ற பல பத்திரிகைளில் வெளிவந்துள்ளன. இவ்வாக்கங்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் மன அழுத்தங்களை வெளிக்கொணர்வதாக அமைந்தன. "சக்கராயுதன்" என்னும் புனைபெயரிலும் பல ஆக்கங்கள் வெளிவந்தன. அமரர் பட்டிமன்றம், கவியரங்கம் போன்ற பல மேடை நிகழ்வுகளில் பங்காளியாகவும், பல கட்டங்களில் நடுவராகவும் பணியாற்றி தனது பேச்சுத் திறனை வெளிக்கொணர்ந்தார்.

1960 களில் வடஅல்வை இளங்கோ சனசமூக நிலையத்தின் அங்கத்தவராக இருந்து தீபாவளி விளையாட்டுப் போட்டி முத்தமிழ் விழா போன்றவற்றில் தன் பங்களிப்பை செலுத்தியவர். 28.08.1982ம் ஆண்டு வடஅல்வை நக்கீரன் ச.ச.நிலையத்தினரால் நடாத்தப்பட்ட பாரதியார் விழாவில் பட்டிமன்ற நிகழ்வின் நடுவராக பங்காற்றியமை என் கண் முன் நிற்கின்றது. அமரர் அவர்கள் திறமை மிகு சோதிடராகவும், உள்ளூர் நில அளவையாளராகவும் செயற்பட்டவர். எம்மூரில் எதிர் நோக்கப்பட்ட காணி பிரச்சினைகளில் தலையிட்டு நிலத்தை அளந்து கொடுத்து பிரச்சினைகளிற்கு தீர்வு கொடுத்தவர்.

தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தில் இயங்கிய காலத்தில், ஒடுக்கப்பட்ட மக்களிற்கு பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் தேவை. பாராளுமன்றத்திற்கூடாக மக்களிடையே சமத்துவத்தைக் கொண்டுவரலாம் என தன் கருத்தை ஆணித்தரமாக எடுத்துக்கூறி முன்மொழிந்த போது, இவ்இயக்கம் அதனை ஏற்றுக் கொள்ளவில்லை. இதனால் மனமுடைந்து காணப்பட்டார். தன் கருத்தை செயலுருவப் படுத்துவதற்கு தமிழர் விடுதலைக் கூட்டணி பாராளுமன்ற உறுப்பினர் திரு.கதிரவேற்பிள்ளை அவர்களை இருமுறை அணுகினார். அமரத்துவமடைந்த பாராளுமன்ற உறுப்பினர் திரு.த.இராசலிங்கம் அவர்களின் பெயரை அறிமுகம் செய்தார். அமரரின் மனம் சுத்தமானதன் காரணமாக அவரின் முன்மொழிவு தமிழர் விடுதலைக் கூட்டணியினூடாக 1977ம் ஆண்டு செயல்வடிவம் பெற்றது. அமரர் அவர்களின் இறுதித் தசாப்தங்களில், அவர் தமிழ்த்தேசியக் கோட்பாட்டை ஆதரித்து அதற்காகப் போராடிய இளைஞர்களுடனும் தன் கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டார். எழுச்சிப் பாடல்களில் ஆர்வம் கொண்டிருந்தார். அமரரின் இறுதிக் காலத்தில் நோயுற்று இறைவனடி

எய்தும் போதும், அவரிடமிருந்த இயற்கையான இறுமாப்புக் குணம் அகலவில்லை.

இந்நூலானது, அமரர் அமரத்துவமடைந்து 41ம் நாள் நிகழ்வில் அவர் நினைவை எம்முள்ளங்களில் தொடர்ந்து இருத்தும் வகையில் வெளியிடப்படுகின்றது. இது போன்ற நினைவு நூல்கள் பேணிக் காப்பாற்றப்படவேண்டியவை. எம் பின் சந்ததியினரும் படித்து அறியக்கூடியவை.

இந்நூலில், அமரரின் மாணாக்கர்கள், சகபாடிகள் விசுவாசிகள் என பலரின் ஆக்கங்கள் வெளிவந்துள்ளன. அவற்றில் அமரர் பற்றிய இதுவரை வெளிவராத பல விடயங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

இந்நூலின் அறிமுக உரையை எழுத சந்தர்ப்பம் தந்த அமரரின் குடும்பத்தினர்க்கு என் நன்றிகளைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

"ஆண்டாண்டு தோறும் அழுது புரண்டாலும்
மாண்டார் வருவாரோ- மாநிலத்தில்
வேண்டாம் நமக்கு அது வழியே
என்று இட்டு உண்டு இரும்"

**வே.சிவயோகன்**
[இளைப்பாறிய நிறைவேற்றுப் பொறியியலாளர்]

"ஆயர்பாடி",
துன்னாலை மத்தி,
கரவெட்டி.

# ஒரு சமூகப் போராளியின் நினைவுகள்

கடந்த நூற்றாண்டில் அறுபதுகளின் ஆரம்பமானது சர்வதேச அளவிலும் இலங்கையிலும் மக்கள் எழுச்சிகளும் போராட்டங்களும் வெடித்தெழுந்து முன்செல்ல ஆரம்பித்த காலப்பகுதியாக காணப்பட்டது. அவற்றின் தாக்கம் வடபுலத்திலும் எதிரொலிக்கச் செய்தது. ஆண்டாண்டு காலமாகச் சாதிய தீண்டாமைக் கொடுமைகளால் அடக்கியொடுக்கப்பட்டு வந்த தாழ்த்தப்பட்ட மக்கள் (இவர்கள் மொத்த தமிழ் மக்கள் தொகையில் மூன்றில் ஒரு பங்கினர்) தமக்கு மறுக்கப்பட்டு வந்த ஜனநாயக சமத்துவ உரிமைகளுக்காகக் குரல் கொடுக்கவும் போராடவும் முன்வந்த காலப் பகுதியாகவும் இருந்தது. அதற்கு முன்பிருந்தே அதற்கான முன்முயற்சிகள் அவ்வப்போது முன்னெடுக்கப்பட்ட போதும் தாழ்த்தப்பட்ட மக்களின் சமத்துவத்திற்கான ஜனநாயக மனித உரிமைகளுக்கான கோரிக்கைகள் புறந்தள்ளப்பட்டே வந்தன.

இத்தகைய ஒரு சூழலிலேயே 1966 ஆம் ஆண்டு ஒக்டோபர் 21 எழுச்சி தோற்றுவிக்கப்பட்டது. அந்த எழுச்சியின் பதாகையும் முழக்கமும் "சாதி அமைப்புத் தகரட்டும், சமத்துவ நீதி ஓங்கட்டும்" என்பதாக அமைந்திருந்தது. அதனை அன்று முன்னெடுத்தது தோழர் நா. சண்முகதாசன் தலைமையிலான புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியாகும். அந்த எழுச்சியின் ஊடே எழுந்ததே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமாகும். கட்சியின் குறிப்பாக வடபிரதேசத் தலைமைத்துவ வழிகாட்டலின் கீழ் இவ் வெகுஜன இயக்கம் பல்வேறு சக்திகளையும் தனிநபர்களையும் உள்ளீர்த்து போராட்டங்களை நேரடியாக வழிநடத்தியது. அவ்வாறு வெகுஜன இயக்கத்தால் ஈர்க்கப்பட்டு அதன்

முன்னிலைத் தலைவர்களில் ஒருவராக செயற்பட்டு நின்றவர் ஆசிரியர் கதிர்காமு கிருஷ்ணப்பிள்ளை அவர்கள். அண்மையில் தனது 83 வது வயதில் இயற்கை எய்தினார். அவரது நினைவுகள் பல நிலைகளிலும் மீட்கப்படுவது இன்றைய சூழலில் அவசியமானதொன்றாகும். அத்துடன் அவருக்கான சமூக நலன் சார்ந்த அஞ்சலியுமாகும்.

ஆசிரியர் க. கிருஷ்ணபிள்ளையிடம் சமூக அக்கறை மிகுந்த ஆசிரிய பண்புகள் நிறைந்திருந்தன. அவை வடபுலத்து மேட்டுக்குடி சிந்தனை மிகுந்த ஆசிரியப் பண்புகளில் இருந்து முற்றிலும் வேறுபட்டவையாகக் காணப்பட்டன. அதற்குக் காரணம் அவர் ஒரு பின்தங்கிய சமூகச் சூழலில் இருந்து கடும் முயற்சிகளின் ஊடாகக் கல்வி கற்று ஒரு பயிற்றப்பட்ட ஆசிரியராகத் திகழ்ந்தமையே ஆகும். வடபுலத்து ஆசிரியர்கள் மத்தியில் பதவி அந்தஸ்து, பொருளீட்டல், சுய நலம், சாதிய சிந்தனை நடைமுறை, சமூக அக்கறையின்மை, சமத்துவம் பேணாமை போன்றவை சராசரியாகவும் பாரம்பரியமாகவும் இருந்து வந்தமை மறப்பதற்குரியன அல்ல. ஆனால் இதற்கு விதி விலக்காக இடதுசாரி முற்போக்கு ஜனநாயக சமத்துவ நிலைப்பாட்டை வகித்து பின்தங்கிய தாழ்த்தப்பட்ட மக்களிடையே கல்விக்கு சேவையாற்றிய ஆசிரியர்களின் தொகை கணிசமானதாகவும் இருந்தது. அதே வேளை தன் முன்னே விதிக்கப்பட்டிருந்த சாதிய தீண்டாமை தடைகளுக்கு உறுதியுடன் முகம் கொடுத்து அவற்றை மீறிய நிலையில் கல்விகற்று ஆசிரியர்களாகிக் கொண்டவர்களுக்கு அன்றைய சமூகச் சூழலில் ஒரு எதிர் நீச்சல் வரலாறே இருந்து வந்தது. அன்று தாழ்த்தப்பட்ட மக்கள் மத்தியில் இருந்து கல்வி கற்று ஆசிரியர்களாக வந்தோருக்கு இரண்டு விதமான தடைகளை தாண்ட வேண்டி இருந்தது. ஒன்று பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலை, இரண்டாவது சாதிய தீண்டாமை விதித்த சமூகத் தடை. இவை இரண்டையும் எதிர்கொண்டு ஆசிரியர்களாகிக் கொண்டவர்களில் க. கிருஸ்ணபிள்ளையும் ஒருவராக நின்றார். அதனாலேயே அவர் வெறும் பதவி பொருளீட்டல் என்பனவற்றுக்கு அப்பால் சமூக அக்கறையும் அநீதிகளுக்கு எதிரான வன்மமும் கொண்டவராகத் திகழ்ந்தார். சமூக அடக்கு முறைகளையும் அநீதிகளையும் சகித்துக்கொண்டு அவற்றை கண்டும் காணாதவர் போன்று நடந்து கொள்ளும் ஆசிரியராக அவர்

என்றுமே இருந்ததில்லை. தமிழ்ச் சமூகப் பரப்பில் தாண்டவமாடி நின்ற சாதியப் படிநிலையின் இறுக்கத்தையும் அதன் காரணமான தீண்டாமைக் கொடுமைகளையும் வெறும் வார்த்தைகளால் மட்டுமன்றி நடைமுறைச் செயற்பாட்டாலும் உறுதியான போராட்டங்களாலும் எதிர்ப்பதில் க. கிருஸ்ணபிள்ளை ஏனையோருடன் இணைந்து முன்னிலையாளனாக இருந்து வந்தார் என்பது தான் அவருக்குரிய சமூகத் தகுதியாகும்.

நான் ஆசிரியர் க. கிருஸ்ணபிள்ளையை 1968 ஆம் ஆண்டுக்கு முன் அறிந்திருக்கவில்லை. அவரை முதன் முதலில் யாழ் மாநகர சபை மண்டபத்தில் (அதன் அடிச்சுவடே இன்று இல்லை) நடை பெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பொதுக் கூட்டத்திலேயே கண்டேன். அவர் தேர்ச்சி பெற்ற ஆசிரியருக்கு உரிய கம்பீரத்துடனும் தாழ்த்தப்பட்ட மக்கள் மீதான சாதிய தீண்டாமையை எதிர்த்துக் குரல் கொடுக்கும் ஒருவராக நின்று உரையாற்றியதை முதன் முதலாக கேட்க முடிந்தது. அவரது தெளிவான உரத்த குரலும் சாதியத்தின் மீதான கண்டனக் கருத்துக்களும் அவற்றை எதிர்த்து நின்று போராடுவதன் அவசியத்தையும் அவரது பேச்சு எவ்வித தளம்பலும் இன்றி சுட்டி நின்றது. அவரது பேச்சு அக்கூட்டத்தில் திரண்டிருந்த மக்களில் குறிப்பாக இளைஞர்களிடத்தில் ஆர்வத்துடன் வரவேற்பைப் பெற்றது. அவர் பேச்சுடன் தன்னை மட்டுப்படுத்திக் கொண்டவராக இருக்கவில்லை என்பதை பின்னால் எழுந்த போராட்டங்களின் போது அவரது பங்குபற்றல்களும் பங்களிப்பும் எடுத்துக் காட்டின.

அவர் கே.டானியல், எஸ்.ரீ.என். நாகரட்ணம், எம். சின்னையா, கே.ஏ.சுப்பிரமணியம், வீ.ஏ. கந்தசாமி , சீனா. கணேசன், கே.தங்கவடிவேல், எம். குமாரசுவாமி, கு. சிவராஜா, என்.கே. ரகுநாதன் போன்றவர்களுடன் வெகுஜனப் போராட்ட காலங்களில் நெருக்கமாக செயற்பட்ட ஒருவராக திகழ்ந்தார். இக்காலப்பகுதியில் நான் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் முழு நேர அரசியல் ஊழியனாகி வாலிபர் இயக்கத்தின் வட பிரதேச இணைச் செயலாளர்களில் ஒருவனாக செயற்பட்டு வந்த சூழலில் எல்லா பகுதிகளிலும் தொடர்பு கொள்ளக் கூடிய நிலையில் இருந்தேன். அன்று வாலிபர் இயக்கம் வெகுஜன

போராட்டத்தில் முக்கிய சக்தியாக விளங்கியது. தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கமும் வாலிபர் இயக்கமும் இணைந்து போராட்டங்களில் பங்குகொண்டு வந்தது. அதன் காரணமாக எனக்கு வெகுஜன இயக்கத்தின் முன்னிலைத் தலைவர்களுடன் நெருங்கிப் பழகும் வாய்ப்புக் கிடைத்தது. அந்தவகையில் அவர்களில் ஒருவராக செயற்பட்டு வந்த ஆசிரியர் க. கிருஸ்ணபிள்ளையுடனும் மிக நெருக்கமாகச் செயற்பட்டவர்களில் நானும் ஒருவனாக இருந்தேன். அடிக்கடி அவரின் தொண்டைமானாறு வீட்டுக்குச் சென்று அவ்வப்போது வெகுஜன இயக்கத்தின் முடிவுகள், செயற்பாடுகள் பற்றி கலந்துரையாடவும் அவருடன் சேர்ந்து கூட்டங்களில் கலந்துரையாடல்களில் கலந்து கொள்ளவும் சந்தர்ப்பம் கிடைத்து. அவ்வேளைகளில் எல்லாம் அவரிடம் நிறைந்து நின்ற சமூக அக்கறை, மனிதநேயம், அடக்கு முறைக்கு எதிரான போராட்டக் குணாம்சம், நண்பர்களை அரவணைக்கும் பண்பு, மாற்றமும் விடுதலையும் பின்தங்கிய நமது மக்களுக்கு அவசியம் போன்ற கருத்துக்களை தாராளமாகக் காணமுடிந்தது. அவர் கூட்டங்களில் பேசும் போது ஆசிரியருக்கு உரிய பாங்கிலும் நகைச்சுவையாகவும் குறிப்பான சம்பவங்களை குறிப்பிட்டும் பேசுவார். முடிவில் இளைஞர்களை உற்சாகமூட்டி போராடுவதைத் தவிர வேறு வழியில்லை என்பதையும் உறுதிபடக் கூறுவார். அவர் பேசும் கூட்டங்களில் என்னையும் பேச அழைப்பதுடன் எனது பேச்சின் தொனியையும் வீச்சையும் மெச்சி மக்களை இளைஞர்களை எழுச்சியூட்டுவதற்கு இத்தகைய பேச்சுக்கள் அவசியம் எனக் கூறி உற்சாகப்படுத்துவார். அவ்வேளை அவர் நடுத்தர வயதுடைய ஆசிரியராக இருந்தார். நானோ மக்கள் மத்தியில் அரசியல் படிக்கும் மாணவ இளைஞனாக இருந்தேன். அவர் என்மீது கொண்டிருந்த அன்பும் மதிப்பும் வாஞ்சையும் வெறும் மேம்போக்கானவை அல்ல.
அவை சமூக அநீதிக்கு எதிரான போராட்டத்தில் ஏற்பட்ட இறுக்கமான போராட்ட உணர்வுடன் கூடிய உறவாகவும் இருந்தது.

அக்காலத்தில் வெகுஜன இயக்கம் முன்னெடுத்த ஆலயப் பிரவேசப் போராட்டங்களில் முக்கியத்துவமுடையனவாக இருந்தவை மட்டுவில் பன்றித் தலைச்சி அம்மன் கோவில் போராட்டமும் மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் போராட்டமும் ஆகும். இவை 1968 இல்

இடம்பெற்றன. பங்குனி மாதத்தில் நான்கு திங்களிலும் பன்றித் தலைச்சி அம்மன் கோவிலில் ஆலயப் பிரவேசப் போராட்டம் நடைபெற்றது. வெகுஜன இயக்கத் தலைவர் எஸ்.ரீ.என். நாகரட்ணம் செயலாளர்கள் எம். சின்னையா, சி. கணேசன் போன்றோருடன் முன்னணியில் க. கிருஸ்ணபிள்ளையும் நின்றார். ஆயிரம் பேர் வரையிலான மக்கள் ஆலய பிரவேசத்திற்காக திரண்டிருந்தனர். எந்தவொரு சந்தர்ப்பத்திலும் போராட்டம் பின்வாங்கவோ அல்லது விட்டுக் கொடுப்புக்கோ போகவில்லை. அதற்குக் காரணம் வெகுஜன இயக்கத் தலைமையின் உறுதியான நிலைப்பாடாகும். அதில் க. கிருஸ்ணபிள்ளை ஆசிரியரின் பங்கு குறிப்பிடத்தக்கதாகும்.

அவ்வாறே மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவில் ஆலயப்பிரவேசப் போராட்டத்திலும் அவரது உறுதி மிக்க பங்களிப்பு என்றும் நினைவு கூரத்தக்கதாகும். மாவிட்டபுரம் ஆலய பிரவேசப் போராட்டம் 25 நாட்கள் இடம்பெற்றன. ஒவ்வொரு நாட்களும் ஒவ்வொரு பிரதேசம் பொறுப்பேற்று மக்களை அணித்திரட்டி இடையறாத போராட்டமாக வெகுஜன இயக்கம் முன்னெடுத்தது. நாளாந்தப் போராட்டம் முன்னேறி கடைசி வார நாட்களில் உச்சத்தை அடைந்தது. அந்த நாட்களில் எஸ்.ரீ என்.நாகரட்ணத்தின் தலைமையிலான வெகுஜன இயக்க தலைமை மிகவும் துணிச்சலான தலைமையாகச் செயலாற்றியது. ஒருபுறம் பொலிசார் மறுபுறம் சாதி வெறியர்கள் இவர்கள் மத்தியில் ஆயிரத்திற்கும் மேற்பட்ட மக்களின் அன்றைய வெகுஜன எழுச்சியினதும் போராட்ட வேகத்தினதும் காட்சிகள் இன்றும் மனத்திரையில் தெளிவாக இருக்கும் அளவிற்கு பதிவுப் பெற்றுக்கொண்டது. அன்றைய வெகுஜன இயக்கத் தலைவர்களிடையே ஆசிரியர் க.கிருஸ்ணபிள்ளை மிகுந்த உறுதிப்பாட்டுடனும் நம்பிக்கையுடனும் நின்றமை இன்றும் பசுமைக்குரிய நினைவாகிறது.

இவ்விடத்தில் ஒரு விடயம் சுட்டிக்காட்டப்படுவது அவசியம். ஆசிரியர் க.கிருஸ்ணபிள்ளை தமிழ்த் தேசியத்தைக் கடைப்பிடித்த தமிழரசு கட்சியின் தடித்த ஆதரவாளனாக இருந்து வந்தவர். அது பற்றி ஒரு போதும் எமக்கு எடுத்துக் கூறியதும் கிடையாது. அப்படி இருந்தும்

தமிழரசுக் கட்சியால் சாதியத்தையும் தீண்டாமையையும் எதிர்த்து நிற்க முடியவில்லையே என்ற ஆதங்கம் அவரிடம் உள்ளூர இருந்து வந்தது. அதனாலேயே அவரால் புரட்சிகர கம்யூனிஸ்ட் கட்சியின் சாதிய அமைப்பிற்கு எதிரான போராட்டத்தை பரந்துப்பட்ட வெகுஜன போராட்டமாக முன்னெடுத்த போது தமிழரசுக் கட்சிக்காரன் என்ற அடையாளத்தை முதன்மைப்படுத்தாது எவ்வித தயக்கமும் இன்றி தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் இணைந்து அதன் முன்னிலைத் தலைவர்களில் ஒருவராகவும் நின்றார். இவ்வாறான ஒரு நிலைப்பாட்டை அன்றைய சூழலில் தாழ்த்தப்பட்ட மக்களிடையே ஆசிரியர்களாகி தமிழரசுக் கட்சியை ஆதரித்த பல ஆசிரியர்களால் எடுக்க முடியவில்லை. காரணம் அவர்களது சமூக நோக்கு ஆசிரியர் கிருஸ்ணபிள்ளையிடம் இருந்த சாதிய ஒடுக்குமுறைக்கு எதிரான சமூக நோக்கு போன்று அமைந்திருக்கவில்லை என்பதுதான். அதனாலேயே அவர் தான் கொண்டிருந்த தமிழ்த் தேசிய அரசியலை கடந்து கம்யூனிஸ்ட் கட்சி காட்டிய போராட்டப் பாதையில் எவ்வித மனத்தடையும் இன்றி இணைந்து முன்னிலையில் இருந்து செயற்பட்டார். அதிலும் குறிப்பிடக்கூடிய ஒரு விடயம் ஒன்று, 1949 இல் தமிழரசு கட்சியை ஆரம்பிப்பதற்கான முதற் கூட்டம் எந்த மாவிட்டபுரம் கந்தசுவாமி கோவிலில் நடந்ததோ அதே ஆலயத்தில் 19 வருடங்களுக்கு பின் தாழ்த்தப்பட்ட தமிழ் மக்கள் உள்ளே சமத்துவமாக சென்று வழிபடுவதற்கு போராட வேண்டி ஏற்பட்டது. அந்த போராட்டத்தில் தமிழரசுக் கட்சியை வளர்க்க முன்னின்ற ஆசிரியர் க. கிருஸ்ணபிள்ளை வெகுஜன போராட்டக்காரராக முன்னின்றார். ஆனால் எஸ்.ஜே.வி. செல்வநாயகம் தலைமையிலான தமிழரசுக் கட்சி மாவிட்டபுர ஆலயப் பிரவேசம் பற்றி ஒரு வசனத்திலாவது ஆதரவு தெரிவிக்கவில்லை என்பது கண்டு கடும் கோபம் கொண்டவராகவும் அவர் இருந்தார். அதனை எங்கள் மத்தியில் எவ்வித தயக்கமும் இன்றி எடுத்துரைக்கவும் செய்தார்.

இவ்வாறு அறுபதுகளில் இடம்பெற்ற சாதிய தீண்டாமைக்கு எதிரான வெகுஜனப் போராட்டங்கள் அன்றுவரை தாழ்த்தப்பட்ட மக்களுக்கு திறக்க மறுத்த ஆலயங்களினதும், தேநீர் கடைகளினதும், கதவுகளை திறக்க வைத்தது. அம்மக்களுக்கு ஒரு சமூக அந்தஸ்தையும் பெற்றுக்

கொடுத்தது. அதற்காக தமது உயிர்களை தியாகம் செய்தோர் ஏனைய இழப்புகளை சந்தித்தவர்கள், அர்ப்பணிப்புகளை செய்தவர்கள் எல்லோரும் நம் நினைவிற்கும் உயர்ந்த கௌரவத்திற்கும் உரியவர்களாவர். அந்த வரிசையில் ஆசிரியர் க. கிருஸ்ணபிள்ளையும் ஒருவராக நம் நினைவுகளில் நிலைத்து நிற்கத் தக்கவராகி விட்டார்.

என்னைப் பொறுத்தவரையில் கடந்த சுமார் நாற்பது வருட காலத்திலான அவரது உறவு நீடித்து நிலைத்து வந்த ஒன்றாகும். அவர் யாழ்ப்பாணம் செல்லும் போதெல்லாம் எனது வீட்டிற்கு வந்து சுகநலம் குடும்ப நிலை விசாரித்து சமூக விடயங்கள் மற்றும் அரசியல் பற்றி அளவளாவிச் செல்வார். அதே போன்று வடமராட்சி வரும் போதெல்லாம் அவரைச் சந்தித்து செல்வது எனது வழக்கம். கடைசியாக அவரை சந்தித்த வேளை அவரின் நினைவுகள் மங்கிக்கொண்டிருப்பதனை அவதானிக்க முடிந்தது. இருந்தும் பெயர் கூறி அறிமுகப்படுத்தியதும் உற்சாகப்பட்டு தம்பி செந்தில் என அவர் அழைத்த அந்தக் குரலிலும் கனிவிலும் நாற்பது வருடங்களுக்கு முந்திய நினைவுகள் கண்முன்னே வந்து நின்றன. அந்தளவிற்கு அவருடனான உறவு நெருக்கமானதாகவே இருந்து வந்தது. பின்தங்கிய நிலையில் சாதிய ஒடுக்குமுறையில் அமுக்கப்பட்டு வாழ்ந்து வந்த மக்களின் அடிமை விலங்கொடிக்க தமது ஆற்றல், ஆளுமை, துணிவு போன்றவற்றை முன்னிறுத்திச் செயற்பட்டு வந்தவர்களில் ஆசிரியர் க. கிருஸ்ணபிள்ளை ஒருவராக வாழ்ந்து தனக்கும் தனது குடும்பத்திற்கும் மட்டுமன்றி தான் வாழ்ந்த சமூகத்திற்கும் பெருமை சேர்த்தார் என்பது போற்றுதலுக்குரியதாகும். அத்தகைய ஒருவரின் சமூக தளத்திலான வாழ்வனுபவங்கள் நமது இளந்தலைமுறையினருக்கு கற்றுக் கொள்வதற்குப் பல பாடங்களை விட்டுச் சென்றுள்ளன என்றே கூறமுடியும். இச்சிறு கட்டுரை மூலம் ஆசிரியர் க.கிருஸ்ணபிள்ளைக்குரிய அஞ்சலியை எனது சார்பிலும் கட்சியின் சார்பிலும் செலுத்துகின்றேன்.

கொழும்பு **சி.கா. செந்திவேல்**

20.08.2011 புதிய ஜனநாயக மாக்சிச - லெனினிசக் கட்சி

# சமூக மேம்பாட்டுச் சிந்தனையாளர்

ஆசிரியர்கள் என்போர் தான் வாழும் சூழலில் பல்வேறு பாத்திரங்களை ஏற்பவராகவும் தம்மை இசைவாக்கம் செய்யும் சமூகத்திறன் நிறைந்தவராகவும் இருத்தல் வேண்டுமென எதிர்பார்க்கப்படுகிறது. தான் வாழ்ந்த சமூகத்தில் பொறுப்புக்களையும், கடமைகளையும் எவ்வாறு நிறைவு செய்து கொள்கின்றார் என்பதிலிருந்தே அவர் குறித்த சமூகப்பெறுமானம் இனங் காணப்படுகின்றது.

அந்த வகையில் அமரர் தொண்டைமானாறு க.கிருஸ்ணபிள்ளை ஆசிரியர் அவர்கள் குடும்பத்தலைவராகவும், நல்லாசானாகவும், பண்பாட்டுக்காவலராகவும், தலைமை தாங்குபவராகவும், சமூக விடுதலை விரும்பியாகவும், ஆன்மீகநெறியாளராகவும் எனப் பலதரப்பட்ட பாத்திரங்களை சமூகத்தில் வகித்தவர் என்ற பெருமைக்குரியவர். இப்பாத்திரங்கள் வழி தனது பொறுப்புக்களையும் கடமைகளையும் நிறைவு செய்தவர் என்ற வகையில் மதிப்புடன் நோக்கப்பட வேண்டியவர்.

அன்று சமூகத்தில் நிலவிய சாதிய இறுக்கம் காரணமாக எமது சமூகத்தவர்களுக்கு உயர் சமூகத்தவர் கல்வி பயிலும் பாடசாலைகளில் கல்வி மறுக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் எம்மவர்க்குக் களமமைத்துக் கொடுத்தவர்கள் கிறிஸ்தவ மிசனரிமாரேயாவர். மிசனரிகளின் பாடசாலைகளில் கூட உயர்

சமூகப்பிள்ளைகளுடன் சிறு எண்ணிக்கையான எம்மவர்களே கல்வி பயின்றனர். அவர்களும் உயர் சமூகத்தவர்களுடன் சமமாக ஆசனத்திலிருந்து கல்வி பயில முடியாத நிலைமை அன்றிருந்தது. அந்நிலைமை ஒழிக்கப்படல் வேண்டுமென எழுந்த கோரிக்கையின் பேரில் 1930 ல் சமஆசனம், சமபோசனம் சட்டமாகக் கொண்டுவரப்பட்டது. இதனை ஏற்றுக்கொள்ளாத உயர் சமூகத்தவர்கள் தமது பிள்ளைகளை பாடசாலைகளிலிருந்து விலக்கிக் கொண்டதுடன் பாடசாலைகளுக்குத் தீ வைத்த சம்பவங்களும் இடம்பெற்றதுண்டு. பாடசாலையில் மாணவர் தொகை வீழ்ச்சி கண்டதால் பாடசாலைக்கு மூடுவிழா நடந்ததுமுண்டு.

தவிர, சைவத்தையும், தமிழையும் வளர்க்கப் புறப்பட்ட மீட்பர்களாக இனங்காட்டப்படும் நாவலர், சேர்.பொன் இராமநாதன் போன்றோர் கூட தமது பாடசாலைகளில் எம்மவர்க்கு அனுமதி மறுத்து தடைக் கற்களாகவே இருந்தனர் என்பது வரலாறு. அன்று இவர்களால் தாபிக்கப்பட்ட இந்து தமிழ்ப் பாடசாலைகள் வழங்க மறுத்த கல்வியை கிறிஸ்தவ மிசனரிப் பாடசாலைகளே ஒரளவுக்கேனும் வழங்கின என்பது உண்மையாகும்.

இத்தகைய சூழ் நிலையின் நிர்ப்பந்தங்கள் புறக்கணிப்புக்களுக்கு மத்தியிலேயே அமரர் க.கிருக்ஷ்ணபிள்ளை ஆசிரியரும் கல்விகற்க வேண்டியிருந்தது. ஒரு கட்டத்தில் கல்வியை இடைநிறுத்திவிட்டு தன்னார்வம் காரணமாக எதிர் நீச்சலடித்து முன்னேறி பின்னாளில் ஆசிரியராக மிளிர்ந்தவர் என்பதும் குறிப்பிட வேண்டிய விடயமாகும்.

இத்தகைய மேலாண்மைச் சமூகத்தின் கல்வி மறுப்பிற்கும் கல்வியை அவாவி நின்ற அடிநிலை மக்களின் அறிவு தேடும் வேட்கைக்கும் இடையில் எழுந்த எதிர் முரண் நிலைப்பட்ட ஒரு கடினமான சூழலில் அமரர் கல்வியை தேடிப்பெற்று ஆசிரியராக மேற்கிளம்பியது சாதனைக்குரியதாகும்.

அல்வாய் பிரதேசத்தில் எமது சமூகத்தின் முதலாவது ஆசிரியர் பரம்பரையினராக கவிஞர்.மு.செல்லையா, க.முருகேசு, ஆ.ம.செல்லத்துரை, சைவப்புலவர் சி.வல்லிபுரம் என்போரைச் சுட்டுவது வழக்கம். இவர்களது வரிசையில் இரண்டாவது ஆசிரிய பரம்பரையைச் சேர்ந்தவர் அமரர்.க.கிருக்ஷ்ணபிள்ளை ஆசிரியர் ஆவார். அல்வாய் வடக்கு ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் நியமனம் பெற்ற முதலாவது ஆசிரியர் என்பதும் குறிப்பிடத்தக்கது. அன்று எம்மால் மாயக்கை கிருஸ்ணபிள்ளை வாத்தியார் என அன்பாக அழைக்கப்பட்டு பிரபலமானவராகத் திகழ்ந்தார்.

நெடிதுயர்ந்த கம்பீரமான தோற்றத்தாலும் தீட்சண்யமிக்க பார்வையாலும் அர்த்தம் பொதிந்த பேச்சாலும் எவரையும் தன்பால் ஈர்த்துக்கொண்ட ஆளுமையாக விளங்கினார். எமது பள்ளிப் பருவத்தில் தமிழ், சமயம், கணிதம் ஆகிய பாடங்களை வினைத்திறனுடன் கற்பித்தவர். தமிழில் நல்ல கதைகள், பழமொழிகள், சிலேடை வாக்கியங்களைக் கூறி கண்டிப்புடன் கற்பிப்பது அவரது பாணியாகும். பாடசாலைக்கு வராத பிள்ளைகளின் வீடுதேடிச் சென்று பெற்றோர்களைச் சந்தித்து அவர்களிடம் விழிப்புணர்வினை ஏற்படுத்தி நாம் கல்வியைத் தொடர்வதற்கு வழிகாட்டியாக இருந்தவர். எமது ஆசான் அமரர். க.கிருக்ஷ்ணபிள்ளை ஆசிரியர் தனது மாணவர்களை காணநேர்கையில் மிகுந்த அக்கறையுடனும் வாஞ்சையுடனும் விசாரித்து தனது கருத்துக்களையும் ஆலோசனைகளையும் கூறி உற்சாகமூட்டும் பண்புள்ளவர். அத்துடன் தனது மனதில் பட்டத்தை ஒழிவுமறைவின்றி நேரிலேயே சுட்டிக்காட்டி எம்மை நெறிப்படுத்தும் தன்மையுள்ளவர். அமரர் க.கிருக்ஷ்ணபிள்ளை ஆசிரியர் சமூகத்தின் விடுதலை நோக்கிய பயணத்தில் தனது சகபாடிகளிலிருந்து மாறுபட்ட ஒரு தீவிர நிலைப்பாட்டினையே கொண்டிருந்தார்.

இவரால் பெரிதும் மதிக்கப்பட்ட க.முருகேசு கவிஞர் மு.செல்லையா ஆ.ம.செல்லத்துரை ஆகியோர் சைவ

ஆசாரசீலர்களாகவும் கதர் வேட்டியணிந்த காந்தியவாதிகளாகவும் தம்மைச் சமூகத்தில் நிலைநிறுத்திக் கொள்ள அவர்களது பாசறையில் வளர்ந்த அமரர் முற்போக்கான ஒரு நிலைப்பாட்டினை எடுத்தது சமூகத்தின் மேலிருந்த பற்றுறுதியும் விடுதலை வேட்கையுமே ஆகும்.

ஆற்றல் மிகுகரத்தில் ஆயுதம் ஏந்துவதே தீண்டாமையை ஒழிப்பதற்குச் சரியான வழி என்பதில் அசையாத நம்பிக்கை கொண்டு உரிமைப் போராட்டத்தை வீறுடன் முன்னெடுத்துச் சென்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தில் தன்னை இணைத்து சிறிது காலத்தில் அதன் தலைமைப் பொறுப்பினையும் ஏற்றார்.

இவ்வியக்கம் முன்னெடுத்த சுன்னாகம் எழுச்சி ஊர்வலம், மாவிட்டபுரம் கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேசம், மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவில் ஆலயப் பிரவேசம், நிற்சாமப் போராட்டம் என்பவை முக்கியமானவை. அந்த வகையில் அமரர் தொண்டைமானாறு க.கிருக்ஷ்ணபிள்ளை ஆசிரியர் ஒடுக்கப்பட்ட மக்களது போராட்ட வரலாற்றில் மறக்கப்பட முடியாதவர்.

அமரரின் ஆளுமையின் இன்னொரு பரிமாணம் தமிழில் யாப்பிலக்கணத்தை மீறாத மரபுக்கவிதைகளை யாக்கும் திறனுள்ளவராக இருந்தார் என்பதாகும். தனது மன ஆவேசங்களை, இதயக்குமுறல்களை, மனச்சாட்சியின் உண்மைகளை வெளிப்படுத்த கவிதையை ஊடகமாகப் பயன்படுத்தினார். எழுத்தாளர் கே. டானியல், க. சின்னத்தம்பி ஆகியோரால் வெளியிடப்பட்ட "மக்கள் இலக்கியம்" என்ற சஞ்சிகையில் சமூகப்பிரக்ஞையுள்ள கவிதைகளையும், கட்டுரைகளையும் எழுதியுள்ளார் என்பதும் குறிப்பிடப்படவேண்டியது.

அமரர் தனது குடும்பவாழ்விலும் தனது பிள்ளைகளுக்கு நல்ல கல்வியை வழங்கி அவர்கள் உயர்நிலையடைய வழிகாட்டியாக இருந்தார். அத்துடன் அவர்களது எதிர்கால வாழ்வுக்கு

ஆதாரமாக ஆசிரியர் பதவிகளைத் தேடிக்கொடுத்து மனநிறைவுடன் வாழ்ந்து சென்றார்.

அமரரின் பன்முகப்பாங்கான வாழ்வின் சாராம்சங்களை நோக்கின் அவர் குறித்த பல தரிசனங்கள் எம் முன்னே விரிந்து கிடக்கின்றன.

- கல்வியில் புறக்கணிப்புக்குள்ளான சமூகத்தில் எதிர் நீச்சலடித்து முன்னேறியமை.
- சமூகவிடுதலைக்கு கல்வியின் அவசியத்தை அடுத்த தலைமுறைக்கு உணர்த்தியமை.
- சமூகத்தின் விடுதலைக்குச் சாத்தியமான வழியைத் தேர்ந்தெடுத்தமை.
- சமய, பண்பாட்டு, கலாசார விழுமியங்களின் பால் ஆசார நிலை நின்று அதன் வழி வாழ்ந்தமை.
- தான் வாழ்ந்த இடங்களில் "வாத்தியார்" என்ற பதத்துக்கு குறியீடாகத் திகழ்ந்தமை.

மொத்தத்தில் அமரர் தொண்டைமானாறு க.கிருஸ்ணபிள்ளை ஆசிரியரின் வாழ்வும், பணியும் எமக்கு முன்னுதாரணமானவை. நன்றியுடன் நினைவு கூரப்பட வேண்டியவை.

**மு. இராசநாயகம்**
[அநாதரட்சகன்]
உதவிக்கல்விப் பணிப்பாளர்
யாழ்ப்பாணம்

## மக்கள் தோழன் -

## அமரர் கதிர்காமு கிருஸ்ணபிள்ளை

அமரர் கதிர்காமு கிருஸ்ணபிள்ளை அவர்களை நான் மிக நீண்ட காலமாகவே அறிவேன். எனது இளமைக்காலப் பகுதியில் அவரோடு நெருங்கிப் பழகியிருக்கிறேன்

கல்விச் சமூகத்தில் அவர் சற்று வித்தியாசமானவர். எளிமையான குணமும் இனிமையாகப் பழகும் பண்பும் கொண்டவர். அகத்தில் தூய்மையைப் பேணுவது போலவே புறத்தோற்றத்திலும் தூயவராக விளங்கினார். எப்போதும் தோய்த்துலர்ந்த பால்நிறம் குன்றாத வேட்டியையும் நஷனலையும் அணிந்திருப்பார். வெயில்காலத்தில் அவரது சால்வை தலைக் கவசமாக அமைந்துவிடும். ஒரு சைக்கிளை தனது போக்குவரத்துச் சாதனமாக அவர் பயன்படுத்தி வந்தார். காணும்போதெல்லாம் உதட்டிலே கள்ளமற்ற சிரிப்புடன் மலர்ந்திருப்பார்.

பழகுவதற்கு எளிமையானவராக இருந்தபோதிலும் தான் கொண்ட கொள்கையிலே மிக இறுக்கமானவர். சமூகம் பற்றிய விரிவான விளக்கம் கொண்டவர். எந்தச் சந்தர்ப்பத்திலும் தனது கொள்கையை விட்டுக்கொடுக்காதவர், விலைபோகாதவர், ஆழமான அரசியலறிவு பெற்றிருந்தவர். மக்களை மையமாகக் கொண்ட அரசியலில் அவர் ஆழ்ந்த பற்றுறுதி கொண்டிருந்தார். மக்களை மையமாகக்கொண்ட அரசியலாளர்களையும் எழுத்தாளர்களையும் அவர் நண்பர்களாகக் கொண்டிருந்தார். அதனால் பிரதேசங்கள் மற்றும் கிராமங்களிடையே இருந்த தூரம் அவருக்குத் தொலைதூரமாகத் தெரிந்ததில்லை. ஒவ்வொரு

கிராமத்தையும் ஒவ்வொரு நாளும் அவர் தரிசித்து வந்தார். கிராம மக்களுடன் இறுக்கமான பிணைப்பினை ஏற்படுத்தியிருந்தார். அவருக்கு நண்பர்கள் இல்லாத கிராமங்களே இல்லையெனலாம். மாயக்கையிலிருந்து தொண்டைமானாறு வரை அவரது சைக்கிள் நல்லெண்ணத் தூதுசெல்லும். சில வேளைகளில் அத்தூது யாழ்ப்பாணக் குடாநாடு முழுவதும் விரிந்திருக்கும். கிராமங்களிலுள்ள ஒவ்வொரு குடும்பம் மற்றும் தனிநபர்களின் இயல்புகள் பற்றியும் அறிந்து வைத்திருந்தார். பலவீனமானவர்களுக்கு உற்ற நண்பனாக விளங்கினார். இளைஞர்களை இனங்கண்டு ஊக்கமளித்தார்.

07. 08. 2011 ஆம் திகதியன்று பேராசிரியர் மார்க்கண்டு கருணாநிதி அவர்களைக் கௌரவிக்குமுகமாக அல்வாய் வடக்கு சிறீலங்கா வித்தியாசாலை பழைய மாணவர்களும் நலன்விரும்பிகளும் பெருவிழா ஒன்றை எடுத்தனர். அந்த விழாவிலே ஏற்புரை நிகழ்த்திய பேராசிரியர் மா. கருணாநிதி அமரர் கிருஸ்ணபிள்ளை அவர்களை நினைவு கூர்ந்தார். தமது கல்வி முன்னேற்றத்திற்கு கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் பெரும் பக்கத்துணையாக விளங்கியது பற்றிக் குறிப்பிட்டார். பேராசிரியர் கருணாநிதிக்கு மட்டுமல்ல எம்போன்ற வறிய குடும்பத்தில் பிறந்த இளைஞர்களின் கல்வி முன்னேற்றத்திற்கு அவர் சிறந்த ஊக்கியாகத் தொழிற்பட்டார்.

1976 ஆம் ஆண்டிலிருந்து 1980 ஆம் ஆண்டுவரை யாழ்ப்பாணம் கச்சேரியில் பணியாற்றி வந்தேன். அக்காலப்பகுதியில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் எம். ஏ. பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்காக கொக்குவில் ஆத்திசூடி வீதியிலுள்ள நவாலியூர் நா. செல்லத்துரை அவர்களின் வீட்டில் தங்கியிருந்தேன். தினமும் வேலை முடிந்து கொக்குவிலுக்குத் திரும்புகையில் மக்கள் எழுத்தாளர் அமரர் கே. டானியலை அவரது தொழிலகத்தில் சந்திக்கும் வாய்ப்புப் பெற்றேன்.

எனது எம். ஏ. பட்டத்திற்கான ஆய்வில் டானியலின் எழுத்துக்களே பிரதான இடம்பெற்றன. தனது நோய்களுக்கு சிகிச்சை பெறுவதற்காக டானியல் நண்பர் இளங்கோவனுடன் தமிழகம் சென்றிருந்தார். அங்கு அவர் எதிர்பாராத வகையில் காலமானார். அதனால் எனது ஆய்வுப் பணிகளும் தடைப்பட்டன. டானியலைப்பற்றி மிகவிரிவாக

அறிந்துவைத்திருப்பவர் அமரர் கிருஸ்ணபிள்ளை என்ற தகவல் எனக்குக் கிடைத்தது. இதனால் அவருடன் நெருங்கிய தொடர்புகளை உருவாக்கினேன். டானியலைப் பற்றி நாட்கணக்காக கிருக்ஷ்ணபிள்ளை ஆசிரியர் என்னோடு உரையாடுவார். அமரரின் மகன் நவநீதனும் அவரது சகோதரிகளும் சிறுவர்களாக இருந்தபோதிலும் எங்கள் உரையாடல்களை அவதானித்து வந்துள்ளனர். டானியலைப்பற்றி ஒவ்வொரு விடயத்தையும் அவர் அறிந்து வைத்திருந்தமை கண்டு நான் ஆச்சரியப்பட்டேன். (டானியல்பற்றி திரு. தங்கவடிவேல் ஆசிரியரும் பல தகவல்களை எனக்கு வழங்கியுள்ளார்).

அமரத்துவமடைந்த டானியலின் பிரதியீடாகவே நான் கிருஷ்ணபிள்ளை ஆசிரியரைக் கருதுகிறேன். கொள்கையாலும் செயலாலும் மிக நெருக்கமாக இவர்கள் இருவரும் இணைந்திருந்தனர். இருவருமே மக்களின் தோழர்களாக விளங்கியுள்ளனர். இவர்கள் சமூதாய அடக்கு முறைக்கெதிராக போர்க்குணம் கொண்டிருந்தனர்.

எமது கிராமங்கள் தனித்தனித் துருவங்களாக மாறிவிட்டன. அவற்றினிடையே ஊடுறவாகத் திகழும் மனோபலமும் மனோதர்மமும் எம்மிடையே அற்றுப்போய்விட்டன. இன்று எம் மத்தியில் சமூகம் பற்றிச் சிந்திப்பவர்கள் எவருமிலர். மாறாக சமூகத்தை விற்றுப் பிழைப்பதற்கு பலர இருக்கின்றனர் அமரர் டானியல் விட்டுச் சென்ற வெற்றிடம் நிரந்தர வெற்றிடமாகவே மாறிவிட்டது. அதுபோல அமரர் கிருஸ்ணபிள்ளை அவர்களின் இழப்பும் ஈடுசெய்யமுடியாத ஒரு பேரிழப்பேயாகும்.

**திரு. சி. வன்னியகுலம்**

முன்னை நாள் இலங்கை ரூபவாஹினி

கூட்டுத்தாபனப் பணிப்பாளர்,

நிபுணத்துவ ஆலோசகர் NEHRP திட்டம்

## எண்ணித் துணியும் போராளி

அமரர் ஆகிவிட்ட எங்கள் நல்லாசான் திரு க.கிருஸ்ணபிள்ளை மாஸ்ரரின் நினைவு மலர் மாலையில் ஒரு பூவாக இதனை இணைக்கிறேன். எங்கள் தொடர்பு 50 வருடங்களுக்கு முன் தொடங்கியது. மிக நெருங்கியும் இடையிடையே விலகியும் வளர்ந்தது. இறுதியில் அப்பிரிவு நிலைபெற்றதாகிவிட்டது. மாஸ்ரரை நான் சந்தித்தது திருநெல்வேலி சைவாசிரிய கலாசாலையில்தான்.

பயிற்சி மாணவ, மாணவிகள் அவரை ஒரு உயர்ந்த ஸ்தானத்தில் வைத்து மகிழ்ந்தனர். பலவிதமான ஆலோசனைகளை அவரிடம் கேட்டுப் பெற்றுக் கொண்டனர். கணித பாடத்தில் மிகுந்த சிரத்தை உடையவர் என்பது எல்லோருக்கும் அங்கே தெரிந்திருந்தது. அத்துடன் சோதிடக் கலையிலும் தேர்ச்சி பெற்றிருந்தார். இதனால் ஆலோசனை கேட்க அங்கிருந்த ஆசிரியர்கள் அவரை அடிக்கடி விடுதியில் சந்தித்த வண்ணம் இருந்தனர். இரவில் வெகுநேரம் கணிதம் சோதிடம் தொடர்பான சிக்கல்களை ஆராய்வதில் கழித்தார்.

அரசியலில் அவர் தமிழரசுக் கட்சியின் தீராத ஆதரவாளராகவே இருந்தார். சாதி, சமய, சமூக, இனஅடக்கு முறைகளை ஒழித்துக் கட்டவேண்டும் என்பதில் திடசித்தம் மிகுந்தவராக இருந்தார். குறிக்கோளில் திடமாக இருப்பவர்களே வெற்றியைப் பெற முடியும் என நம்பிய அவர் "அச்சமும் பயமும் ஆபத்தையே வரவழைக்கும்" என்பார்.

சென்றர் பி.நாகலிங்கம் ஒறேற்றர் சுப்ரமணியம், கண்டி பேரின்பநாயகம், நேசையா, தர்மகுலசிங்கம் ஜெயம், பொன் கந்தையா போன்ற மனிதாபிமானிகளை கௌரவிப்பதில் முன்னின்றார். பொறுமை பலருக்கு கசப்பாகவே தெரிகிறது. ஆனால் அதுவே மனிதருக்கு எல்லையற்ற வீரத்தைத் தருகிறது என நம்பினார். சோம்பல் அற்றவனே எதனையும் இலகுவில் சாதிக்கின்றான் என அடிக்கடி கூறுவார். இலங்கையில் தீண்டாமைக்கு எதிரான சமூக விடுதலைப் போராட்டங்களில் தலைமை தாங்கும் பொறுப்பை அவர் ஏற்றுக்கொண்டார். இப்போராட்டத்தில் எஸ்.ரி.என் நாகரத்தினம், கே.டானியல், மான்முத்தையா, எம்.சீ.எம் இக்பால், கே.ஏ சுப்பிரமணியம் போன்ற தலைமைப் போராளிகளோடு இணைந்து நின்று போராடினார். நன்றாகப் பேசுவதை விட நன்றாகக் கருமமாற்றுவதே மேலானது என்பதில் உறுதியாக இருந்தார்.

புலோலியூர் பேரறிஞர் கந்தமுருகேசனாரின் மாணாக்கரான கே.கிருஸ்ணபிள்ளை ஆசிரியர் ஓர் ஆற்றல் மிகுந்த கவிஞராகவும் திகழ்ந்தார். எனது தமையனாரான இலங்கை வானொலி புகழ் கே.குழந்தைவேல் 1964ல் மறைந்தபோது ஆசிரியர் அவர்கள் எழுதிய இரங்கற்பா ஒன்று அல்வாயூர்க் கவிஞர் மு.செல்லையா அவர்களால் பாராட்டப்பட்டது. அந்தப்பாடலை இங்கே தருகின்றோம்.

திசையற்ற வானில் ஊரும் திங்கள்தான் நிலைக்கு மட்டும்

அசைகின்ற திரைகள் பொங்கும் ஆழிதான் உள்ள மட்டும்

விசையினால் பொருளை ஈர்க்கும் மேதினி வாழு மட்டும்

இசை மன்னா உனது நாமம் எங்குமே உலவும் நன்றே"

பாராட்டையும் புகழுரைகளையும் விரும்பாத தலைவராக விளங்கிய மாஸ்ரர் நெருக்கடியான வேளைகளில் எடுக்கும் நடவடிக்கைகளுக்குப் பொறுப்பானவர்களை "நெருப்புக் கொள்ளியால் தலை சொறியாதீர்கள்" என எச்சரிப்பதோடு "போருக்கு நின்றிடும் போதும்- மனம் பொங்கலில்லாத அமைதியைக் கடைப்பிடிக்க வேண்டும்" எனப் போதனையும் பண்ணுவார். அடக்குமுறைக்கு எதிரான உரிமைப் போராட்டத்தில் மாற்று யோசனைகளுக்கு இடமளிக்கப் பின்னிற்காதவராகவே எப்போதும் செயலாற்றினார். சமுக அடக்குமுறைகளுக்கு எதிரான போராட்டங்களில் அவர் நிதானம் தவறாதவராகவே நின்றார். ஆனால் அடாவடிச் செயல்களை ஒரு போதும் அனுமதித்ததில்லை.

தன்னைப் பழமைவாதிகள் என நினைப்பவர்களை ஒருபோதும் அவர் வெறுக்கவில்லை. பழமைகளே பல புதுமைகளுக்கு ஆதாரம் எனப் பல உதாரணங்களைக் காட்டி வாதாடி வெல்லுவார். புராண இதிகாசக் கதைகளைக் கூறி அக்கதைகள் வலியுறுத்தும் உலக நீதிநியாயங்களை எடுத்துக் காட்டுவார்.

பொதுவிடயங்களைப் பொறுத்தவரை தாம் எடுத்துக் கொண்ட முடிவை எளிதில் மாற்ற உடன்பட மாட்டார். "போற்றுவார் போற்றட்டும் புழுதிவாரி தூற்றுவார் தூற்றட்டும்" என சலனப்படாமல் முடிவெடுப்பதில் ஒருபோதும் தடுமாறாதிருந்தார்.

தமிழரசுக் கட்சியோடு தொடர்பும் அனுதாபமும் கொண்டிருந்த கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் தமிழினத்தின் ஒட்டுமொத்த விடுதலைக்கு ஏகோபித்த ஒற்றுமையோடு போராட வேண்டும் என்பதை உணர்ந்திருந்தார். ஆதலால் தமிழர்களின் ஐக்கியம் சீர்குலையக்கூடாது என்பதற்காக தமிழரசுக் கட்சியின் செயல்களை கடுமையாக கண்டிக்கவுமில்லை விமர்சிக்கவமில்லை. ஆனால் சாதியப் பிரச்சினைகளுக்கு அவர் முக்கியத்துவம் கொடுக்காமலிருக்கவுமில்லை.

அவர் முழுத் தமிழ்த்தேசியத்தின்பால் தணியாத தாகத்தோடு இருந்தார். அதற்குரிய சூழல் மிகவும் விசனம் தருவதாக இருந்தது. தமிழர்களைப் புறக்கணித்து வருத்துவதை குற்றமாகக் கருதாத அரசியல்வாதிகளும் தலைவர்களும் இருந்த அதேவேளை தமிழர்களை ஒடுக்குவதை குற்றமாகக் கண்டபோதிலும் பாராளுமன்றக் கதிரைகளை கெட்டியாகப் பிடித்துக் கொள்ள விரும்பிய அரசியல் வாதிகளும் இருந்தார்கள். இந்நிலைமை தொடர்ந்தது.

இந்நிலையில் அடக்கியொடுக்கப்பட்ட தமிழ்மக்கள் சிறுபான்மைத் தமிழர் மகாசபைக் கூடாக எடுத்த சமூக விடுதலைக்கு எந்தவித பங்கமும் ஏற்படக்கூடாது. போராடியே தீரவேண்டும் என்ற உள்ளுணர்வில் இருந்தார்கள். இவ்வுணர்வு இளைஞர்களின் மனதில் வேரூன்றி இருந்ததால் அவர்களின் வற்புறுத்தலினால் சாதியமைப்பு பற்றியும் அதன் கொடுமைகள் பற்றியும் தமிழரசுக் கட்சியோடு பேச வேண்டும். அதற்காக தாழ்த்தப்பட்ட மக்களினது சார்பிலான பிரதிநிதிகளைத் தெரிவு செய்ய வேண்டும் என தீர்மானிக்கப்பட்டது.

அச்சுவேலியிலுள்ள தாழ்த்தப்பட்ட சாதியைச் சேர்ந்த கே.நல்லதம்பி என்பவரின் தியேட்டரில் தமிழரசுக் கட்சியுடன் பேச்சுவார்த்தை இடம்பெற்றது. 6 மாத காலத்தில் தீண்டாமைக் கொடுமைகளுக்கு முடிவு கட்டுவோம் என ஏகோபித்த சம்மதம் தெரிவித்தார்கள். கதிரவேற்பிள்ளை மற்றும் சாவச்சேரி பாராளுமன்ற உறுப்பிரான குமாரசாமி உள்ளிட்ட தமிழரசுக் கட்சி முக்கியஸ்தர்கள் உறுதிமொழியளித்தார்கள். 6 மாதங்கள் கடந்தும் எதுவும் நடக்கவில்லை.

ஒன்பது மாதங்களின் பின் மீண்டும் ஒரு முயற்சி நடந்தது. யாழ் கனகரத்தினம் மகா வித்தியாலயத்தில் மாபெரும் கூட்டமொன்று ஒழுங்கு செய்யப்பட்டது. அங்கு எதிரும் புதிருமான கேள்விகள் எழுந்தன. தமிழரசுக் கட்சியினர் நாங்கள் சொன்ன கருத்துக்களுக்கு உடன்படவில்லை.

இதன் பின்னணியில்தான் கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் எங்களுடன் செயற்படத் தொடங்கினார். சிங்களவர்கள் தமிழர்களை அடக்கி ஒடுக்குவது போல பெரும்பான்மைத் தமிழர்கள் அடக்கப்பட்டோரை வஞ்சிப்பதை ஏற்க முடியாது. ஆதலால் போராடியே தீரவேண்டும் என்ற நிலைக்கு வந்தார்.

தீண்டாமை ஒழிப்பு இயக்கத்தில் தீவிரமாகச் செயற்பட்டார். முன்பிருந்த தலைவர்களுக்கு அறிவுரைகளை, ஆலோசனைகளை வழங்குமளவுக்கு உறுதியுடன் தீவிரமாகச் செயற்பட்டார்.

ஸ்தாபன மயப்படுத்தப்பட்ட தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் சாதிய முறைகளுக்கு எதிரான நடவடிக்கைகளில் தீவிரமாக இயங்கியது. பல்வேறு யுக்திகளைச் சந்தர்ப்ப சூழ்நிலைகளைப் புரிந்துகொண்டு அதற்கேற்ற விதத்தில் போராட்ட வழிகளைத் திறமையோடு கையாண்டு வெற்றிகாணத் தொடங்கியது. இவ்வித போராட்ட நுட்பங்களை நா.சண்முகதாசன் வெகுஜன இயக்கத் தலைவர்களோடு பேசி நெறிப்படுத்தினார். இவ்வகை முயற்சிகளில் கிருஸ்ணபிள்ளை மாஸ்டர் பெரும் பங்காற்றி வந்தார்.

கே.டானியல், எஸ்.ரி.என். நாகரத்தினம், இக்பால், செந்திவேல், மான்முத்தையா போன்ற முக்கியஸ்தர்கள் மாஸ்ரருடன் நெருங்கிய உறவைப் பயன்படுத்திக் கொண்டு போராட்ட வியூகங்களை அமைத்தனர். மாவிட்டபுர கந்தசாமி கோவில் ஆலயப் பிரவேச போராட்ட காலத்தில் இவ்வியூகங்கள் இடம்பெற கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் பெரிதும் உதவினார். அதுபோல தொண்டைமானாறு சந்நிதி கோவில் பிரவேசம் நடந்தபோது துணிச்சல் நிறைந்த கெருடாவில் மக்களுக்கு மாஸ்ரரே தலைமைதாங்கினார். முத்து, மகாலிங்கம், குட்டிராசா போன்ற துடிப்பான இளைஞர்கள் ஒழுங்கு தவறாத மக்கள் போராட்டத்தை அவர் தலைமையில் நடத்தி முழு வெற்றி- கண்டனர். கெருடாவில் மக்களின் வீரமான பங்களிப்பு இதில் போற்றப்பட்டது.

பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசம் நடந்தபோது அப்பகுதி எங்கும் பெரும் பதற்றமே நிலவியது. சாதி வெறியர்களோடு பொலிஸ்வேட்டை நாய்களும் சேர்ந்து கொண்டு சட்ட நியாய விரோதச் செயல்களைச் செய்தனர். மட்டுவில் மானாவளைப் பொதுமக்கள் ஒன்றுசேர்ந்து நின்று துணிச்சலான சாதனைகளைச் செய்து காட்டினர். சுப்பையா, சின்னையா, சின்னத்தம்பி, செல்லக்கிளி, போன்ற மட்டுவில் மக்கள் பலருடன் கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் தனது பங்களிப்பை எல்லோரும் போற்றும் விதத்தில் நல்கினார். மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலில் இடம்பெற்ற சம்பவங்களை எல்லோரும் அறிவர்.

1967ல் வீறுகொண்டு எழுந்த வெகுஜன இயக்கம் அடுத்தடுத்து நடத்திய போராட்டங்கள் பலவகைப்படுத்தப்பட்டிருந்தன. அதில் தேநீர்க்கடைப் போராட்டமும் குறிப்பிடத் தக்கது. நெல்லியடி தேநீர்க்கடைப் போராட்டம் நடக்கப் போவதை அறிந்து கொண்ட எம்.பி-மு.சிவசிதம்பரம் அதை அமைதியாகவும் சுமூகமாகவும் செய்து தருவதாக வாக்களித்தார். அவரோடு பேச்சுவார்த்தை நடாத்த கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் தலைமையில் மூவர் சென்றனர். "அடுத்த வெள்ளிக்கிழமை எல்லாத் தேநீர்க் கடைகளும் திறந்து வைத்திருக்கப்படும். போராட்டம் தேவையில்லை அதற்கு நான் பொறுப்பு" என உறுதியளித்தார். குறித்த வெள்ளிக் கிழமை வெகுஜன இயக்கப் போராட்டக்குழு நெல்லியடிக்குப் போனபோது எல்லாத் தேநீர்க்கடைகளும் மூடப்பட்டிருந்தன. சிவசிதம்பரம் எம்பியைத் தேடியும் காண முடியவில்லை. இதனால் அடுத்த சில நாள்களுள் திறந்திருந்த எல்லாத் தேநீர்கடைகளுக்குள்ளும் வெகுஜன இயக்கத்தினர் புகுந்து கொண்டனர். அப்போது சிறு சலசலப்பும் எதிர்ப்பும் எழுந்த போதும் போராட்டம் வெற்றி பெற்றது. அதில் கலந்து கொண்ட கன்பொல்லைப் பொதுமக்கள் வெகுஜன இயக்கத் தலைவர் திரு க.கிருஸ்ணபிள்ளையை பாராட்டிய போது "உறுதி மிகுந்த உங்கள் நெஞ்சுரத்தை ஒருபோதும் மறக்க முடியாது" என்று வாயாரப் புகழ்ந்து பாராட்டினர்.

நெல்லியடியைச் சேர்ந்த பல மார்க்சிய கட்சி இளைஞர்கள் அந்தப் போராட்ட வெற்றிக்குத் துணைபுரிந்தனர். இது வரலாற்றில் இடம்பெறும். கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் பல தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் பல்வேறுபட்ட சாதி எதிர்ப்பு போராட்டங்களிலும் பங்கு கொண்டதுடன் பெறுமதிமிக்க ஆலோசனைகளையும் அவ்வப்போது அளித்து அதன் உறுப்பினர்களுக்கும் ஆதரவாளர்களுக்கும் உதவி புரிந்தார்.

தீண்டாமைக் கொடுமைகள் இப்போது எங்குமே இல்லை. அது காலாவதி ஆகிவிட்டது. அதுபற்றி பேசுவது சரியில்லை என இன்று பல புத்துஜீவிகள் பேசிக் கொள்கின்றனர். அது சுத்தமான பொய். தீண்டாமையை அகதிகளாக வெளிநாடுகளில் தஞ்சம் பெற்றவர்களான தமிழர்கள் மாறாமல், நலியாமல் அழியாமல் பாதுகாத்து வருகின்றனர். தங்கள் பிள்ளைகளுக்கும் போதிக்கின்றார்கள். இதுதான் உண்மை.

வெகுஜன இயக்கம் எங்கும் என்றும் தீண்டாமைக்கு எதிரான பணிகளைத் தொடர்ந்தும் செய்ய வேண்டும் என்பதும் புழுதி துடைக்கப்பட வேண்டும் என்பதும் அமரர் க.கிருஸ்ணபிள்ளை அவர்களின் போதனையாகும்.

தமிழரசுக் கட்சியின் சார்பாக தாழ்த்தப்பட்டவர் ஒருவர் உறுப்பினரானாலென்ன என்று சிந்தித்தார். இது தொடர்பாக என்னுடனும் கதைத்தார். நாங்கள் அதில் நம்பிக்கை கொள்ளவில்லை. இவ்விடயம் தொடர்பாக மாஸ்ரர் தமிழரசுக் கட்சித் தலைவர்களோடும் கதிரவேற்பிள்ளையோடும் நெருக்குதல் கொடுத்துப் பேசினார். மாஸ்ரர் தான் எடுத்த விடயத்தை வற்புறுத்துவதில் பின்நிற்கமாட்டார். இவ்விடயம் தொடர்பாக கதிரவேற்பிள்ளையோடு கிருஸ்ணபிள்ளை மாஸ்ரர் இரண்டு தடவை பேசியது எனக்குத் தெரியும்.

நீங்கள் ஆசிரியர்தானே நீங்கள் தேர்தலில் நிற்க விரும்புகிறீர்களா? என்று தமிழர் விடுதலைக் கூட்டணியைச் சேர்ந்த திரு.கதிரவேற்பிள்ளை

அவர்கள் கிருஸ்ணபிள்ளை மாஸ்ரரைக் கேட்டபோது "நாங்கள் பொருத்தமான ஆளைத்தான் விடுவோம் அதற்கு திரு.இராசலிங்கம்தான் பொருத்தமானவர்" என்று கூறி அவரை அறிமுகப்படுத்தினார்.

திரு.த.இராசலிங்கத்திற்காக அவர் அல்லும் பகலும் அயராது தீவிரமாக முன்னின்று பாடுபட்டார். திரு த. இராசலிங்கம் வெற்றிபெற்ற போது " பாத்தியளோ நீங்கள் சொன்னியள் இப்ப என்ன நடந்திருக்கு" என்று என்னிடம் கேட்டார். மனப்பூர்வமாக நாங்கள் முயற்சி செய்தால் நாங்கள் வெற்றி பெறலாம் என்றார்.

தீண்டாமைக்கு எதிராக எப்படி எப்படியெல்லாம் செயற்படலாம் என்ற ஒரு சிந்தனையின் வெளிப்பாடாகவே இராசலிங்கத்தை மாஸ்ரர் முன்னிறுத்தி வெற்றிக்காகச் செயற்பட்டார்.

யாழ்ப்பாணத்திலிருந்து பதுளைக்கு மாஸ்ரர் ரெயிலில் பிரயாணம் செய்து கொண்டிருந்த போது அருகில் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் அமர்ந்திருந்து மாஸ்ரருடன் அளவளாவிக் கொண்டு வந்தார். அவர் மாஸ்ரரை இவர் இன்னார் என்று அறிந்திருக்கவில்லை. மாஸ்ரரும் தன்னை யார் என்று வெளிக்காட்டவில்லை. உரையாடலின் போது மாவிட்டபுரம் ஆலயப்பிரவேசப் போராட்டம் பற்றியே கதைத்தார்கள் அவ்வேளை அடங்காத் தமிழன் சுந்தரலிங்கம் "சமத்துவத்தை தேடுபவர்கள் சண்டித்தன முறையால் அதனைப் பெற முடியாது" என்றாராம்.

மாவிட்டபுரம் ஆலயப் பிரவேசப் போராட்டம் நடைபெற்ற போது பேச்சுவார்த்தை ஒன்று Mrs.நாகராஜா என்பவரின் வீடடில் அடங்காத் தமிழன் சுந்தரலிங்கத்துடன் இடம்பெறவிருந்தது. இப்பேச்சுக் குழுவில் ஆலயப் பிரவேசப் போராட்டக் குழு சார்பாக S.T.N நாகரட்ணமும் கிருஸ்ணபிள்ளை மாஸ்ரரும் காங்கேசன்துறை சூடாமணியும் கலந்து கொண்டார்கள். அவ்வேளை பேச்சுவார்த்தைக்கு வந்திருந்த

அடங்காத்தமிழன் சுந்தரலிங்கம் மாஸ்ரரைக் கண்டு திகைப்படைந்தாராம். தான் ரெயினில் மாஸ்ரரிடம் தனது உள்ளக் கிடக்கைகளை இவர் யாரென்று அறியாமல் கூறிவிட்டதை எண்ணிக் கலவரப்பட்டாராம்.

பதுளை சரஸ்வதி மகா வித்தியாலயத்திலும் உடுப்பிட்டி மகளிர் கல்லூரியிலும் ஆசிரியராகப் பணிபுரிந்த கவிஞர் அமரர் கே.கிருஸ்ணபிள்ளை அங்கெல்லாம் பெரும் மதிப்பிற்குரிய ஆசிரியராகவே போற்றப்பட்டார். அதிபர், ஆசிரியர்கள், மாணவ, மாணவிகள் மட்டுமன்றி பாடசாலைச் சமூகத்தவர்களும் பெற்றோரும் கே.கிருஸ்ணபிள்ளையைக் கௌரவித்து மகிழ்ந்தனர்.

பால்யப் பருவத்திலேயே தாயாரை இழந்து தவித்த தமது மருமகன்கள் இருவரை வளர்த்து சிறந்தவர்களாக்கிய அமரர் கிருஸ்ணபிள்ளை அவர்கள் தமது பிள்ளைகள் ஐவரையும் கல்வி அறிவுள்ளவர்களாக போற்றப்படுகின்ற அளவுக்கு நல்ல ஆசிரியர்களாக்கி மன நிறைவு பெற்றார். நாடு, இனம், மொழி, சமூகப்பற்று நிறைந்த ஒரு சிந்தனாவாதியை, விடுதலைப் போராளியை, சமூகத் தொண்டனை, வழிகாட்டியை நாமும் நமது சமூகமும் இழந்து நிற்கிறோம்.

மேலாதிக்க சக்திகள் கட்டி வைத்துள்ள சமூக அநீதிகளை விதியென்றும் வாழ்வியல் என்றும் கலாசார விழுமியம் என்றும் போதிக்க முன்னிற்கும் அராஜக மனிதர்களையும் அவர்களின் நயவஞ்சக நெறிகளையும் தெளிவுற இனங்கண்ட சமூக முன்னோடியை நாம் சரியாகப் பயன்படுத்தத் தவறிவிட்டோம் என்பதே உண்மை.

திரு க.தங்கவடிவேல்

ஓய்வு நிலை ஆசிரியர்

# ஐந்து சந்திப்புக்கள்

அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்களுடன் எனது முதற்சந்திப்பு 2001ஆம் ஆண்டின் பிற்கூற்றில் நிகழ்ந்தது. அக்காலப்பகுதியில் டானியலின் எழுத்துக்கள் என்னும் தலைப்பில் எனது டாக்டர் பட்டத்துக்கான தேடல் முயற்சிகளில் நான் ஈடுபட்டிருந்தேன். அமரர் டானியல் அவர்களுடன் மிக நெருக்கமாகச் செயற்பட்டோர் பற்றிய தகவல்களைப் பெற்றபோது அதிலொருவராக இளைப்பாறிய ஆசிரியர் கிருஷ்ணபிள்ளையும் காணப்பட்டார். எனவே கட்டாயம் அவரைச் சந்திக்க வேண்டுமென நினைத்தேன். எதிர்பாராத விதமாக அவரது மூத்த மகள் வாசுகி நான் கற்பித்துக் கொண்டிருந்த கோப்பாய் ஆசிரியகலாசாலையில் இந்து சமய நெறியில் பயின்று கொண்டிருந்தார். அவரிடம் வீட்டுக்கு வருவதற்கான விபரங்களை அறிந்து கொண்டு ஒருநாள் காலை 10 மணியளவில் பஸ்மூலமாகத் தொண்டைமானாற்றிலுள்ள கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரின் இல்லத்தைச் சென்றடைந்தேன். மாஸ்ரரும் மனைவியும் தவிர வேறொருவரும் அப்போது வீட்டிலிருக்கவில்லை. என்னை வரவேற்று உட்காரச் சொன்னார் மாஸ்ரர். விரைவாகத் தேநீர் வந்தது. அருந்திய பின் நான் வந்த நோக்கத்தை அறிந்து கருத்துக்களையும் தகவல்களையும் பரிமாறினார்.

எனது ஆய்வு முயற்சிகளின் போது டானியல் பற்றிய அனுபவங்களைச் சேகரிப்பதில் பலரை அணுகுகையில், இனிப்புகளை விடக் கசப்புகளே அதிகம் என்னை அணுகின. ஆனால் கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரிடம் மனித நேயத்தையும், டானியலின் மீது அவர் வைத்துள்ள அதீத பாசப்பிணைப்பையும் பற்றுதலையும் காண முடிந்தது. ஒடுக்கப்பட்ட இம் மக்களுக்கான டானியலின் முயற்சிகள் பற்றியெல்லாம் அவர் என்னுடன் பல்வேறு தகவல்களையும் பகிர்ந்து கொண்டார். மட்டுவில் பன்றித் தலைச்சியம்மன் கோவிலின் வருடாந்தப் பொங்கலின் போது

பொங்கற் பானைக்குள் இருந்த குண்டு வெடித்த கதையையும், அது சம்பந்தமாகத் தேடப்பட்டுவந்த செல்லக்கிளி என்ற பெண்ணைப் பாதுகாத்தலில் டானியலின் அக்கறையையும் அவரே விளக்கமாக எனக்குக் கூறினார். தனது வாழ்வின் முற்கூற்றில் எதிர்கொண்ட சமூக அடக்கு முறைகள் பற்றி அவர் கூறும்போது என் கண்கள் கலங்கின. அவரோ அடிபட்ட மனதில் ஆழப்பதிந்துள்ள வடுக்களைக் கீறிக்காட்டினார். அப்போது ஆவேசங்கொண்டதொரு போராளியாக மாஸ்ரர் எனக்குத் தென்பட்டார். இந்த எழுபதைத்தாண்டிய வயதிலும் தனது குடும்பத்தை விடச் சமூகம், மக்கள் எனச் சிந்திக்கும் ஒரு பொதுவுடைமை வாதியைத் தரிசித்ததில் நான் உண்மையாகவே பெருமை கொண்டேன். இன்று எவ்வளவோ சமூகமாற்றங்கள் நிகழ்ந்துவிட்ட போதிலும் தவறவிட்ட ஆட்டுக்குட்டியைத் தேடித்தவிக்கும் இடையனைப்போல இழந்து விட்ட சமூக உரிமைகளைத் தேடி நினைந்து தவிப்புறும் சிந்தனாவாதியான ஓர் ஆசிரியரின் உள்ளத்து உணர்வுகளை நான் அத்தருணம் அறிந்து கொண்டேன்.

என்னைப்புறப்பட விடாமல் சாப்பிடவைத்தே மாஸ்ரர் அனுப்பிவைத்தார். அவரது விருந்தோம்பும் செம்மை என்னை வியப்புறச்செய்தது. சிலவாரங்களில் அவருடனான எனது இரண்டாவது சந்திப்பும் டானியல் சம்பந்தமாக நடந்தேறியது. மேலும் பல தகவல்களை நான் அவரிடமிருந்து பெற்றுக் கொண்டேன். சிறிது காலத்தின் பின்னர் 2005இல் அமரர் முருகேசு ஆசிரியரின் மறைவு குறித்த 31ம் நாள் நிகழ்ச்சியும் மலர் வெளியீடும் புத்தூரில் நடைபெற்றபோது மாஸ்ரரைச் சந்திக்கும் வாய்ப்புக் கிட்டியது. மலருக்கான ஆய்வுரையை நான் நிகழ்த்தியிருந்தேன். மாஸ்ரரோ இளமை கொப்பளிக்கும் ஆக்ரோஷமான உரையினை ஆற்றியிருந்தார். சொல்லாட்சியும், கருத்துச் செம்மையும், காரண காரியத் தொடர்பும் உணர்ச்சிவெளிப்பாடும் மிக்கதாக அவரது பேச்சு அமைந்திருந்தது. அந்தக் காலங்களில் தீண்டாமை ஒழிப்பிற்காகவும் ஒடுக்கப்பட்டோர் விடுதலைக்காகவும் நடைபெற்ற கூட்டங்களில் கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் எப்படிப் பேசியிருப்பார் என்பதை கற்பனைக் கண்கொண்டு பார்க்க என்னால் முடிந்தது.

எங்களிருவருக்குமான நான்காவது சந்திப்பின் போது மாஸ்ரர் மிகத் தளர்ந்திருந்தார். தனது குடும்பமீதான கவலையும் அவரிடம்

குடிகொண்டிருந்தது. நான் அவரிடம் "ஐந்து பிள்ளைகளையும் கல்வி பெறவைத்து ஆசிரியர்கள் ஆக்கிவிட்டீர்கள். அவர்கள் தங்கள் காலில் நிற்கக் கூடிய திறனை உருவாக்கிவிட்டீர்கள். பிறகேன் கவலைப்படுகிறீர்கள். நடக்கவேண்டியது நடக்கும்" என்று கூறிச் சமாதானப் படுத்திவிட்டு வந்தேன்.

மாஸ்ரருக்கும் எனக்கும் அறிமுகமும் அன்பும் ஏற்பட்ட பத்தாண்டு காலத்தினுள் சென்ற ஆண்டினிறுதியில் தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகா வித்தியாலயத்திற்கு பட்டப்பின் கல்வி டிப்ளோமா மாணவர் கற்பித்தல் பயிற்சியை மேற்பார்வையிடச் சென்றபோது மாஸ்ரரையும் பார்ப்பதற்காகச் சென்றிருந்தேன். என்னை உடனேயே அடையாளங்கண்டு உரையாடினார். ஆனாலும் சில மாறாட்டமான சிந்தனைகளையும் வெளிப்படுத்தினார்.

அதுதான் அவருடன் எனது இறுதிச் சந்திப்பாக அமைந்தது. பின்னர் அவருடைய உயிரற்ற பூதவுடலைத் தான் தரிசிக்க முடிந்தது.

அமரர் கிருஷ்ணபிள்ளை மாஸ்ரர் நல்லாசிரியராகப் பணிபுரிந்தவர். அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயம் உருவாக்கப்பட்டபோது தமது சமூக மாணவர் முன்னேற்றங் கருதி அங்கு சென்று கற்பித்தவர். பெற்றோருடனும் சமூகத்தவர்களுடனும் நல்லுறவை வளர்ப்பதினூடாகப் பாடசாலையை முன்னேற்றியவர். பாண்டித்தியமிக்கதான மொழியைக் கையாண்டவர். நுட்பமான உத்திகளைப் பயன்படுத்திக் கற்பிப்பவர். எல்லோருக்கும் இனியவராக மனிதாபிமானத்துடன் நடப்பவர். ஆனால் கொடுமை கண்டு பொங்குபவர். இவ்வாறெல்லாம் அவரிடம் கல்வி கற்ற மாணவர்கள் கூறியிருக்கின்றனர். நல்லதொரு குடும்பத்தலைவராக, பேச்சாளராக, எழுத்தாளராக, ஆசிரியராக பொதுவுடைமைவாதியாக அதேவேளை சைவசமயியாக ஒடுக்கப்பட்டோர் விடுதலை விரும்பியாக, சமூகசேவையாளராக, சோதிடராகப் பல்துறைப் பரிமாணங்களில் தன்னை வெளிப்படுத்தியவர் அமரர் கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்கள். அவரது ஆரம்பகால ஆசிரியப்பணி பதுளை முதலான தென்மலையகப் பிரதேசங்களில் அமைந்தது. பின்னரே ஊருக்குச் சேவையாற்ற விரும்பி வந்தார். அவரது அரசியலும் ஆரம்பத்தில் சைவப்புலவர் வல்லிபுரம், செல்லையா, செல்லத்துரை, முருகேசு முதலான ஆசிரியர்களை -

அதிபர்களைச் சார்ந்ததாய் தமிழரசு இயக்க ஆதரவாளராய்க் காணப்பட்டது. அதன் பின்னரே அவர் பொதுவுடைமைச் சித்தாந்தவாதியாக மாறினார். டானியல் போன்றோருடன் நெருங்கிப் பழகி விடுதலைப் போராட்டங்களில் ஈடுபட்டார். மக்களது விடிவுக்கான முயற்சிகளில் தன்னை ஈடுபடுத்திநின்றார். மாஸ்ரரின் "வேண்டும் இலக்கியமே விதை" என்ற கவிதையானது 'மக்கள் இலக்கியம்' பத்திரிகையின் இரண்டாவது இதழில் (1983 தை - பங்குனி) வெளிவந்தது. அதிற்கூட மக்கள் சார்பான அக்கறையையே அவர் பிரதிபலித்துள்ளார். அக்கவிதை பின்வருமாறு

ஊணும் உடையும் உவப்பாய் உறைவிடமும்
பேணும் பெருவாழ்வின் அடிப்படையே - காணாது
நீண்டபெரு மூச்சோடு நீணிலத்தே வாழ்பவர்கள்
வேண்டும் இலக்கியமே விதை!

இலக்கியத்தின் சிந்தனையை ஏழைகளும் சீரணித்தால்
மலர்ச்சி யுறுவர் மனத்துணிவில் - பலமுற்றே
உழைப்பின் திறத்தால் ஒடுக்குமுறை ஒழிந்துவிடும்
பழைமை பறக்காதோ பகர்!

மக்கள் தமையுணர்ந்தால் மாநிலத்தை ஆள்வோரைத்
தக்கபடி யமர்த்தத் தயங்காரே - மிக்கதொரு
சீர்மை திகழும் செழிக்கும் பொருளமைவு
நேர்மை நிலவாதோ நினை.

சுரண்டிக் கொழுத்துச் சொகுசாக வாழ்பவர்கள்
வெருண்டிங்கு வேலை செய்யாரோ - முரணாகாச்
சக்திக்கு ஏற்ற சமமான வாழ்க்கை வளம்
பக்குவமாய் வாய்க்குமே பார்.

பாலைவன நாட்டில் பணஞ்சேர்க்க ஓடுகின்றார்
சோலைவன நாட்டுச் சொந்தமக்கள் - வேலையின்றி
அபிவிருத்தி பற்றி அதிகப் பிரசார
உபதேசம் ஏமாற்றே உணர்.

அமரர் கிருஷ்ணபிள்ளை ஆசிரியரின் எழுத்துக்கள் குறைவுதான். ஆனால் அவர் எழுதினால் இப்படித்தான் இருக்கும். பாடுபொருளும் உணர்ச்சிச் செறிவும் பாங்குடன் இணைந்த வெண்பாக் கவிதைகள் அவரது ஆற்றலின் அடையாளங்கள். காட்டிலும் பிற மரங்களின் வேர்களோடு பின்னிப் பிணைந்து முறுக்குண்டு சவால்களைச் சமாளித்து வளரும் சந்தனமரமே அதிக வாசனையைத் தரவல்லது. அதுபோல எண்ணற்ற சமூகச் சவால்களுக்கு முகங்கொடுத்து நின்று தன்னை உயர்ந்ததொரு மானிடனாக வெளிக்காட்டிய கிருஷ்ணபிள்ளை மாஸ்ரரும் ஒரு சந்தன மரம் போன்றவர்தான். அவரது சிந்தனைகள் எம்மை வழிப்படுத்தவல்லன. அவர் அவாவுற்ற சமூக விடுதலைப் பணிகள் பல இன்னும் தொடரப்படவேண்டியன. அவரது ஆத்மா எல்லாம் வல்ல இறையருளில் திளைக்கப் பிரார்த்திக்கின்றேன்.

**கலாநிதி, பண்டிதர் செ.திருநாவுக்கரசு**
ஓய்வுநிலை ஆசிரிய கலாசாலை விரிவுரையாளர்.

## சமூக விடுதலைப் போராளியான அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்கள்

அமரர் க.கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்கள். அன்பானவர், பண்பானவர், மனித நேயம் மிக்கவர், எல்லோரையும் அனுசரித்து அரவணைத்துப் போகும் மனப்பாங்கு மேலோங்கப் பெற்றவர், எதையும் நிதானமாகவும், உள்ளதை உள்ளவாறும் சொல்லும் இயல்பினர். மனிதநேயம் மிக்கவராக வாழ்ந்தவர் என்பதனால் தான் சார்ந்து நின்ற சமூகத்தின் விடிவுக்காக அதன் மறுக்கப்பட்ட உரிமைகளை வென்றெடுப்பதற்காக குரல் கொடுத்தும், செயற்படுத்தியும் வாழ்ந்து வந்தவர்.

இந்த வகையில் அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்கள் தான் சார்ந்து நின்ற சமூகத்தின் கல்வி வளம் பெறல் வேண்டும் என்பதில் நிதானமாக நின்றவர். அதற்கான செயற்பாட்டின் வடிவமாக அமைந்ததுதான் யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் ஸ்தாபிதமும் அதன் பல்பரிமாண வளர்ச்சியும். இதன் முன்னோட்டமாக அல்வாய்ப் பிரதேசத்தின் கல்வித் தேவைக்காக ஒரு பாடசாலை அமையவேண்டும் என்ற முன்னோடித்திட்டம் முகிழ்ந்த காலம் 1937ம் ஆண்டாகும். அதன் பிற்பாடு மேற்படி திட்டம் தொடர்பாக 1952/1953ம் ஆண்டு காலப்பகுதியில் அல்வாய்ப் பிரதேசத்தைச் சூழ்ந்திருக்கும் சமூக முன்னோடிகள் பலர் ஒன்று சேர்ந்து கவிஞர் மு.செல்லையா அவர்களின் தலைமையில் "விநாயகர் வித்தியாமன்றம்" என்ற ஓர் அமைப்பை உருவாக்கினர். அந்த மன்றத்தின் செயற்குழு உறுப்பினர்களில் ஒருவராக அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்கள் புலோலிமேற்கு, மாயக்கை சார்பாக நியமிக்கப்பட்டார். அம்மன்றமானது பாடசாலையைக் கட்டி யாழ் சைவவித்தியா சங்கத்தாரிடம் கையளிப்பது எனத் தீர்மானித்து பாடசாலைக் கட்டுமானப்பணிகளையும் ஆரம்பித்தனர். இதற்கு

அமைவாக 7.10.1954இல்பாடசாலைக் கட்டடத்திற்கான அத்திபார மிடப்பட்டதுடன் அன்றைய தினமே அரசடி விநாயகர் ஆலயத்திற்கு மேற்கே அமைந்திருந்த நெசவுசாலையில் வகுப்புகளும் ஆரம்பிக்கப்பட்டன. இப்பாடசாலையில் முதல் ஆசிரியராக அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்களும் இணைந்து செயற்பட்டார். மேற்படி பாடசாலையின் கட்டுமானப்பணிகளை இப்பாடசாலையின் ஸ்தாபகப் பெருமக்களான அமரர்கள் க.முருகேசு, கவிஞர் மு.செல்லையா ஆகியோர் பொறுப்பேற்றுச் செய்தனர். இவர்களுக்கு உதவியாக ஆசிரியப் பணியினைச் செய்து கொண்டு கட்டட நிர்மாணப்பணிகளுக்கும் தன்னாலான முழுப்பங்களிப்பையும் நல்கியவர் அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்கள். இவ்வாறு அன்னாருடைய கல்விப் பணி ஆரம்பமாகி யா/அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையின் சிறப்பான ஆரம்பகல்விச் செயற்பாடுகளில் அமரர் கவிஞர் மு.செல்லையா அவர்களுடன் வலுவாகத் தடம்பதித்து நின்றார்.

நல்ல ஆசிரியராகவும் நல்ல வழிகாட்டியாகவும் நின்று அல்வாய்ப் பிரதேச மக்களின் கல்வி மேம்பாட்டிற்கு அடித்தளமிட்டது, அதனை வளர்த்துக் கொண்டமை எல்லாம் அமரர் சார்ந்ததும் தான் நேசித்ததுமான சமூகத்தின் விடியலுக்கான சிறப்பான செயற்பாட்டின் ஓர் அம்சமாகும். அன்னாரது இளமைக்கால வீறு கொண்ட செயற்பாட்டிற்குக் கட்டியம் கூறி நிற்பது இக்கல்விச் செயற்பாடே. இதன் ஊடாக தன்னையும் ஆசிரியத்துவத்தினூடாக வளர்த்துக் கொண்டு சமூகத்தினால் நன்கு மதிக்கப்பட்ட நல்ல ஆசிரியராக வலம் வரலானார்.

அமரர் அவர்கள் ஆரம்பத்தில் தமது சமூக மக்களின் அன்றாட வாழ்வியல் நகர்வுகளில் அவர்களின் தேவைகள் வாழ்வாதார மேம்பாடுகளுக்கான அறிவியல்சார் ஆலோசனைகளை வழங்கி அவர்களின் வாழ்வியல் செழுமைக்கு வழிகாட்டியவர். அதன் நிமித்தமாக தன்னை சைவப்பாரம்பரியம் மிக்கதான நடையுடை பாவனைகள் சிந்தனைகள் என்பவற்றை மாற்றிக் கொண்டார். நல்ல தோற்றப் பொலிவும் வேட்டி சால்வை அணிந்து ஆசார சீலராகக் காட்சியளிப்பது அன்னாரது இயல்பு வாழ்க்கை. அன்னார் தனது சமூக மக்களின் அன்றாட தேவைகளின் ஒரம் சமாக நன்மை தீமைகளில் பங்களிப்பதோடு சோதிடக் கலையையும் கற்றுணர்ந்து அதனூடாகவும் நல்ல ஆலோசகராகவும் செயற்பட்டவர். அதனோடு ஆசிரிய சேவையோடு தன்னை இணைத்துக் கொள்வதற்கு முன்னும் பின்னும் ஆக்க இலக்கியத்துறையில் கவிதைத் துறையைத் தெரிவு செய்து ஆரம்பத்தில் மரபுசார் கவிதைகளிலும், சமூக

விடுதலைப் போராட்ட காலத்தில் மரபுக்கவிதை யூடாகவும், நவீன புதுக்கவிதையூடாகவும் முற்போக்குக் கருத்துக்களை முன்வைத்து சராசரி கவிஞராக சமூகத்தில் வலம் வந்தவர்.

அன்னார் வாழ்ந்த சமூகச் சூழலில் அந்த சமூக மக்கள் கல்வி வளம் குறைந்த பாமரமக்கள். அந்த மக்களின் எதிர்காலம் மாற்றம் பெற வேண்டும். சுபீட்சம் நிறைந்ததாக மலர வேண்டும் ஒட்டு மொத்தமாக அக்காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற உரிமைகள் மறுக்கப்பட்ட மக்களின் வாழ்வியல் மாறவேண்டும். அந்த மக்களும் அடிமைப்பட்ட, ஒடுக்கப்பட்ட மக்களாக வாழாமல் சுதந்திரபுருஷர்களாக வாழ வேண்டும். அவர்களின் வாழ்வியலும் உலகியலில் வாழும் சராசரி மக்களுக் கிருக்கின்ற உணர்வுகள் அபிலாசைகள், கலை, கலாசார பண்பாட்டு விழுமியங்களில் தங்களை இணைத்துக் கொண்டு வாழ வேண்டும் என்ற நினைப்பு அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்களின் சிந்தனையில் மேலோங்க அவர் தன்னைச் சுதாகரித்துக் கொண்டு அந்த மக்களின் விடியலுக்கான பாதையில் கால் பதிக்க தன்னை மாற்றிக் கொண்டார்.

1965 காலப்பகுதியில் இலங்கை சீனச்சார்பு கம்யூனிஸ்ட் கட்சியின் ஓர் அங்கமான சமூக நலஸ்தாபனமான தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினூடாக எமது மக்களின் சமூக விடுதலைக் களத்தில் முனைப்பாக கால் பதித்து நின்ற அமரர்கள் கே.டானியல், எஸ்.ரீ.என்.நாகரத்தினம், வீ.ஏ.கந்தசாமி, கே.ஏ.சுப்பிரமணியம் ஆகியோருடன் தம்மையும் இணைத்துக் கொண்டு ஏனைய எமது சமூக ஆசிரியர்களையும் அதில் இணையும்படி வேண்டிக்கொண்டவர்களில் அமரர் க.கிருஷ்ணபிள்ளையும் ஒருவராவர்.

இதன் தொடர்ச்சியாக 1969 இல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தினால் முன்னெடுக்கப்பட்ட ஆலயப் பிரவேசக்குழுவில் இணைந்து கொண்டு பின்னர் அதன் தலைமைப் பொறுப்பை ஏற்று வெகுஜன இயக்கத்தை வழிநடாத்தினார். அவருக்கு உதவியாக மேற்படி அமைப்பின் தொண்டராகவும் தலைமைக்குழு உறுப்பினராகவும் செயற்பட்டவர் அமரர் வடஅல்வை சின்னப்பு கணேசன் அவர்களாவர். இவர்கள் இருவரும் அல்வாய்ப் பிரதேசத்தைச் சார்ந்து நின்ற சமூகவிடுதலை வீரர்களாகவும், சமூகப்போராளிகளாகவும் திகழ்ந்தவர்கள். அந்த வகையில் அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்களின் துணிச்சலும் நிதானமும் நிறைந்த சமூக அரசியல் பங்களிப்பானது ஒட்டுமொத்த ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவிற்காக அவர்களின் வாழ்வாதார மேம்பாட்டிற்காக ஆற்றிய பணிகள் காலத்தால் அழியாதவை.

அன்னாருடைய கவிதைத்தளத்திலிருந்து அமரர் சின்னப்பு கணேசன் அவர்களின் 1ம் ஆண்டு நினைவிதழில் அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்கள் அமரர் சி.கணேசன் பற்றி எழுதிய "சமூக நேசன்" என்ற தலைப்பிலான கவிதை வரிகளில் சிலவற்றை இதில் பகிர்ந்து கொள்வது பொருத்தமாகும்.

"சாதி அமைப்பைத் தகர்ப்பதற்கும்
சமத்துவ நெறியே தழைப்பதற்கும்
நீதி கேட்டு முன்சென்ற
நேசன் கணேசன் நினைவின்றே!
எண்ணித் துணியும் இயல் பாற்றல்
ஏழைகள் வளர்ச்சியில் கண்ணோட்டம்
திண்ணிய உணர்வால் திட்டமிடும்
தியாகத் தொண்டர் கணேசனவர்
விண்ணிற் பறக்கும் விமானத்தின்
விசையின் ஊற்றாம் காற்றுப்போல்
மண்ணில் மக்கள் தேவைகளை
மகிழக் கொடுப்பது பொதுமை யென்றார்"

இவ்வாறு அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்களின் சிந்தனைகள் கருத்துக்கள் கவிதையினூடே செறிவாகச் சொல்லப்பட்டமை அன்னாரின் ஆக்க இலக்கியப் பணிகளுக்கு கட்டியம் கூறிநிற்பவையாகும் என்பது இலக்கியப் பணிகள் சார்பான பதிவுகளாகி நிற்கின்றன.

காலநகர்வில் தமிழ்த்தேசிய விடுதலைப் போராட்டத்தின் முகிழ்தலின் பின்னர் சமூக விடுதலைப் போராட்டமானது முனைப்புப் பெறாத நிலை உருவாக்கப்பட்டது. அதன்பின்னர் அமரர் அவர்கள் ஆசிரியப் பணியிலும், சமூகப் பணிகளிலும் கால் பதித்து நின்றார். இறுதிவரை யாவர்க்கும் நல்ல நண்பராய், நல்லாசிரியராய், பண்பிலே தெய்வமாய், பார்வையிலே சேவகனாய் வாழ்ந்த அமரர் க.கிருஷ்ணபிள்ளை அவர்களின் நினைவுகள் என்றும் எம்மக்களின் மனங்களில் நிலைத்து நிற்கும் எனக் கூறிக் கொள்ளலாம்.

**கி.கணேசன்**
(ஓய்வுநிலை அதிபர்)
அல்வாய் வடக்கு.

## எழுத்தாளர் நந்தினி சேவியர் அவர்கள் எழுதிய அஞ்சலிக்குறிப்பு

"சாதி ஒடுக்கு முறையால் பின்தள்ளப்பட்ட வடமராட்சியின் கிராமங்களில் ஒன்றான மாயக்கையின் முக்கிய மனிதராக கிருஸ்ணபிள்ளை இருந்திருக்கிறார். (எனது "அயல்கிராமத்தைச் சேர்ந்தவர்கள்" சிறுகதையில் அக்கிராமத்தை அடையாளப்படுத்தியிருக்கின்றேன்.)

அவரை நான் அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாசாலையில் ஒரு ஆசிரியராக அடையாளம் கண்டேன். இன்னொரு கிருஸ்ணபிள்ளை அங்கு ஆசிரியராக இருந்தமையால், இவர் 'மாயக்கை கிருஸ்ணபிள்ளை'யென ஊர்ப்பெயரால் அழைக்கப்பட்டார். பாரதியாரின் தலைப்பாகை கட்டுடன் கம்பீரமாக சைக்கிளில் வருவது எனக்குத் தெரியும். கவிஞர் அல்வாய் மு.செல்லையாவுடன் கவியரங்குகளில் அவர் கவிதை பாடியதை நான் அறிவேன். பின் நாட்களில் திருமண பந்தத்தினால் தொண்டைமானாறு வாசியாகினார்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்க நடவடிக்கைகளில் தீவிரமாக ஈடுபட்ட நாட்களில் அவருடன் நெருக்கமாக பழகும் வாய்ப்பு கிட்டியது. எஸ்.ரி.என்.நாகரத்தினத்திற்கு பின்னர் தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் தலைவராக அவர் இருந்தார்.

எழுத்தாளர். கே.டானியலுடன் அவருக்கு நெருங்கிய தொடர்பு இருந்தது. அவர் ஒரு இடதுசாரியாக இல்லாதிருந்த பொழுதும், சாதியத்துக்கெதிரான போராட்டங்களில் முன்னணி பங்காளராக முழு மனதுடன் ஈடுபட்டார். சாதி ரீதியான ஒடுக்கு முறைகளை அனுபவித்ததன் வெளிப்பாடே அவரை தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின் பால் ஈர்த்தது என்பது மறுக்க முடியாத உண்மை.

சாதியம் மீண்டும் தலை தூக்க விளையும் இந்த நேரத்தில் அவரது இழப்பு மிக வருத்தத்துக்குரியது. அவருக்கு எம் தோழமை நிறைந்த அஞ்சலிகள்.

**-நந்தினி சேவியர்-**

**[க.கிருஷ்ணபிள்ளை அவர்கள் காலமாகிய அன்றே இணையத்தளத்தில் இவ் அஞ்சலிக் குறிப்பு வெளியாகியுள்ளது.]**

# நாட்டுப்பற்றாளர் கிருஷ்ணபிள்ளை ஆசிரியருக்கு அஞ்சலி

**எம்.கே.சிவாஜிலிங்கம்**
முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்
அம்மன் கோவிலடி,
வல்வெட்டித்துறை.
31.08.2011.

அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளை அவர்களுடன் 1998ம் ஆண்டில் இருந்து வல்வெட்டித்துறை நகரசபைத் தலைவராக நான் இருந்த பொழுது பழகும் வாய்ப்பைப் பெற்றேன்.

கல்வி சமுதாயப்பணிகளில் தீவிர ஈடுபாடு காட்டியது மாத்திரமல்ல அடிக்கடி சந்தித்து கோரிக்கைகளை வலியுறுத்துவார்.

எனது பதவிக் காலத்தில் தொண்டைமானாற்று பகுதியில் செய்யப்பட்ட வேலைத்திட்டங்கள் எல்லாவற்றின் பின்னணியிலும் அமரர் கிருஷ்ணபிள்ளை ஆசிரியரின் பங்களிப்பு இருந்ததை எண்ணிப் பார்க்கின்றேன். தொண்டைமானாறு ஆரம்ப சுகாதார நிலையக் கட்டிடம், தொண்டைமானாறு வீரகத்திப்பிள்ளை மகாவித்தியாலயத்திற்கு இரண்டு மாடிக் கட்டிடம் (நெக்கொட் திட்டம்), நீச்சல் வீரர் நவரத்தினசாமி ஞாபகார்த்த பஸ்நிலையம், பல வீதிகள் அமைக்கப்பட்டமை போன்றவை அவற்றில் குறிப்பிடத்தக்கவை ஆகும்.

1970 களில் விடுதலைப் போராட்ட இயக்க முன்னோடிகளான எமது தலைவர்கள் தங்கத்துரை, குட்டிமணி, ஜெகன் போன்றவர்களுடன்

நட்புடனிருந்ததை நானறிவேன்.

இளைஞராக இருந்த காலத்தில் இருந்து சாதி அடக்கு முறைகளுக்கு எதிரான போராட்டங்களில் தீவிர பங்களிப்பு இருந்ததை அறிந்த பொழுது கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் மீதான மரியாதை பலமடங்காக உயர்ந்தது.

நகர சபைத் தலைவராகவும், பாராளுமன்ற உறுப்பினராகவும் நான் கடமையாற்றிய பொழுது பல தடவைகள் என்னை சந்திக்கும் போதெல்லாம் பொது விடயங்களைப் பற்றியே உரையாற்றுவார். அவர் தனக்கோ தனது குடும்பத்திற்கோ எந்த உதவியையும் கோரியதில்லை.

சமுதாய சீர்திருத்தக் கருத்துக்களோடு இருப்பதோடு, சமுதாய சிந்தனையோடு வாழ்ந்த நாட்டுப்பற்றாளர். அமரர் கதிர்காமு கிருஷ்ணபிள்ளை அவர்களுக்கு எனது அஞ்சலியைத் தெரிவிப்பதோடு அன்னாரை இழந்து வாடும் மனைவி பிள்ளைகள், உற்றார், உறவினர்கள், நண்பர்கள் பொதுமக்கள் அனைவருக்கும் எனது அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

Clos Novex - 62B
1868. Collombey,
Switzerland.
13.08.2011.

திரு.கி.நவநீதன் ஆசிரியர்
தொண்டைமானாறு

**அன்புள்ள தம்பி!**

உங்கள் தந்தை கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்கள் இயற்கை எய்திவிட்டதை இன்றுதான் சிவராஜலிங்கம் மூலம் அறிந்தேன். கவலை மேலீட்டால் எழுதுகிறேன். உங்கள் அம்மாவுக்குத் தெரியும் என்மீது ஆசிரியர் எவ்வளவு பற்றும் நம்பிக்கையும் வைத்திருக்கிறார் என்று. உங்கள் அப்பா போன்று சமுதாயத் துடிப்புள்ளவர்களினாலேயே நானும் தீவிரவாதியாக மாறினேன். எனது ஒவ்வொரு முற்போக்கான நடவடிக்கைகளின் போதும் உங்களப்பா என்னைத் தேடிவந்து தகுந்த ஆலோசனைகளை வழங்குவார்.

உங்கள் அப்பா ஆயுதப் பயிற்சி எடுத்ததாக நான் அறியவில்லை. ஆனால் பயிற்சி எடுத்தவர்போல் பாதுகாப்பில் எப்படிக்கவனம் செலுத்தவேண்டும் எப்படி நிலை எடுக்க வேண்டும் என்ற தந்திரோபாய நகர்வுகளைச் சொல்லித் தருவார். பாதுகாப்புச் சம்பந்தமான நூல்களைக் கற்றிருக்கிறார் போலும். அதனால்தான் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் தலைவராக தளபதியாக நீண்டகாலம் திரு.கே.டானியல் அவர்களுடன் இணைந்து படை நடத்திய பல களங்களில் எஸ்.ரி என்.நாகரத்தினம் அவர்களுடன் கண்டிருக்கிறேன். திருவாளர் வே.சண்முகதாசன் அவர்கள் எம் சமுதாயத்திற்கு ஆற்றிய சேவைகளுக்காக நன்றி தெரிவிக்கும் முகமாகவே தங்கள் தந்தை அவர்களுடன் இணைந்து சில சமுதாயப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்ததை அறிந்து அன்றும் மகிழ்ந்தேன் இன்றும் மகிழ்ச்சியடைகிறேன். இவைகளை நினைத்து நீங்களும் குடும்பத்தவர்களும் தேற்றம் பெறுவது நன்று

என்றும் அன்புடன்
**அல் வையாபுரி**

## ஒடுக்கப்பட்ட சமூகப்பின்புலத்தில் ஆசிரியர் க.கி அவர்களின் பலபரிமாணங்கள்.

– தெணியான்.

ஆசிரியர் க.கிருஸ்ணபிள்ளை அவர்கள் பற்றிச் சொல்வதற்கு முற்படுகின்ற வேளையில் அவரது மருமகன் நல்லையா பற்றிய எண்ணமே எனது மனதில் முதலில் எழுகின்றது. நல்லையா என்னோடு தேவரையாளி இந்துக்கல்லூரியில் ஒன்றாக ஒரே வகுப்பில் படித்த ஒருவர். இருவரும் மாணவகால நண்பர்கள். அக்காலத்தில் நண்பர் நல்லையாவின் இல்லத்துக்கு இரண்டொரு சமயங்களில் அவரைத் தேடிச் சென்றிருக்கின்றேன். அந்த இல்லந்தான் ஆசிரியர் க.கிருஷ்ணபிள்ளை அவர்களின் பிறந்தகம். அங்கு வைத்தே ஆசிரியர் அவர்களையும் நான் கண்டுகொள்ள நேர்ந்தது.

ஆசிரியர் அவர்களின் சந்திப்பு அவரைப் பற்றிய ஒரு மனப்பதிவை அக்காலத்தில் என்னுள் உருவாக்கியிருக்கின்றது. ஆசிரியர் அவர்கள் மருமகன் நல்லையாவை நோக்கியது போலவே மருமகனின் நண்பனாகிய என்னையும் அப்பொழுது நோக்கினார். அவர் உள்ளத்தில் நாங்கள் இருவரும் விடலைப்பருவ 'சின்னப்பொடியள்' என்ற விதமான எண்ணமே மேலோங்கி இருந்ததனை நான் உணர்ந்தேன். எங்களோடு வெகு இறுக்கமாகவே எப்பொழுதும் அவர் நடந்துகொள்வார். அதனால் ஒருவகைப் பயம் கலந்த மரியாதையே அக்காலத்தில் எனது மனதில் அவர்மீது இருந்து வந்திருக்கின்றது. பின்னர் நண்பர் நல்லையா எழுதுவினைஞராக அரசபதவி பெற்று வெளியூருக்கு மாற்றலாகிச் சென்றார். நான் ஆசிரியரானேன். நண்பர் நல்லையாவுக்கும் எனக்கும் இடையே இருந்துவந்த மாணவகால நெருக்கம் சிறிதுசிறிதாக விலகிப்போகவேண்டி நேர்ந்தது. தொழில் அடிப்படையான உறவும், எனது வளர்ச்சியும், சமூக அக்கறையும் காரணமாக ஆசிரியர் அவர்கள் நெருக்கமாகத் தன்னோடு என்னை வைத்துக்கொண்டார்.

நாங்கள் மாணவர்களாக இருந்துவந்த காலத்தில் எங்களுடன் வெகு இறுக்கமாக ஆசிரியர் அவர்கள் எதற்காக நடந்துகொண்டார்கள் என்பதனை அப்பொழுது தெளிவாக விளங்கிக்கொள்ள எனக்கு முடியவில்லை. ஆசிரியர் அவர்கள் இடைவிலகல் மாணவனாக இருந்து, சில ஆண்டுகளின் பின்னர் கல்விகற்றுத் தேறிவந்தவர் என்பதனை அறிந்துகொண்டபோதுதான் எங்கள்மீது காட்டிய இறுக்கத்தின் உள்ளார்ந்த நோக்கத்தைத் தெளிவாக நான் விளங்கிக்கொண்டேன். எங்களுடைய கல்வியில் தமக்கு நேர்ந்ததுபோல இடையூறு எதுவும் ஏற்பட்டுவிடக்கூடாது என்ற முன்னெச்சரிக்கையே அது என்பதனை உணர்ந்துகொண்டேன்.

ஒரு மனிதனுடைய வாழ்வுப் பாதையில் குறுக்கே வந்து விழுந்துவிடும் தடைக்கற்கள் அந்த மனிதனின் வாழ்க்கைப் பயணத்தைத் திசைதிருப்பி விடுவதுண்டு. பலருடைய வாழ்க்கை அந்தத் திசைதிருப்பத்துடன் முன்னேற்றமின்றிச் சிதைந்துபோனதை நாம் கண்டிருக்கிறோம். ஆனால் தற்துணிவும் விடாமுயற்சியும் உடைய மனிதர்கள் வாழ்வில் அது அவர்களின் உயர்வுக்கு வழிகோலுவதாக வந்து வாய்த்துவிடுகின்றது. அத்தகைய ஒரு வாய்ப்பினைப் பெற்றுக்கொண்டவர் ஆசிரியர் க.கிருஷ்ணபிள்ளை அவர்கள். க.கி அவர்கள் தனது குடும்ப சுமை காரணமாகப் பாடசாலைக் கல்வியை இடையில் நிறுத்திக்கொண்டு விட்ட ஓர் இடைவிலகல் மாணவர். பின்னர் ஏழாண்டு காலம் கடந்தபிறகு தமது கல்வியைத் தொடர்வதற்கு நாட்டங்கொண்ட இடைவிலகல் மாணவனை எந்தவொரு பாடசாலையினாலும் உள்வாங்கிக்கொள்வதற்கு இயலாது. பாடசாலையில் சேர்ந்து வரன்முறையான கல்வியைப் பெற்றுக்கொள்ள இயலாத நிலையில் மனம் தளராது மூதறிஞர் கந்தமுருகேசனாரிடம் சென்று ஒருவகையில் குருகுல முறையிலான கல்வியினை க.கி அவர்கள் பெற்றுக்கொண்டார். அவரிடத்தில் கல்விகற்று அங்கீகரிக்கப்பட்ட கல்வித் தராதரத்தினையும் பெற்றுக்கொண்டார்.

ஆசிரியர் க.கிருஷ்ணபிள்ளை அவர்கள் தமிழறிஞர் பெரியார் கந்தமுருகேசனாரின் உருவாக்கம் என்று கூறுவதில் எவ்வித தவறுமில்லை என்பது எனது கருத்து. ஆசிரியர் க.கி அவர்களை நோக்கும் பொழுதில் பெரியார் கந்தமுருகேசனாரின் ஆளுமையின் பாதிப்பினைத் தெரிந்து கொள்ளலாம். கந்தமுருகேசனார் ஆழ்ந்த தமிழ்ப்புலமை உடைய ஓர்

அறிஞர். பெருங்கல்விமான்கள் என்று பேசப்பட்டவர்கள் எல்லாம் அக்காலத்தில் அவரிடத்தில் சென்று பாடங்கேட்டார்கள் , ஐயந்தெளிந்தார்கள். கந்தமுருகேசனார் மிகுந்த தமிழ்ப்பற்றுள்ள ஒருவராகவும் விளங்கினார். கருத்து நிலையில் ஈ.வே.இராமசாமிப் பெரியாரின் கொள்கைகளைப் பின்பற்றி வாழ்ந்த சமூக சீர்திருத்தவாதியாகவும் அக்காலத்தில் அவர் இருந்துவந்தார். (அவரது மறைவின்பின்னர் அவரைச் சைவப்பெரியாராக்கி அவரது சிலைக்கு திருநீறு பூசிக்கொண்டாடும் நிகழ்வுகள் இன்று நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன) அவர் உள்ளத்தில் இருந்து வந்த சமூகசீர்திருத்தக் கருத்துக்களுக்கேற்ப அரசியலில் கம்யூனிஸ்ட் பொன்.கந்தையா அவர்களை ஆதரிக்கும் ஒருவராக வாழ்ந்து வந்தார் சமூகசிந்தனையாளர் கந்தமுருகேசனாரின் ஆளுமையின் கையளிப்பாகவே ஆசிரியர் க.கி. அவர்கள் ஒடுக்கப்பட்ட சமூக மக்களுக்குக் கிடைத்துள்ளார் என்றே கொள்ளுதல் வேண்டும். ஆசிரியர் க.கி அவர்கள் தமது வாழ்நாளின் ஆரம்ப காலம் முதல் இறுதிவரை கொண்டிருந்த ஈடுபாடுகள் இந்த உண்மையினை உணர்த்தி நிற்கின்றன. ஆசிரியர் க.கி அவர்கள் ஆளுமையில் ஒன்றுக்கொன்று முரண்பாடுள்ள எதிர்த்தளங்களில் நின்று செயற்படும் இயல்புகள் இருந்து வந்திருக்கின்றன. முரண்பாடான அந்த இயல்புகளின் வெளிப்பாடான நடத்தைக்கோலங்கள் அவரை இன்று சமூகமுக்கியத்துவம் வாய்ந்த ஒருவராக நினைவு கூருவதற்கும் பேசுவதற்கும் அடிப்படை நியாயங்களாக அமைந்திருக்கின்றன.

ஒடுக்கப்பட்ட சமூகமக்கள் மத்தியில் இருந்து படித்து முன்னுக்கு வந்த மூத்த தலைமுறையினர் சமூக விழிப்படைந்து தத்தமது பகுதிகளில் வாழ்ந்த மக்களை முன்னேற்ற வேண்டும் என்னும் நோக்கத்துடன் சங்கங்களை நிறுவினார்கள். அச்சங்கங்களுக்கு முன்னேற்றச் சங்கம். அபிவிருத்திச்சங்கம் எனத் தாங்கள் உருவாக்கிய சங்கங்களுக்குப் பெயர் சூட்டிக்கொண்டார்கள்.

ஆசிரியர் க.கி அவர்கள் உள்ளத்திலும் அத்தகைய ஓஉ உந்தல் உண்டானது வியப்பில்லை. ஆசிரியர் அவர்கள் பிறந்த கிராமம் அல்வாயில் மாயக்கை எனப்படும் பகுதி. அக்காலத்தில் ஏனைய கிராமங்கள் போல மிகவும் பின்தங்கிய பகுதியாக மாயக்கை இருந்து வந்தது. அப்பகுதி மக்களை முன்னேற்றும் நோக்கத்துடன் ஆசிரியர்

அவர்கள் ஒரு சங்கத்தை நிறுவினார். அச்சங்கத்துக்குத் தமது முன்னோடிகள் சூட்டிக்கொண்டது போன்று ஒரு பெயரைச் சூட்டாது, ஆசிரியர் அவர்கள் என்ன பெயர் வைத்துக் கொண்டார் தெரியுமா? "அல்வாய் ஐக்கிய சமூகசீர்திருத்தக் கழகம்" என்பதே அப் பெயர் ஆசிரியர் அவர்கள் சூட்டிக்கொண்ட அப்பெயரில் 'சமூக சீர்திருத்தம்' என்னும் தொடர் 'கழகம்' என்னும் சொல் என்பன மிகுந்த கவனத்துக்கு உரியவைகளாகக் காணப்படுகின்றன. பெரியார் கந்தமுருகேசனாரின் பாதிப்பினால் திராவிட முன்னேற்றக் கழகங்களின் மொழி வழிப்பிரயோகத்தினை இங்கு கண்டு கொள்ள முடிகின்றது. குறிப்பிட்ட இக்கழகத்துக்கூடாக ஆசிரியர் அவர்கள் தமது கிராம மக்களின் முன்னேற்றத்துக்காகப் பல நல்ல காரியங்களைச் செயற்படுத்தி வந்திருந்தார் அவற்றுள் மிகமுக்கியமான ஒன்று வாழ்வதற்கு வீட்டுவசதி இல்லாத பதினைந்து குடும்பங்களுக்கு அரச உதவி மூலம் வீடுகளைப் பெற்றுக் கொடுத்திருக்கின்றார்.

பெரியார் கந்தமுருகேசனார் ஒரு நாத்திகவாதி என்பது அவரை அறிந்தவர்கள் அனைவரும் அறிவர். ஆனால் ஆசிரியர் அவர்கள் நல்ல ஒரு சைவனாகவே வாழ்ந்தார். இயல்பாக அவர் உள்ளத்தில் இருந்து வந்த இறைநம்பிக்கை கந்தமுருகேசனாரின் செல்வாக்கினால் மாற்றமுறாமல் இருந்தபடி இருந்துவந்திருக்கின்றது அத்துடன் மாற்றமுடியாது இருந்தமைக்கு வேறுசில நியாயங்களும் பின்புலத்தில் இருந்து வந்திருக்கின்றன. இந்து போட்டினால் புதிதாக நிறுவப்பெற்ற அல்வாய் ஸ்ரீலங்கா வித்தியாலயத்தின் ஆரம்பகாலத்தில் க.கி அவர்கள் ஆசிரியராக நியமிக்கப் பெற்றார். அப்பாடசாலையை முன்னின்று தாபித்தவர்கள் சைவப்பெரியார் கா.சூரன் வழிவந்த ஆசிரியர்களான வட அல்வை.க.முருகேசு ஆசிரியர் கவிஞர் மு.செல்லையா தலைமை ஆசிரியர் ஆகிய இருவரும் ஆவர். கவிஞர் மு.செல்லையா அவர்கள் ஆரம்பகால அதிபராக வித்தியாசாலையில் இருந்திருக்கின்றார்.

ஆசிரியர் க.கி அவர்களை இந்தப் பின்புலத்தில் வைத்து, ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப் போராட்டத்தில் அவர் பிரதான பங்காளியாக நின்று போராடி வந்திருப்பதனைக் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். இதற்கு முன்னோடியாக ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைப்போராட்ட வரலாறு எவ்வாறு வளர்ந்து வந்திருக்கின்றது என்பதனை நோக்குவது அவசியமாகின்றது.

ஒடுக்கப்பட்ட மக்கள் அல்லது சிறுபான்மைத் தமிழ் மக்கள் மத்தியில் கல்வி அறிவு பெற்றவர்களாக இருந்தவர்கள் தமது மக்களின் உரிமைகளை வென்றெடுக்க வேண்டும் என்னும் வீர நோக்குடன் சங்கங்களை நிறுவினார்கள். அச்சங்கங்கள் தத்தமது பகுதிகளுக்குள்ளேயே நிறுவப்பெற்றமையினால், அவற்றின் செயற்பாட்டுப் பரப்பளவு குறுகியதாகவும் பெரும்பாலும். குறித்த ஒரு சாதியினரை உள்ளடக்கியதாகவும் இருந்து வந்திருக்கின்றது. கல்வியைப்பொறுத்தவரை வடமராட்சிப்பகுதியில் வதிரி மெ.மி.பாடசாலை, அதன் பின்னர் தாபிக்கப்பெற்ற கொற்றாவத்தை அ.மி.பாடசாலை, அதனைத் தொடர்ந்து உருவான தேவரையாளி சைவவித்தியாசாலை(இன்றைய தேவரையாளி இந்துக் கல்லூரி) என்பன இப்பகுதி வாழ் ஒடுக்கப்பட்ட மக்களின் கல்விவளர்ச்சிக்குக் காரணமாக அமைந்தன. கல்வி அறிவு பெற்ற இப்பகுதி ஒடுக்கப்பட்ட மக்கள் தமது உரிமைகளைப் பெற்றுக் கொள்வதை இலக்காகக் கொண்டு வடமராட்சி சமூகசேவா சங்கம் என்னும் பொதுத்தாபனத்தை உருவாக்கினார்கள். (ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாற்றினைப்பதிவு செய்கின்றவர்கள் சிலர் இச்சங்கம் பற்றிய வரலாற்றினைப்பதிவு செய்யாது வசதியாக மறந்து போய் விடுகின்றனர்) இந்தச் சங்கத்தை முன்னின்று தாபித்து செயற்படுத்தி வந்தவர்கள் சைவர்களாகவும் காந்தியவாதிகளாகவும் இருந்த போதிலும் இடது சாரித் தலைவர் சி.தர்மகுலசிங்கம்(ஜெயம்) இவர்களின் மிகுந்த ஈடுபாடு உள்ளவர்களாக விளங்கினார்கள், யாழ்குடாநாட்டில் பிரதேச அடிப்படையில் இயங்கிய சங்கங்களில் இதுவும் ஒன்று. இச்சங்கம் சார்ந்த முக்கியத்தர்களுடன் ஆசிரியர் க.கி.அவர்களுக்கு நெருக்கமான தொடர்பு இருந்து வந்திருக்கின்றது. இந்தச் சங்கத்தையும் ஏனைய சில சங்கங்களையும் இணைத்து ஒரு பொதுத்தாபனமாக வட இலங்கை சிறு பான்மைத் தமிழர் மகாசபை 1943இல் தோற்றுவிக்கப் பெற்றது, பின்னர், அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையாக 1944இல் பெயர் மாற்றம் செய்யப்பட்டது

இக்கால கட்டத்தில் காந்தியவாதிகள், கம்யூனிஸவாதிகள் என பல்வேறு கொள்கைப் பிடிப்புள்ளவர்கள் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையில் அங்கம் வகித்தார்கள். மகாசபையின் பிரதிநிதிகளாகிய இவர்கள் எடுத்த முயற்சியினால் யாழ்நகரிலுள்ள

நல்லூர் கந்தசாமி கோயிலும் ஏனைய இரண்டு ஆலயங்களும் சாத்வீக முறையில் ஒடுக்கப்பட்ட மக்களுக்காக 1956இல் திறந்து விடப்பட்டன. வரலாற்று அடிப்படையில் இச்சம்பவம் மிக முக்கியத்துவம் வாய்ந்த முதல் நிகழ்வு என்பதனை மனங் கொள்ளுதல் வேண்டும். இதனைத் தொடர்ந்து யாழ் நகரிலுள்ள உணவகங்களில் எவ்வித வேறுபாடுகளுமின்றி, சகலருக்கும் சமத்துவமாக உணவு வழங்கப்பட வேண்டுமென்னும் போராட்டத்தை 1958ம் ஆண்டு மகாசபை முன்னெடுத்து வெற்றிகண்டது

இங்கு மிக முக்கியமான இன்னொரு தகவலைப் பதிவு செய்து வைத்துக் கொள்ள வேண்டும். வடமராட்சி, பருத்தித்துறையில் அக்காலத்தில் இருந்த பஸ்நிலையத்துக்கு மேற்குப்புறத்தில் உயர்ந்து வளர்ந்து நின்ற ஓர் அரசமரத்துக்கு அருகில் 'சபேஸ் கபே' என்ற பெயரில் தேநீர்க் கடை ஒன்று இயங்கி வந்தது. மட்டக்களப்பினைத் தமது பிறந்த இடமாகக் கொண்டிருந்த ஒருவருக்குச் சொந்தமான கடையது. தேநீர்க்கடையில் சினிமாப்பாட்டுப் புத்தகங்களும், திராவிடமுன்னேற்றக் கழகப் புத்தகங்களும் விற்பனை செய்து கொண்டிருந்தார். அவர் மிகத்தீவிரமான தி.மு.க. கொள்கைப் பற்றாளர். சமூக சீர்திருத்தங்களை வெகுதுணிச்சலுடன் நடைமுறைப்படுத்தும் ஒருவராகவும் வாழ்ந்தார். அவருடைய தேநீர்க்கடையில் 1958ம் ஆண்டு அல்லது அதற்கு முன்னர் ஒடுக்கப்பட்ட மக்களுக்குத் தேநீரும் உணவு வகைகளும் சமத்துவமாக வழங்கப்பட்டன. இந்த நடைமுறையை இரண்டொரு மாதங்கள் மாத்திரம் அவரால் நடைமுறைப்படுத்த முடிந்தது. சாதிவெறியர்களின் அச்சுறுத்தலினால் முற்போக்கான தமது செயற்பாட்டினை அவர் தொடரமுடியாது கைவிட வேண்டிய நிலைக்கு ஆளானார்.

அகில இலங்கை சிறுபான்மைத்தமிழர் மகாசபை, ஒடுக்கப்பட்ட மக்களின் சமூகவிடுதலைக்கான வலுவான கால்கோள் இட்டு பரந்து பட்ட செயற்பாட்டினை முன்னெடுத்து வந்தது. இச்செயற்பாடுகளுக்கு 'சபேஸ் கபே' உரிமையாளர் போன்றவர்களும் ஏனைய முற்போக்குச் சக்திகளும் - குறிப்பாகக் கம்யூனிஸ்ட்டுக்களும் தமது ஆதரவை வழங்கி வந்தார்கள்.

இக்கால கட்டத்தில் மகாசபைக்குள் சில உள் முரண்பாடுகள் தோன்றி வலுப்பெறத்தொடங்கின. கம்யூனிஸ்ட்டுக்களின் அதிகாரம் மேலோங்குவதாகக் காந்தியவாதிகள் குற்றஞ் சுமத்தினார்கள். குறித்த ஒரு சாதியினரின் செல்வாக்கு வலுப்பெற்றுவிட்டதாகவும் ஏனையவர்கள்

குறைப்பட்டுக் கொண்டனர் (அவர்கள் குறைபட்டுக் கொண்டதில் உண்மை இல்லாமல் போய்விடவில்லை) மகாசபையின் உயர் நிர்வாக பீடத்தில் இடம் பெற்றிருந்த காந்தியவாதிகளிடம் ஆங்கிலமொழி, அறிவு இல்லாதிருந்ததும் அவர்களது முக்கிய பலவீனமாகக் காணப்பட்டது. அந்தப்பலவீனத்தை ஈடுசெய்வதை உள்நோக்கமாகக் கொண்டு E.V.செல்வரத்தினம் B.Sc அவர்களை ஆ.ம செல்லத்துரை அவர்களுடன் இணைச் செயலாளராகத் தெரிவு செய்து கொண்டார்கள். ஆனால் காந்தியவாதிகள் எதிர்பார்த்த பயனை இந்த நடவடிக்கை கொடுக்கவில்லை. இவைகளின் விளைவாகவும் வேறுசில உள் நியாயங்களினாலும் காந்தியவாதிகளான திரு ஆ.ம.செல்லத்துரை, திரு.க.முருகேசு ஆகியோர் மகாசபையில் இருந்து வெளியேறினார்கள். இவர்களின் வெளியேற்றம் மகாசபையில் உண்டான முதலாவது பிளவு எனலாம். மகாசபையில் இருந்து வெளியேறிய இவர்கள் முற்போக்குச் சக்திகள் எடுக்கும் சமூக நடவடிக்கைகளைக் குரோதமான கண்ணோட்டத்துடன் விமர்சித்து வந்தார்கள். இவர்கள் இருவருள்ளும் க.முருகேசு அவர்களுடன் ஆசிரியர் க.கிருஸ்ணபிள்ளை அவர்கள் நெருக்கமாக இணைந்து நின்றார்.

ஆசிரியர் க.கி அவர்கள் அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபையுடன் அதிக உறவு வைத்துக்கொண்டதாக நான் அறிந்த அளவில் சொல்வதற்கில்லை. அதேசமயம் க.முருகேசு ஆசிரியரின் வழியில், அவரது தொடர்பு காரணமாகவும் இலங்கைத் தமிழரசுக் கட்சியுடன் பெருமளவு உறவு இருந்து வந்திருக்கின்றது.

தமிழ்க் கட்சிகள் தமது அரசியல் தேவைகளை நோக்கமாகக் கொண்டு செயற்படுத்துவதனை உணர்ந்திருந்தது. அ.இ.சி. மகாசபை தனது ஒற்றுமையைச் சிதைக்கும் நிலையில் 1964இல் பெரும் உடைவுக்குள்ளாகவேண்டி நேர்ந்தது. உலகரீதியில் கம்யூனிஸ்ட் கட்சிக்குள் உண்டான பிளவு மகாசபை மேலும் இரண்டாக உடைவதற்குக் காரணமாக அமைந்தது. சீனச் சார்புடைய தீவிரவாதிகள் அந்த சமயம் மகாசபையைவிட்டு வெளியேறினர். சோவியத்சார்புடைய மிதவாதிகள் M.C சுப்பிரமணியம் அவர்களின் தலைமையின் கீழ் மகாசபையில் தொடர்ந்து இருந்தார்கள். இந்தப்பிளவுடன் ஒடுக்கப்பட்ட மக்களின் பலம் பொருந்திய தாபனமான மகாசபை உறுப்பினர்கள் வெளிப்படையாகக் காந்தியவாதிகளாகவும், மிதவாதிகளாகவும், தீவிரவாதிகளாகவும்

சிதைந்து ஒருவர்க்கொருவர் குரோதத்துடன். செயற்பட்டனர்.

பின்னர் மகாசபையில் இருந்து பிரிந்து சென்ற தீவிரவாதிகளும் முற்போக்காளர்களாக இருந்துவந்த ஏனைய தீவிரவாதிகளும் இணைந்து 1967இல் உருவாக்கிய தாபனமே தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம். இந்த வெகுஜன இயக்கத்துடன் தொடர்புபட்ட ஆசிரியர் க.கி அவர்களின் சமூகம்சார் நடவடிக்கைகள், தனிப்பட்டமுறையில் அவரது சுயசரிதையிலும் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைக்கான போராட்ட வரலாற்றிலும் மிகமுக்கியமான இடத்தினைப் பெறுகின்றன.

அரசியல் கட்சிகளுள் இலங்கைத் தமிழரசுக் கட்சியின்பால் ஈர்ப்புள்ளவராக வாழ்ந்த ஆசிரியர் க.கி அவர்கள் தீவிரவாத அரசியல் கட்சியினால் வழிநடத்தப்பெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்துடன் இணைந்து நின்று செயற்படுவதற்கு எவ்வாறு முடிந்தது? என்பது முக்கியமான ஒரு வினா. ஒடுக்கப்பட்ட சமூகத்தின் முன்னேற்றம் விடுதலை என்பன ஆசிரியர் உள்ளத்தில் எப்பொழுதும் இருந்து வந்திருப்பதே அன்னாரின் அகமுரண்பாடான இத்தகைய செயற்பாடுகளுக்குக் காரணமாக அமைந்தன எனலாம். ஆசிரியர் வட அல்வை க.முருகேசு அவர்களின் பாதிப்பு ஆசிரியத் தொழில் ஆரம்பத்திலும், பின்னர் ஆசிரிய பயிற்சிமுடிந்து பதுளையில் ஆசிரியப்பணிபுரிந்த காலத்திலும் தீவிர அரசியல் கொள்கையைப் பின்பற்றிய ஆசிரியர்களான க.தங்கவடிவேல், எஸ்.யோகசாமி ஆகியோருடனான நட்பும் ஆசிரியர் க.கி அவர்களின் கருத்து நிலையிலும் செயற்பாட்டிலும் பாதிப்பினை ஏற்படுத்தி இருக்கின்றன. அதனால் ஒன்றுக் கொன்று முரண்பாடான இரண்டு தளங்களில் நின்று தாம் தோன்றிய சமூகத்துக்காகச் செயற்பட்டு வந்திருக்கின்றார். தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் போராட்ட நடவடிக்கைகளில் பங்காளியாக நின்றிருக்கின்றார். அதே க.கி அவர்கள் தான் ஒடுக்கப்பட்ட மக்கள் பிரதிநிதி ஒருவரைத் தெரிவு செய்து பாராளுமன்றம் அனுப்பிவைக்கத் தகுந்த சந்தர்ப்பத்தினை வழங்குமாறு கோப்பாய் பாராளுமன்ற உறுப்பினர் கதிரவேற்பிள்ளை அவர்களை அணுகிக் கோரிக்கை முன்வைத்துள்ளார்.

ஆசிரியர் கா.கி அவர்களின் தலைமையில் தேவரையாளி இந்துக்கல்லூரியில் 1984இல் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜென இயக்க கூட்டத்தில், கே.டானியல் அவர்களின் விருப்புக்கிணங்கி

மேடையேற்றி நான் பேசினேன் என்பதனை இங்கு தவறாது பதிவுசெய்து கொள்ள விரும்புகின்றேன்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் சாதியத்துக்கும் தீண்டாமைக்கும் எதிராக எடுத்த போராட்ட நடவடிக்கைகள் குறிப்பிட்டுச் சொல்லத் தகுந்த வெற்றிகளை ஈட்டிக்கொடுத்தன என்பது வரலாற்றில் பதிவு செய்யப்பட வேண்டிய பெரும் உண்மை. ஆனால் வரலாற்றடிப்படையிலான இந்த வெற்றி காந்தியவாதிகளின் சாத்வீகப் போராட்டத்தில் ஆரம்பித்து கம்யூனிஸ்ட்டுக்களின் வன்முறையற்ற மிதவாதப் போராட்டமாகத் தொடர்ந்து கம்யூனிஸ்ட்டுக்களின் தீவிரவாதப் போராட்டமாகவே வளர்ந்து வந்துள்ளது என்பதனை மறைத்துப் பேசுதல் வரலாற்று நேர்மையாகாது.

தெணியான் பிறந்த கிராமம் பொலிகண்டி அந்தக் கிராமத்தில்தான் வரலாற்றுச் சிறப்புமிக்க கந்தசுவாமி கோயில் இருக்கின்றது. தெணியான் அப்பகுதி இளைஞர் சிலரையும் அயற்கிராமங்களில் வாழ்ந்து வந்த இளைஞர்களையும் ஒன்று சேர்த்து செயற்குழு ஒன்றினை உருவாக்கி ஆலயப்பிரவேச நடவடிக்கைகளை எல்லோருமாக முன்னெடுத்தார்கள். இவர்களுக்குக் குறுக்கே போடப்பெற்ற தடைகள் பலவற்றை தாண்டி 1973 இல் மகாசபைத் தலைவர் M.C.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் ஆலயப்பிரவேசம் நடந்து முடிந்தது. அப்பொழுது M.C.சுப்பிரமணியம் அவர்கள் பாராளுமன்றத்தில் நியமன உறுப்பினராக விளங்கினார்கள். அக்காலத்தில் தெணியானும் அவரது நண்பர்கள் சிலரும் தேவரையாளி இந்துக் கல்லூரியில் பணிபுரிந்து கொண்டிருந்தார்கள். அக்காலத்தில் அந்தக் கல்லூரி அதிபராக இருந்தவர் M.S.சீனித்தம்பி அவர்கள். அவரும் இந்த ஆலயப்பிரவேச நிகழ்வில் M.C.சுப்பிரமணியம், M.P. அவர்களுடன் ஆலயத்துக்கு வந்திருந்தார். ஆனால் அதிபர் மூ.சி. சீனித்தம்பி வழிகாட்டலில் அப்பகுதி மக்கள் மறுக்கப்பட்ட உரிமையை ஆலயப்பிரவேசம் மூலம் நிலை நாட்டினர் எனத்தவறுதலான தகவல் "இலங்கையில் சாதியமும் அதற்கெதிரான போராட்டங்களும்" என்ற முக்கியமான ஒரு நூலின் திருத்தப்பட்ட இரண்டாவது பதிப்பில் இடம்பெற்றுள்ளது. M.C.சுப்பிரமணியம் அவர்கள் தலைமையில் அந்த ஆலயப்பிரவேசம் நடைபெற்று முடிந்ததென்பதுதான் யாவரும் அறிந்த

உண்மை.

பொலிகண்டி கந்தவனக் கோவில் மாத்திரமல்லாது அல்வாய் வடக்கு முத்துமாரியம்மன் கோவில், அல்வாய் மாலிசந்தைப் பிள்ளையார் கோவில் என்பவற்றிலும் ஆலயப்பிரவேசம் செய்யப்பெற்றது. மாலிசந்திப்பிள்ளையார் ஆலயத்தினுள்ளே அவ்வாலயத்தைச் சூழ வாழ்ந்து வரும் மக்களும் அண்மையிலுள்ள மக்களுமாகிய ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் அச்சம் காரணமாக உள்நுளைவதைத் தவிர்த்துக் கொண்டதனால் பழையபடி அந்த ஆலயக்கதவு மூடிக்கொண்டது.

இங்கு இடம் பெற்ற ஆலயப்பிரவேசப் போராட்டத்தின் பின்புலத்தில் சாத்வீக வழியில் முதல் ஆலயப் பிரவேசத்தினைச் செய்து முடித்த மகாசபை முக்கியத்தர்களாக இருந்த ஆசிரியர்கள் ஆ.ம.செல்லத்துரை, வடஅல்வை க.முருகேசு ஆகியோரின் நிலைப்பாட்டினைக் கவனத்தில் கொள்ளுதல் அவசியமாகின்றது. வடஅல்வை க.முருகேசு ஆசிரியர் அவர்கள் மகாசபையின் தலைவராகத் தலைமை தாங்கியவர். வடமராட்சியில் நடைபெற்ற ஆலயப்பிரவேசம் சம்பந்தமாக இவர் எவ்வகையிலும் பெரிதாக தம்மை வெளிக்காட்டிக் கொள்ளவில்லை. அதே சமயம் தமிழரசுக் கட்சியுடன் நெருக்கமான உறவை வைத்துக் கொண்டிருந்தார். இவரது அந்த உறவுக்கு அடிப்படையில் சில அபிலாசை இருந்திருக்க வேண்டும். இவரது பவளவிழா மலரில் இவரின் வாழ்க்கை வரலாறு கந்தையா நடேசனால் (தெணியான்) விரிவாக எழுதப்பெற்று வெளியிடப்பெற்றது. சிறிய ஒரு நூலாக வெளியிடத் தகுந்த சாதியம் சம்பந்தமான அக்கட்டுரை பிரான்சில் இருந்து வெளிவந்து கொண்டிருக்கும் உயிர் நிழல் சஞ்சிகையில் மறுபிரசுரம் செய்யப்பெற்றது. ஈழத்தில் வெளிவந்திருக்கும் விரல் விட்டு எண்ணத்தகுந்த சாதியம் தொடர்பான சிறந்த கட்டுரைகளுள் இதுவும் ஒன்று எனப்பேராசிரியர் கா.சிவத்தம்பி அவர்களினால் பாராட்டப்பெற்ற கட்டுரை அது.

மகாசபை முக்கியத்தர்களுள் ஒருவராக இருந்து செயலாற்றிய இன்னொருவர் ஆ.ம.செல்லத்துரை ஆசிரியர் அவர்கள். ஆரம்பகாலத்தில் மகாசபையின் செயலாளராக பதவி வகித்து அரும்பணி ஆற்றியவர். சாத்வீக வழியில் நின்று ஆலயப் பிரவேசம் செய்வதில் முனைப்பாகச் செயற்பட்டவர். மகாசபையில் இருந்து வெளியேறிய பின்னர் ஆசிரியர்

க.கி இணைந்து நின்று முன்னெடுத்த ஆலயப் பிரவேசப் போராட்டத்தினை எதிர்த்து தமிழரசுக்கட்சியின் உத்தியோக பூர்வ வெளியீடான சுதந்திரன் பத்திரிகையில் அறிக்கைவிட்டார். பின்னர் மகாசபை முன்னெடுத்த ஆலயப்பிரவேசப் போராட்டங்களின் போது தெணியானை அழைத்து ஆதரவு தெரிவித்துப் பின்னணியில் இருந்தார். இவரது நடவடிக்கைகளை நோக்குகையில் ஒன்றுக் கொன்று முரண்பாடுள்ளதாகவே தென்படுகின்றது. ஆனால் உண்மையில் ஆலயப்பிரவேசத்தையோ அதற்கான நடவடிக்கைகளையோ நிராகரிக்கும் ஒருவராக இவர் இருந்து வரவில்லை. சாத்வீக வழியில்தான் ஒடுக்கப்பட்ட மக்களின் உரிமைகளை வென்றெடுக்கலாம் என்பதில் பிற்காலத்தில் அவருக்கு நம்பிக்கை இருக்கவில்லை. ஆனால் மகாசபை, வெகுஜன இயக்கம் என்பவற்றுடன் கொண்டிருந்த அகமுரண்பாடுகள் காரணமான அதிருப்தியே வக்கிரமான அறிக்கைக்குக் காரணமாக அமைந்தது. அவர் இறந்து பல ஆண்டுகளின் பின்னர் அவரை இழிவுபடுத்தி, வெளிநாட்டில் போய்த் தங்கி இருந்து கொண்டு கட்டுரை எழுதுவது மிகவும் கேவலமான ஒரு செயல். ஒரு மனிதனிடத்தில் பலம் இருப்பது போல பலவீனமும் இருக்கவே செய்கிறது. அவன்தான் மனிதன். இந்தப்பொது விதி ஆ.ம.செல்லத்துரை ஆசிரியர் அவர்களுக்கு மாத்திரமன்றி, அவரைப்பற்றி இழிவாக எழுதியவருக்கும் பொருந்தும். முதற்கல் அவராலும் தூக்கிப் போடுவதற்கு இயலாது என்பது எனக்குத் தெளிவாகத்தெரியும். இந்த இடத்தில் கே.டானியல், டொமினிக்ஜீவா ஆகிய இருவர் பற்றியும் குறிப்பிடுதல் அவசியமாகின்றது. தெணியானின் "கழுகுகள்" நாவல் வெளிவந்த சமயம் அதன் அறிமுகவிழா வடமராட்சியில் இடம் பெற்ற பொழுது வருகை தந்த தீவிரவாதி டானியல், மிதவாதி டொமினிக் ஜீவா ஆகிய இருவரும் தமக்குள் இருந்த கொள்கை முரண்பாடுகளைத் துறந்து காந்தியவாதியான ஆ.ம.செல்லத்துரை அவர்களை மரியாதையின் பொருட்டு சந்தித்து உரையாடி வந்த பெருந்தன்மை நினைவுகூரத் தகுந்தது. கொள்கை முரண்பாட்டினால் பிரிந்திருந்த டானியல், ஜீவா இருவரும் தெணியானின் இந்த நூல் அறிமுகக் கூட்டத்திலேதான் ஒரேமேடையில் ஏறிச் சொற்பொழிவு ஆற்றினார்கள் என்பதும் கவனத்தில் கொள்ளப்பட வேண்டிய ஒன்று.

ஒடுக்கப்பட்ட மக்களின் கடந்த கால வரலாற்றின் இந்தப் பின்னணியில் ஆசிரியர் க.கிருஷ்ணபிள்ளை அவர்களின் வாழ்வு

நடவடிக்கை, சாதனை என்பவை பார்க்கப்பட வேண்டும். ஆசிரியர் க.கி அவர்கள் இயல்பில் இறுக்கமானவர். நெறிமுறைப்பட்ட ஆழமான தமிழ்ப்புலமை உள்ளவர். மரபுமீறாக் கவி புனையும் ஆற்றலுள்ளவர். சமூகசீர்திருத்தக் கருத்தாளர், தமிழரசுக்கட்சி ஆதரவாளர்,ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமைப் போராட்டத்தில் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் முக்கிய பங்காளர்களுள் ஒருவர், கல்விச் சமூகத்தினால் மதிக்கப்பெற்ற நல்லாசிரியர், சோதிடக் கலையில் வல்லவர் இப்படி... இப்படி... பலவற்றைச் சொல்லிப் பெருமைப்படலாம்.

அரையில் கட்டிய வெள்ளை வேட்டி, மேலே அரைக்கை வெள்ளைச் சட்டை, தோளில் குலைத்து இரண்டாக மடித்த வெள்ளைச்சால்வை, நெற்றியில் துலங்கும் வெண்ணீறு, வெற்றிலை மென்ற வண்ணம் உதடுகள் ஒரு ஓரம் சற்றுத்திறந்து மெல்லச் சிரித்து மெதுவாக நடந்துவரும் எங்கள் கிருஷ்ணபிள்ளை ஆசிரியரின் தூலம் இனிமேல் எங்கள் புறக்கண்களுக்குத் தென்படப் போவதில்லை. ஆனால் ஒடுக்கப்பட்ட சமூக மக்கள் வரலாற்றில் என்றும் வாழப்போகும் அவருக்கு நாம் செய்யக்கூடியது என்ன?

நெல்லைக்குற்றிக் கொடுத்து விட்டு உமியை மாத்திரம் காலங்காலமாக மடியில் கட்டிக் கொண்டு வருகின்றோம் என்பதனை அறிவுபூர்வமாக உணர்ந்து....

முற்போக்குச் சக்திகள் தமக்குள் இருக்கும் உள் முரண்பாடுகளைத் துறந்து அடிநிலை மக்கள் ஒடுக்கப்பட்ட மக்கள் உரிமைக்காகத் தொடர்ந்து போராடுவதே அமரர் க.கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்களுக்கு நாங்கள் அளிக்கும் காணிக்கை ஆகும்.

# அப்பையா ஓர் அறிவுப் பெட்டகம்

அப்பையா இறந்துவிட்டார் என்ற செய்தி என்னைத் திகைப்புற வைத்தது. ஒரு முதுபெரும் பொக்கிசத்தை இழந்துவிட்டோமேயென்ற தவிப்பு என்னை வாட்டுகிறது. அவரது முகம் என் நெஞ்சில் நிழலாடிக்கொண்டிருக்கின்றது.

நெற்றியில் நீண்ட வெண்ணீறு சந்தனப் பொட்டு
நேர்த்தியாக வகிடெடுத்து வாரிவிட்ட தலை
நசனல், வேட்டி சால்வை அணிந்த நெடிதுயர்ந்த தோற்றம்
கண்களிலே தீட்சண்யமான பார்வை...

இவை அப்பையாவை நினைவூட்டும் எனது மனப் படிமங்கள். ஆம் ஓர் ஆசிரியனுக்குரிய சால்பும் கம்பீரமும் அவர் தோற்றத்தில் துலாம்பாரமாக வெளிப்படுவதை நான் இரசித்திருக்கிறேன்.

எனது அன்புத் தந்தையாரின் தகப்பனாரை நாங்கள் 'அப்பையா' என்றுதான் அழைப்போம். இதனால் இருவரையும் பிறருக்கு அடையாளப்படுத்துவதற்காக அமரர் கிருஷ்ணபிள்ளை அவர்களைத் 'தொண்டைமானாறு அப்பையா' என்று செல்லமாக அழைப்போம். அவர் அடிக்கடி பருத்தித்துறையில் இருக்கும் எங்கள் வீட்டிற்கு வந்துபோவார். எனது தந்தையார் அவர்மீது மிகுந்த மதிப்பும் மரியாதையும் வைத்திருந்தார். அவர் எமது வீட்டிற்கு வந்துபோகும் நாட்கள் எமக்கு ஊக்கமும் உற்சாகமும் மிகுந்த நாட்களாக அமையும்.

எனக்கு நினைவு தெரிந்தபின் அவர் முதன் முதலாக அறிமுகமான நாள் இன்றும் எனது ஞாபகத்திலுள்ளது. ஒருநாள் நான் புத்தகங்களோடு போராடிக்கொண்டிருந்தேன். அப்பையா எங்கள் வீட்டிற்கு வந்திருந்தார்.

எனது தந்தையார் எனைப்பார்த்து "இவர் எனது குஞ்சிஐயா. ஆசிரியராகப் பணியாற்றிக்கொண்டிருக்கின்றார். நீங்கள் சிறுமியாக இருந்த காலத்தில் தொண்டைமானாறிலுள்ள அவரது வீட்டிற்குப் போயிருக்கிறீர்கள். நீங்களும் இவரைப்போல் படித்து முன்னுக்கு வரவேண்டும்" என்று கூறினார். அப்பையா என்னைப் பார்த்து புன்னகைத்தார். அவர் எங்கள் வீட்டிலிருந்து புறப்படும்போது, எனது தோளைத் தட்டி, "பிள்ளை நன்றாகப் படித்து முன்னுக்கு வா" என்று கூறிவிட்டுச் சென்றார். அன்றிலிருந்து நானும் ஆசிரியராக வேண்டும் என்று சபதம் எடுத்துக்கொண்டேன். ஆசிரியரானேன். அவர்தான் எனது 'றோல்மொடல்'. எனது தந்தைவழி உறவினர்களில் அப்பையா மூத்த கல்விமானாகவும் முன்மாதிரியான பெரியவராகவும் திகழ்ந்தார்.

1980ம் ஆண்டு நான் பல்கலைக்கழகத்திற்குத் தெரிவானபோது அப்பையா, நல்லையா மாமா, அன்ரிஐயா (வல்லிபுரம் இராமநாதன்), முதலியோர் எங்கள் வீட்டிற்கு வந்து வாயார வாழ்த்திய நாளை என் வாழ்நாளில் மறக்கமுடியாது. 1986ஆம் ஆண்டு அல்வாய் தெற்கு பாரதி சனசமூக நிலையத்தின் 19ஆம் ஆண்டு நிறைவு விழாவும் விளையாட்டுப்போட்டியும் நடைபெற்றது. இவ்விழாவிற்கு என்னையும் எனது கணவரையும் பிரதமவிருந்தினராக அழைத்துக் கௌரவித்திருந்தார்கள். அந்த விழாவின் ஆரம்பமுதல் இறுதிவரை அப்பையா என்னருகில் இருந்து உரையாடி ஆலோசனைகள் வழங்கியது இன்றும் என் நினைவில் இருக்கின்றது.

1996ஆம் ஆண்டு இடப்பெயர்வினைத் தொடர்ந்து நான் கிளிநொச்சியில் வாழ்ந்துவந்த காலப்பகுதியில் அப்பையா அடிக்கடி எங்கள் வீட்டுக்கு வருவார். பிள்ளை உண்மையில இங்கை ஒரு சுத்தமான காற்று வீசுதடி மோனை... என்றுகூறியபடியே எங்கள் வீட்டு முற்றத்திலுள்ள மாமரத்தின் கீழ் அமர்ந்துகொள்வார். எனது பிள்ளைகள் தாத்தா... தாத்தா... என்று அழைத்து உபசரித்து அவரை அன்பு மழையில் நீராட்டுவார்கள்,

இவ்வாறு வழக்கம்போல் உரையாடிக்கொண்டிருக்கையில் திடீரென்று என்னிடம் ஒரு கேள்வி கேட்டார். "அதுசரி இப்ப நீ ஒரு கல்வி அதிகாரி என்று கேள்விப்பட்டன். நல்ல விடயம்தான். ஆனால், நீ குறைகேள் அதிகாரியோ அல்லது குறைகூறும் அதிகாரியோ எண்டது எனக்கு இப்ப தெரியவேணும்" என்றார்.

நான் மௌனமாகப் புன்னகைத்தேன்."பிள்ளை நீ குறைகேள் அதிகாரியாக இருப்பதுதான் நல்லது. ஒருபோதும் குறைகூறும் அதிகாரியாக இருக்கக்கூடாது மோனை" என ஆலோசனை வழங்கினார். நான் தற்போது குடியிருக்கும் காணியை நில அளவை முறைப்படி சரியாக அளந்து எல்லை வகுத்துத் தந்தார். வீடு, கிணறு என்பவற்றிற்கு நிலையம் எடுத்துத் தந்தவரும் அவர்தான். எனது காணியின் விஸ்தீரணம் அரை ஏக்கர் என்று நான் சொன்னபோது "இல்லை அதைவிடக் கூட இருக்கிறது. வேணுமெண்டால் அளந்து நிரூபித்துக் காட்டுகிறேன்" என்று கூறினார். நிரூபித்தும் காட்டினார்.

"அப்பையா நீங்கள் ஒரு விண்ணன்தான். சேவையருக்குப் படிச்சிருந்தால் கலக்கி இருப்பீங்கள்" என்றேன்.

குழந்தையைப்போல் கொடுப்புக்குள் ஒரு சிரிப்பு. கூடவே முகத்தில் ஒரு சோகம் குடிகொண்டது.

"அப்பையா ஏன் ஒருமாதிரிப் போயிட்டீங்கள். நான் ஏதும் பிழையாகச் சொல்லிப்போட்டனோ?"

"இல்லைப் பிள்ளை... அந்தக்காலத்திலை நாங்கள் பெரிய படிப்புப் படிக்கிறதெண்டால் எத்தினை சமூகத் தடைகள், பொருளாதாரத் தடைகளைத் தாண்டவேண்டியிருந்தது. நாங்கள் முன்னுக்குவர விடமாட்டாங்கள் பிள்ளை. அவங்கடை அடக்குமுறைகளுக் கெதிராக நான் கடுமையாகப் போராடியிருக்கிறேன்" என்று கதைகதையாகக் கூறுவார். நேரம் போவதே தெரியாமல் இருக்கும். கிண்டலாகவும் நகைச்சுவையாகவும் பேசுவதில் வல்லவராக விளங்கினார். அவரது இயற்பெயரிலும் 'சக்கராயுதன்" எனும் புனைபெயரிலும் "சஞ்சீவி" "ஈழநாதம்" ஆகிய பத்திரிகைகளில் அவர் எழுதிய மரபுக்கவிதைகளை நான் இரசித்துப் படித்திருக்கிறேன்.

அவரிடம் படித்த மாணவர்களும் நண்பர்களும் கிளிநொச்சியில் உயர்பதவிகளிலிருந்தனர். அவர்கள் எங்கள் வீட்டுக்கு வந்து அவரை அழைத்துச்சென்று ஆலோசனை பெறுவது வழக்கமாக இருந்தது. கல்வி, அரசியல், விவசாயம், விஞ்ஞானம், வானசாஸ்திரம், மனையடி சாஸ்திரம், நில அளவையியல்... என்று எல்லா விடயங்களையும் அலசி ஆராயும் அறிவுப் பெட்டகமாகவும் பல்துறை விற்பன்னராகவும் அவர் திகழ்ந்தார்.

அவரது அறிவினைப் பகிர்ந்து கொண்ட அந்த இனிய நாட்கள் என்ன விலை கொடுத்தாலும் திரும்பிவரப்போவதில்லை. என்பது

எனக்குத் தெரியும். இருப்பினும் என் நினைவுக் குதிரையைக் கடிவாளம் போட்டு என்னால் நிறுத்த முடியவில்லை. அது இன்னும் வேகமாக ஓடிக்கொண்டிருக்கிறது.

ஒருநாள் கிளி/தருமபுரம் மகாவித்தியாலயத்திற்கு குழு மேற்பார்வைப் பணிக்காகச் சென்றிருந்தேன். அங்கே அப்பையாவின் மகள் தேவகி கற்பித்துக்கொண்டிருந்தார். அதிபர் பூலோகராசா அன்போடு எமை வரவேற்றார்.

"மடம் நீங்கள் எங்களுக்கொரு நல்ல ரீச்சரைத் தந்திருக்கிறியள்... நன்றி" என்று கூறினார். நான் அர்த்தபுஷ்டியோடு அவரைப் பார்த்தேன். "தேவகி ரீச்சரைப்பற்றித்தான் சொல்லுறன். அவர் கற்பித்தலில் மட்டுமன்றி இணைப்பாடச் செயற்பாடுகளிலும் மாணவர்களை ஊக்குவித்து வருகின்றார். இந்தமுறை கோட்ட, வலய ரீதியாக நடைபெற்ற உடற்பயிற்சிப் போட்டிகளிலை எங்கடை பாடசாலைதான் முதலாமிடம். எல்லாத்துக்கும் தேவகி ரீச்சர்தான் காரணம். அவர் லீவே எடுக்கமாட்டார். நல்ல ரீச்சர்" என்று அடுக்கிக்கொண்டே போனார்.

நான் தேவகி ரீச்சரை மனதாரப் பாராட்டியபின் "எப்படி உங்களால் லீவு எடுக்காமல் யாழ்ப்பாணத்திலிருந்து வந்து போக முடிகின்றது" என்று கேட்டேன். "இது அப்பாவின் கடுமையான கட்டளை. லீவு எடுத்து வீட்டில் நிண்டால் அவருக்குப் பிடிக்காது. அதனால் நான் லீவு எடுக்கிறேல்லை. திங்கள் வந்து வெள்ளி போறனான். குவாட்டசிலை தங்கிறநான்" என்று அமைதியாகப் பதிலளித்தார்.

இவ்வாறு பிள்ளைகளையும் தன்னைப் போன்று கடமையுணர்வுள்ளவர்களாக வளர்த்திருந்தார். தேவகி ரீச்சர் மட்டுமன்றி அவரது பிள்ளைகள் யாவரும் கல்வியிலே உயர் பட்டங்களைப் பெற்று தேர்ச்சி பெற்ற ஆசிரியர்களாக இன்று சமூகத்திலே பிரகாசித்துக் கொண்டிருக்கிறார்கள்.

> "புகழ் புரிந்த இல்லிலோர்க்கில்லை இகழ்வார்முன்
> ஏறுபோல் பீடுநடை"
> என்பதற்கிணங்க
> "மனைத்தக்க மாண்புடையள் ஆகித் தற்கொண்டான்
> வளத்தக்காள் வாழ்க்கைத் துணை"

என்பதற்கிணங்க நல்ல அறிவுள்ள பிள்ளைகளையும் பெற்று இல்லறத்தை நல்லறமாக்கியவர். இறைவன் திருவருளால் அறிவுப் பொக்கிசமான மருமகனையும் பெற்றிருக்கின்றார். இவர் உருவாக்கிய மாணவர்கள் இவரது பெருமையைப் பறைசாற்றிக் கொண்டிருக்கிறார்கள். இவற்றைவிட ஒரு மனிதனுக்கு வேறென்ன வேண்டும்? என்று கேட்கும் அளவிற்கு நிறைவாக வாழ்ந்துள்ளார்.

இவரது இழப்பினால் துயருற்றிருக்கும் மனைவி, பிள்ளைகள், மருமகன் மற்றும் உறவினர்கள் அமைதியடையவும் இவரது ஆத்மா இறைவனின் திருவடிகளில் அமைதியாக நிலைபெறவும் எல்லாம் வல்ல செல்வச்சந்நிதி முருகப்பெருமான் திருவருளை இரு கரம்கூப்பி இறைஞ்சுகின்றேன்.

நிழல் தந்த விருட்சங்கள் அழிந்து போகலாம் - அந்த
நிழலில் வாழ்ந்த நினைவுகள் அழிவதில்லை.

**திருமதி பிறேமா மதுரநாயகம்.**
உதவிக் கல்விப் பணிப்பாளர்,
வலயக்கல்வி அலுவலகம்,
கிளிநொச்சி

# ஒடுக்கப்பட்டவர்களின் விடிவெள்ளி

வ.சின்னத்தம்பி
ஓய்வுநிலை ஆசிரியர்,
வராத்துப்பளை.

அல்வாய் மாயக்கையைப் பிறப்பிடமாகவும் தொண்டைமானாற்றை வாழ்விடமாகவும் கொண்ட திரு.கதிர்காமு கிருஷ்ணபிள்ளை ஆசிரியர் அவர்கள் இயற்கை எய்திவிட்டார். அவர் இயற்கையெய்திய நாற்பத்தோராம் நினைவு நாள் நடைபெறுகின்றது. அந்நாளில் அப்பெருமகனின் மக்கள் தொண்டு பற்றியும் குறிப்பாக ஒடுக்கப்பட்ட மக்கள் தீண்டாமைக் கொடுமையில் மீண்டெழ உழைத்தமை பற்றியும் தெரிந்து கொள்வது அவசியமாகின்றது.

1966ல் "சாதி அமைப்பு தகரட்டும் சமத்துவநீதி ஓங்கட்டும்" என்ற ஓங்கார ஒலியுடன் உருவாக்கப்பட்ட வெகுசன இயக்கமாகிய "தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத்தின்" தலைவர்களில் திரு.க.கிருஷ்ணபிள்ளையும் முக்கியமானவர்.

வெகுசன இயக்கம் தனியே ஒடுக்கப்பட்ட மக்களைக் கொண்டதல்ல. முற்போக்கு எண்ணங் கொண்ட தமிழ் மக்கள் பல வெவ்வேறு கருத்துக் கொண்டவர்கள், முற்போக்கு எண்ணங்கொண்ட விவசாயிகள், தொழிலாளர்கள் என்பவர்களை உள்ளடக்கி இருந்தது.

இது தேநீர்ச்சாலைகள், இந்துக் கோவில்கள், சுடலைகள், முடிதிருத்தும் நிலையங்கள், சலவைத்தொழில் செய்யும் நிலையங்கள் என்பவற்றுள் தாழ்த்தப்பட்ட மக்களை நுழையவிடாமல் தடுக்கும் தீண்டாமைக் கொடுமையை எதிர்ப்பது போராடுவது மக்கள் சக்தியை அணிதிரட்டுவது என்ற நோக்கத்தோடு செயற்பட்டது.

அமரர் கிருஷ்ணபிள்ளை அவர்கள் தமிழரசுக்கட்சி அனுதாபிகளில் ஒருவர். தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் சமூக

மாற்றம் வேண்டிய புரட்சிகர எண்ணங்கொண்ட இயக்கம். தாழ்த்தப்பட்ட மக்களின் அடிப்படை மனித உரிமைகளை பெறுவதற்கான போராட்ட இயக்கம். இந்த இயக்கத்தின் தலைவர்களில் ஒருவர் என்ற வகையில் இவர் ஒடுக்கப்பட்ட மக்களினதும் முற்போக்கு சக்திகளினதும் நன்மதிப்பைப் பெற்றவராவார். தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கத் தலைமையின் வழிநடத்தலில் சங்கானையில் தேநீர்க்கடையில் சமவுரிமைப் போராட்டம் ஆரம்பிக்கப்பட்டது. இதில் சங்கானையை அண்டிய கிராமங்கள் குறிப்பாக நிற்சாமம் கிராம ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்றிணைந்து உரிமைக்காகப் போராடினர். தேநீர்க் கடைகளில் சமத்துவப் போராட்டம் நடாத்தினர். இந்த போராட்டத்தினால் நிற்சாமம் கிராமம் பாதிக்கப்பட்டது. சங்கானை பொலிஸ் அதிகாரியாக இருந்த தமிழர் ஒருவர் சாதிவெறியர்களின் பக்கம் நின்று போராட்டத்தை அடக்கத் தோள் கொடுத்தார். ஆனால் ஒடுக்கப்பட்ட மக்களின் போராட்டம் திரு கிருஷ்ணபிள்ளை, எஸ்.ரி.என். நாகரத்தினம் ஆகியோரின் உறுதியான தலைமையினாலும் மக்கள் ஒத்துழைப்பாலும் வெற்றி பெற்றது.

வெகுசன இயக்கம் அடுத்த கட்டமாக ஆலயங்களில் கடைப்பிடிக்கப்படும் தீண்டாமைக் கெதிரான அடிப்படை மனிதவுரிமையை பெறுவதற்கான ஆலயப்பிரவேசப் போராட்டத்தை தாழ்த்தப்பட்ட மக்கள் ஆலயத்தின் உட்சென்று உயர்சாதி தமிழர் போல வணங்கும் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்தனர்.

யாழ்ப்பாணத்தில் புகழ் பெற்ற முருகன் ஆலயங்களில் ஒன்றான மாவிட்டபுரக் கந்தசாமி கோவிலுக்குள் சென்று தாழ்த்தப்பட்ட மக்கள் வணங்கும் உரிமை மறுக்கப்பட்டிருந்தது. ஆண்டாண்டு காலமாக உயர்சாதி தமிழரால் மறுக்கப்பட்டது. தீண்டாமை என்னும் பெயரால் ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமை மறுக்கப்பட்டது. அதனை பெறுவதற்கான போராட்டத்தை வெகுசன இயக்கம் முன்னெடுத்தது. யாழ் குடாநாட்டில் வாழும் ஒடுக்கப்பட்ட மக்கள் ஒன்று திரண்டு முன்னெடுத்தனர்.

ஒரு பக்கம் உரிமை வேண்டிப் போராடும் ஒடுக்கப்பட்ட மக்கள் அணி மறுபக்கம் உரிமை மறுக்கும் சாதி வெறியர்களின் கும்பல். இக்கும்பலின் தலைவனாக வன்னி அடங்காத் தமிழன் சி.சுந்தரலிங்கம்

இவருக்குப் பக்கபலமாக தவராசா என்ற பொலிஸ் அதிகாரி. இவர்கள் மாவிட்டபுரத்துக்குள் முருகனை வணங்க தமிழரின் ஒரு பகுதி மனிதரை விடமாட்டோம் எனக் கங்கணங்கட்டி நின்ற சாதி வெறியர்களாவர். தாழ்த்தப்பட்ட மக்களின் உறுதியான போராட்டத்தால் வெற்றி கிடைத்தது. இதில் அமரர் கிருஸ்ணபிள்ளையின் அர்ப்பணிப்பு மிக்க தலைமைப் பங்கு அளப்பரியது.

அடுத்து பன்றித்தலைச்சி அம்மன் ஆலயப் பிரவேசப் போராட்டம். அங்கும் சாதிவெறியர்களின் மனித உரிமையை மறுக்கும் அடாவடித்தனம் தாண்டவமாடியது. இறுதியில் மக்கள் போராட்டம் வெற்றி பெற்றது. இதிலும் கிருஷ்ணபிள்ளை தலைமைப் பங்கு உறுதியானது.

செல்வச்சந்நிதியான் ஆலயப்பிரவேசம் சுமூகமாக நடந்தது. அதில் கிருஷ்ணபிள்ளையின் உழைப்பும் மக்களின் ஒத்துழைப்பும் சுமூகதீர்வை அடைய உதவியது. இதையடுத்து பல கோயில்கள் தாங்களாகவே திறந்துவிட வெகுசன இயக்கப் போராட்டம் உந்து சக்தியாக விளங்கியது. ஆனால் வடபகுதியில் இன்னும் பல கோயில்கள் ஒடுக்கப்பட்ட மக்களை உட்சென்று வழிபட விடவில்லை என்பதை அண்ணன் கிருஷ்ணபிள்ளையின் நினைவு கூரலின்போது ஒடுக்கப்பட்டமக்கள் சார்பாக தமிழர்களுக்கும் தமிழ்த் தலைமைக்கும் சுட்டிக்காட்ட வேண்டியுள்ளது. தமிழர்களின் தீண்டாமை ஒழிய வேண்டும் என கிருஷ்ணபிள்ளை அவர்கள் அவாவினார். ஒடுக்கப்பட்ட மக்கள் தீண்டாமை கொடுமைகளைப் பல்வேறு வடிவங்களில் அனுபவித்தனர். அடிப்படை மனித உரிமைகள் மறுக்கப்பட்டன. முடிதிருத்தும் உரிமை, சலவைத்தொழில் உரிமை பறிக்கப்பட்டு அவர்களின் சுகாதார வாழ்வுரிமைகள் மறுக்கப்பட்டன. வழிபாட்டுரிமை மறுக்கப்பட்டது. தொழிற் சுதந்திரம் பறிக்கப்பட்டு குலத்தொழில் மட்டுமே புரியும் நிலை காணப்பட்டது. கல்வி கற்கும் உரிமை மறுக்கப்பட்டது. மீறிக் கற்கப் போனாலும் கற்கும் இடத்தில் சமமாக தளபாடத்தில் இருக்க முடியாது. தரையில் இருந்து கற்கவேண்டும். இந்துப் பாடசாலைகளில் கற்கும் உரிமை மறுக்கப்பட்டது. உடை அணிவதில் கூட சுதந்திரம் மறுக்கப்பட்டது. பயண உரிமை மறுக்கப்பட்டது. உயர்சாதியினர் வாழும் பகுதிக்கூடாக போக முடியாது. மீறிப் போனால் விடியுமுன் போகவேண்டும். காவோலை இழுத்து அடி அழித்துச் செல்லவேண்டும் பேருந்தில் இருக்கையில் இருந்து செல்லும் உரிமை மறுக்கப்பட்டது.

இன்னும் பல்வேறு வடிவங்களில் சாதியின் பெயரால் உரிமைகள் மறுக்கப்பட்டு தாழ்த்தப்பட்டார்கள். கீழ் சாதிகள் என்ற முத்திரை குத்தப்பட்டது.

திரு.கிருஸ்ணபிள்ளை அவர்கள் இவற்றைப் பார்த்தும் கேட்டும் அனுபவித்தும் அறிந்துள்ளார். ஒடுக்கப்பட்ட மக்கள் தனிப்பட்ட முறையிலும் கிராம மட்டத்திலும் முதலில் போராடிச் சிறுகச் சிறுக உரிமைகள் சிலவற்றை மீட்டெடுத்தனர். பின்னர் அமைப்புகளை உருவாக்கி மனித உரிமைக்காகக் குரல் கொடுத்தனர். குரல் கொடுத்த போது வீடு வாசல்கள் எரிக்கப்பட்ட வரலாறும் உண்டு. இடம்பெயர்ந்த வரலாறும் உண்டு. பேரினவாதம் இன்று சிறுபான்மை இனங்களின் உரிமைகளை நசுக்கிப் பயமுறுத்திப் பறிப்பது போலவே அன்று சாதிமான்கள் ஒடுக்கப்பட்ட மக்களின் அடிப்படை மனித உரிமைகளை மறுத்தனர். குலத்தொழில் என்ற போர்வையில் அடிமைக் குடிமக்களை அடக்கி ஆண்டனர். இந்தக் கொடுமைகள் அவரைப் பாதிப்புக்குள்ளாக்கியது. அவர் ஒடுக்கப்பட்ட மக்களின் மனித உரிமைகளை வென்றடுக்க வெகுசன மக்களின் அன்பையும் மதிப்பையும் பெற்றார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் மனித உரிமைப் போராட்டம் காலத்துக்குக் காலம் ஸ்தாபன மயமாக்கப்பட்டது. 1945ன் பின் கிராமரீதியில் அமைக்கப்பட்டிருந்த அமைப்புக்கள் ஒன்றாக்கப்பட்டு அகில இலங்கை சிறுபான்மைத் தமிழர் மகாசபை உருவானது. இதில் ஒடுக்கப்பட்ட மக்கள் மட்டும் அணிதிரட்டப்பட்டு நகரங்களில் ஆலயப் பிரவேசம் தேநீர்க்கடைப் பிரவேசம் என்பவற்றை நடாத்தினர். அரசு மூலம் பாடசாலைகள் அமைத்தல் அரச உத்தியோகம் பெறுதல் போன்றவற்றில் ஈடுபட்டபோதும் தீண்டாமைக் கொடுமையும் சாதிய ஒடுக்குமுறையும் குறைந்த பாடில்லை.

இதனால் சாதியக் கொடுமைகளுக்கு எதிராக முற்போக்கு எண்ணங்கொண்ட தமிழ் மக்களையும் இணைத்த வெகுசன இயக்கத்தின் தேவை கண்டறியப்பட்டது. தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம் உருவாக்கப்பட்டது. தமிழரசுக் கட்சியனுதாபியாக இருந்த அமரர் கிருஸ்ணபிள்ளை அவர்கள் தமிழ்க்கட்சிகளால் தாழ்த்தப்பட்ட மக்கள் விடுதலை பெறமுடியாது என உணர்ந்து வெகுசன இயக்கத்துடன் இணைந்து செயற்பட்டார்.

இன்று சாதி அமைப்பு அழிந்து விட்டது. தீண்டாமை ஒழிந்து விட்டது என்ற மாயை பரப்பப்பட்டுள்ளது. ஒடுக்கப்பட்ட மக்கள் போராட்டத்தின் மூலம் சாதிய தீண்டாமைக் கொடுமை வடபகுதியில் பல கோயில்களில் கடைப்பிடிக்கப்படுகிறது. நாற்பதுக்கு மேற்பட்ட கோயில்கள் தாழ்த்தப்பட்ட மக்களை உள்ளே நுழைய விடாத தீண்டாமை விரதத்தை கடைப்பிடிக்கின்றன.

அண்ணர் கிருஸ்ணபிள்ளை அவர்களை நினைவு கூரும்போது இன்றைய தலைமுறை அறிந்து உணர்ந்து கொள்ளும் வகையில் கடந்தகால ஒடுக்கப்பட்ட மக்கள் பட்ட அவலங்களையும் போராட்டங்களையும் கற்றுக் கொள்ள வேண்டும். சும்மாயிருந்து ஒடுக்கப்பட்ட மக்கள் மனித உரிமைச் சுதந்திரத்தை அடையவில்லை. விடுத்து வேட்கை கொண்ட தலைவர்கள் உருவாவதன் மூலம் மக்கள் அணிதிரட்டப்பட்டு போராடியதன் மூலம் தீண்டாமைப் பேய் விரட்டப்பட்டது. அதில் அண்ணர் கிருஸ்ணபிள்ளை அவர்களின் பங்கு மக்களால் மறக்கமுடியாது. ஒடுக்கப்பட்ட மக்கள் வரலாற்றுடன் இவரின் வரலாறும் இணைந்து உள்ளது. இவர் அழிக்கப்பட முடியாத, மறக்கப்பட முடியாத ஒடுக்கப்பட்ட மக்களின் விடிவெள்ளியாக உள்ளார்.

## பேரணியில் முன் நின்றீர்!

தீண்டாமை இம்மண்ணில்
தொடர்ந்த போது
தீங்குகளும் ஒடுக்குதலும்
தொடர மக்கள் திக்கற்று துயருற்று
துவள்ந்த போது
தானுண்டு தன்குடும்பவாழ்வுண்டு
எனத் தனித்தொதுங்கி வாழாமல்
துணிவுடனே அதை எதிர்த்து
பணிகளாற்ற முன்வந்தோர்
பேரணியின் முன்னேநின்றீர்!

அடக்குமுறைக் குட்பட்டு
மக்கள் வாட
ஆதிக்க அரசியலார்
பக்கம் நின்று
பொது வாழ்வில்
புகழ் சலுகை நாடல் விட்டு
அவர்தம் கீழே
ஆண்டாண்டு காலமதாய்
அடிமைகளாய்
அவலமுற்று வாழ்வோரின்
துயரைப் போக்க
மக்கள் விலங்கொடிக்கும் மார்க்கத்தை
தேர்ந்துநின்றீர்.

தத்துவங்கள் பேசிவிட்டு
ஒதுங்கிநின்று
செயலற்றுச் சோர்ந்துவிடும்
நிலையைமாற்றி
அடுத்தவரின் நலன்களுக்காய்
நின்றோர் பட்ட
அடிதடிகள் இகழுரைகள்
அறிவிலார் செய் பெருமிடர்கள்
கொடியசிறை மரணமதை
தூசாய் எண்ணி
தீண்டாமை ஒழிப்பினிலே
துணிவாய் நின்ற
தீரமிகு வெகுஜன மார்க்கந் தன்னில்
திடமாகவிருப்புடனே இணைந்துநின்றீர்!

அந்த வழி நின்றுநாம்
அணுகிப் பார்த்தால்
அறிவுடையோர் நிறைந்தும்
இந்நாடுபட்ட
வரலாறுகாணாத பேரழிவு
அவலநிலை சுட்டுவது
ஒன்றே ஆகும்

பாழடிமை வாழ்வுக்கே
பாதை காட்டும்

ஆதிக்கக் கருத்தியலை
கலைகல்வி
பண்பாடு பழமைதனை
பேணிக் காக்க
மீண்டும் மீண்டும்
அதற்கு ஆரத்தி எடுப்பதனை
அறவே விட்டு
ஒடுக்குதல்கள் யாவுக்கும்
எதிராய் மக்கள்
ஒன்றுபட்டு விழிப்படையும்
கல்வி வேண்டும்!

இந்தவழி நின்றுவாழ்ந்த
கிருஷ்ணபிள்ளைஆசிரிய
உங்கள் வாழ்வு
என்றும் மக்கள் இதயங்களில்
அழியா நிற்கும்

**– தணிகையன்**

# தளபதியாய்க் குருவாய்த் தரணியில் உதித்தாய்

இந்திய தேசம் வெள்ளையர்களின் ஆதிக்கத்தில் இருந்து அடிமைப்பட்டு அல்லற்பட்ட போது பாரத தேசம் விடுதலை பெற வேண்டும் என்றால் கரிசனர்கள் விடுதலை பெறுவது மிக முக்கியம் என்பது தேசபிதா மகாத்மா காந்தியின் கருத்தாக இருந்தது. இதனை இந்தியாவின் தேசிய தலைமைகளான அம்பேத்கர், ஈவே. இராமசாமிப் பெரியார், காமராஜர், நாராயணன் ஆகியோர் ஆமோதித்துச் செயற்பட்டனர். இதனை ஏற்று ஈழத்தில் செயற்பட்டவர்களாக M.C சுப்பிரமணியம், ஜோவல்போல், S.T.N. நாகரட்ணம், K.டானியல் போன்றோருடன் மாமனிதர் அமரர் கிருஸ்ணபிள்ளை ஆசிரியரும் ஒருவர் என்பதனை நன்கறிவேன்.

எனது சொந்த ஊரான புன்னாலைக்கட்டுவனில் தாண்டவமாடிய சாதிக் கொடூரங்கள் சொல்லிலும் எழுத்திலும் அடக்கப்பட முடியாதவை. எத்தனையோ தலைமுறைகளாக இவ்வடக்குமுறைகளுக்கு விடிவுகாண எம்மவர்கள் முற்பட்ட போதும் அது முடியாமல் போக மேற்கூறப்பட்ட ஈழத்தலைமைகளே எம் ஊரையும் அயற்கிராமங்களையும் அடக்கு முறைகளிலிருந்து விடுவித்து நல்வாழ்வளித்தனர்.

திரு கிருஸ்ணபிள்ளை ஆசிரியர் அவர்கள் ஞானம், தீர்க்க தரிசனம் என்பவை ஒருங்கே அமையப் பெற்ற உயர்ந்த பண்பாளன். ஆழமான சிந்தனையாளன். அடக்கமான செயல்வீரன். 1977 – 1982 காலப்பகுதியில்

இவர் ஆற்றிய உரைகள் என் உள்ளம் எனும் ஏட்டில் ஆழப்பதிந்து கிடக்கின்றன. அவர் எங்கள் ஊரையும் அயல் ஊரையும் சேவை நோக்குடன் பலமுறை வலம் வந்தவர். 1982ல் தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம் சார்பான வேலையின் பொருட்டு என்னைத் தனது வீட்டுக்கு ஒரு முறை அழைத்திருந்தார். அப்போது எனக்கு விருந்தளித்து வழங்கிய முரல் மீன் சொதியையும் எனக்குக் கூறிய அறிவுரைகளையும் பற்றிய நினைவுகள் என் நினைவுத் திரையில் இன்றும் வலம் வருகின்றன.

மனித குலத்திற்கு அன்னார் ஆற்றிய உயர்வான பணிகள் இரண்டு. அவற்றுள் ஒன்று சாதியம் என்னும் சாக்கடைத் தீயை அணைத்தமை, மற்றொன்று சிறந்த ஆசிரியராய்த் திகழ்ந்து நன்மாணாக்கரை உருவாக்கியமை.

அன்னாரின் பிரிவால் துயருற்றிருக்கும் குடும்பத்தவருடன் நாமும் பங்குகொண்டு இறுதிப் பிரியாவிடை வழங்குவோம்.

மகத்தான மனிதம் போய் வருக!

**நானும் என் ஊர்மக்களும்**

**புன்னாலைக்கட்டுவன் குணசிங்கம்**

**எஸ்.சீனியர் குணநாயகம்**

கோண்டாவில் வடக்கு

கோண்டாவில்

ஆற்றுவார் ஆற்றல் இகழாமை போற்றுவார்
போற்றலுள் எல்லாம் தலை

பெரியாரைப் பேணாது ஒழுகின் பெரியாரால்
பேரா இடும்பை தரும்

# கே. டானியலின்

# பஞ்சமர்

(இருபாகங்களையும் கொண்ட நாவல்)

## வெளியீட்டு விழா

**இடம்:** றிம்மர் மண்டபம் மணிக்கூட்டடி யாழ்.

**காலம்:** **3-7-82** சனி மாலை **5** மணி

**தலைவர்:** கே. கிருஷ்ணபிள்ளை (ஆசிரியர்)

— நிகழ்ச்சிகள் —

வரவேற்புரை: த. இளங்கோவன்

தொடக்கவுரை: பேராசிரியர் சந்திரசேகரம்
(விரிவுரையாளர், கல்வித்துறை யாழ் பல்கலைக்கழகம்)

நூல்வெளியீட்டுரை: கலாநிதி அ. சண்முகதாஸ்
(தமிழ்ப் பட்டப்படிப்புத்துறை யாழ். பல்கலைக் கழகம்)

முதல் பிரதி பெறுபவர்: திருமதி லிங்கா துரைராசா
(சட்டத்தரணி L. L. B.)

— நூல் பற்றிய உரைகள் —

கலாநிதி வே. நித்தியானந்தன்
(தலைவர், பொருளியல் துறை யாழ். பல்கலைக்கழகம்)
எம். ஏ. நுஃமான் M. A.
எம். ஏ. சி. இக்பால்
கவிஞர் தேவி பரமலிங்கம்
செ. அம்பிகைபாலன் J. P.
சட்டத்தரணி
பொன். பொன்ராசா

சி. பவானந்தன்
சி. பற்குணம் A. G. A.
சி. மௌனகுரு M. A.
ஆசிரியர் கே. தங்கவடிவேல்
கவிஞர் பாவையூர் தேவதாஸ்
எஸ். இராசா
நந்தினி சேவியர்

நூலாசிரியர் உரை,

நன்றியுரை: டானியல் அன்ரனி

அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கம்
மக்கள் கலை இலக்கியப் பெருமன்றம்.

தனிப்பிரதி ரூபா 60/-

விழாவில் கௌரவப் பிரதி ரூபா 50/-

ஸ்ரீ பார்வதி அச்சகம், யாழ்ப்பாணம்.

## அமரர் க.கிருஷ்ணபிள்ளை ஆசிரியரால்
## எழுதப்பட்ட ஆக்கங்களில்
## சிலவற்றை அறிந்துகொள்வோம்

## தந்தை செல்வா காட்டிய வழியினிலே...

மூவேந்தர் முடியமர்ந்து முந்நாள் அரசாண்ட முதுதமிழே
பாவேந்தர் உள்ளத்தி லூற்றாகி வாழ்கின்ற பைந்தமிழே
நாவார்ந்த இயலிசை நாடக மாகிடும் நற்றமிழே
பூவார்ந்த தந்தை செல்வாவுக் கொரு தூது போகுதியே

மலையகத் தமிழரின் குடியுரிமை பறிபோக மனிதநேயம்
விலையாகிப் போகாமல் விவேகம் வழிகாட்ட வீரத்தோடு
தலைவனாய்த் தமிழரசுக் கட்சி அமைத்த தந்தையார்க்கு
மலைபோலும் அவரினுயர் சிந்தனைக்கு நினைவூட்ட மறந்திடாதே!

ஈழத் தமிழர்களின் எதிர்காலம் நோக்கி எண்ணி யெண்ணி
ஆழ நினைத்து ஆவலுடன் அவ்வகையில் ஆய்வு செய்தே
வாழப் பிறந்த எங்கள் தன்மான வாழ்வைப்பேண
நீளும் அமைப்பின் நிலை தொடர ஒற்றுமையை நெறி செய்தாரே!

"வாழு வாழவிடு" என்ற வாசகத்தின் உட்பொருளை வாய்மையோடு
ஆளும் நாடாளு மன்றத்தில் விளக்கியுரை ஆற்றும் போது
நீளும் வரலாற்று நிகழ்வுகளில் உலகத்து நிலைமை சொல்லி
சூளுரைத்த தந்தையின் பாதத்தில் தமிழ்ப்பூவைச் சூடுவாயே!

அடம்பன் கொடியுந் திரண்டால் மிடுக்கென்ற ஆர்வத்தாலே
திடமான உறுதியுடன் சிங்களச் சட்டத்தைத் திருத்தவேண்டி
கடமை கண்ணியம் கட்டுப்பாடு எனப்படும் கனத்த பண்பில் கடலருகில்
காலி முகத்திடலில் அகிம்சைப்போர் காண்பித்தாயே!

புயலாக வந்திட்ட சிங்களச் சிறீயினை எதிர்க்கும் போக்கில்
தயங்காத செல்வா தமது பரிவாரத் தானையோடு
பயமேதும் இல்லாமல் சுயமாகச் சிறைசென்ற பண்பைநீயும்
நயமாகச் சொல்லிச் சேர்ந்தே நகைத்திடு நற்றமிழே!

வடகிழக்கில் அரச குடியேற்றந் தமிழினத்தை வாட்டுமென்றும்
தடம்புரண்ட தமிழ்த் தலைவர்களால் தமிழர்களே சிறுமையாவர்
உடனிருந்தே கொல்லும் வியாதிபோல் உரிமை உயிர் போகுமென்றும்
நடமாடுந் தெய்வமாய் நமக்குரைத்த தந்தைக்கு நன்றி சொல்வாய்.

ஒற்றுமையில் வேற்றுமையாய் ஒருங்கிணைந்த கூட்டாட்சி எமக்குத்தேவை
சற்றேனும் குறையாத சமத்துவச் சட்டங்கள் சாற்றும் நல்ல
முற்போக்கு முறைதவற முழுமையுறு கட்டமைப்பை முன்னெடுத்து
நற்பேறு நோக்கிய தந்தையின் கோட்பாட்டை நாடுவோமே

திருமலை மாநாட்டில் தீட்டிய சமஷ்டித் திட்டமெல்லாம்
சரிவரக் காண்பித்தும் சாதகமா யமையாத சஞ்சலத்தால்
விரிசலே மேலோங்கி விளைந்த இனக் கலவர வேளைதன்னில்
எரி விழுந்த காயம்போல் எங்கள் செல்வா துடிதுடித்து ஏங்கினாரே

இருதடவை சிங்களப் பிரதமர் இருவருடன் இணைந்து பேசி
உருவான உடன்படிக்கை பேரின வாதிகளால் உருப்படாமல்
கருகிய மலர்போல கசக்கியே எறிந்திடக் கவலை மிஞ்சிப்
பெருகிய ஆவேச உணர்வுகளைப் பெரியவர்க்கு மீட்டுச்சொல்க

வளமார்ந்த வட்டுக் கோட்டை மா நாட்டில் வைத்தே
உளம் பொங்கி உணர்வேறிச் செல்வா அங்கு உரைத்த வார்த்தை
"இளைஞர்களே! எமக்கினித் தனிநாடு ஒன்றேதான் ஏற்றவழி
சளைக்காது தமிழ்பேசும் நாமெல்லாம் சங்கமித்துச் சாதிப்போமே.

சாமமும் பேதமும் தானமும் ஆகிய சாத் வீகங்கள்
பூமணம் போலும் பொலிந்திடு நறுமணம் பொருந்தாவிடிலோ
நாமினிச் செய்ய வேண்டிய தென்ன என்று தமது நாவால்
சேமமுறும் குறிப்பா லுணர்த்திய செல்வாவைச் சேவிப்பாயே

30.03.1999

## கீர்த்தனை

**இராகம் :- ஆனந்தபைரவி** **தாளம்: ஆதி**

**பல்லவி**

உள்ளத்தின் ஊற்றாகும் உத்தமியே அருள்
எள்ளளவேனும் மறவேன் - அம்மா

**அனுபல்லவி**

வெள்ளைக் கமலமதில் வீற்றிருந்தே எமக்குக்
கொள்ளை இன்பம் தரும் கோமதியே சரண்

**சரணம்**

வீரமும் செல்வமும் வீறாப்புக் கொள்ளாமல்
வேண்டும் வரம் தந்து நீண்டே நிலைத்திட
ஈரமுடைய கல்வி ஈந்திடும் கலைத்தேவி
என்றுமே ஞான ஒளி பொலிந்தே பரவிட

எல்லோரும் வாழ வேண்டும் என்ற நற் கோட்பாடு
இதயங்கள் நிறைந்திட இசைத்திடு வீணாகானம்
நல்லோரும் வல்லோரும் நாட்டில் மலிய அயன்
நாயகியே நவநீதன் மருதியரே

## இலங்கை மாதா

இந்து சமுத்திர நித்தில மென்றே
இவ்வுல கெங்கணும் பேசப்படும்
சுந்தரி யான இலங்கா தேவியின்
சோபைதனைச் சற்று எண்ணுவமே

புத்திரப் பேற்றினைத் தாங்கிய பொன்மகள்
பொற்பினை யொத்து அழகொளிர
மத்தியி லேயுறு பீதுறுக் குன்றினால்
மாண்பு கொண்டேயவள் வாழுகின்றாள்

தேர்விழா தன்னைத் தரிசிக்க வேவந்து
திருவருள் வாங்கியே வீடேக
நாற்புறமும் மக்கள் செல்வதைப் போலவே
நதிகள் பலவற்றை ஈன்றெடுத்தாள்

உட்டண மண்டல வெப்பந் தகிப்பதால்
உலருங் களர்நில மாகாமல்
இட்ட முடன்மழை பருவ வளிதர
ஏற்றுமே புன்னகை கொள்ளுகின்றாள்

**எண்சீர் சந்தவிருத்தம்**

சூழங்கைக் கோனாண்ட யாழ்ப்பாணந் தன்னை
குளிர்நிலவி னொளிதிகழு முகமாகக் கொண்டாள்
ஆழநீர் இயற்றுறையாம் திருகோண மலையை
அராபியரின் வணிகதுறை அந்நாள்புத் தளத்தை
வேளுணர்வைத் தூண்டுகின்ற கூர்கச் சைக்குள்ளே
விம்மி நின்று விளையாடு மிருதனங்க ளாக்கி
ஆளுநர்தாம் கூடுகின்ற கொழும்புநகரோடு
அணிபொலியும் மட்டுநகர் இடுப்புகளை அசைப்பாள்

மாதோட்டப் பதியினிலே பாலாவிக் கரையில்
மருள்நீக்கிப் பக்தருக்கு மெய்ப்பொருளைக் காட்ட
கேதீஸ் வரன்கட்டி வழிபாடு செய்த
கேண்மை மிகு சுந்தரனார் இசைகேதீச் சரமும்
மாதாவாம் கண்ணகியாள் மலர்ந்துறைந்த தலமாய்
மக்கள் பலர் பொங்கலிடும் வற்றாப் பளைதானும்
மேதாவி போலுயருங் கழையினது எழிலை
மிஞ்சுகின்ற பூணணிசேர் திருப்புயங்கள் தாமே

தனுவான உடலமதை இயக்கி யுயிர் வாழத்
தன்னிகரி லுறுப்பான இதயமாய்க் கிடக்கும்
அனுராதன் அமைத்தநகர் அனுராத புரியில்
அற்புதமாய்ப் பழைமை சொலும் தாதுகோ பங்கள்
அனுதாபி தீச மன்னன் அருள்மலிந்த தொண்டை
அசோகனது மக்கள் செய் அறங்கனிந்த சேவை
மனுநீதி வழித்தோன்றல் எல்லாள மன்னன்
மகத்துவத்தை நேர்நின்ற வீரமதைக் காட்டும்

ஆங்காங்கே காட்சிதரும் முஸ்லீம்கள் பள்ளி
அன்னையிவள் மேனியொளிர் மச்சங்களாகி
பாங்கான ஷாஜகான் மனைவியார் நினைவைப்
பயன்படுத்த நிறுவியுள்ள தாஜ்மகாலை யொக்கும்
தூங்காது ஊருகின்ற மஞ்சு தவழ் வானம்
தொடுகின்ற கிறீஸ்தவத் தலங்கள்கோ புரங்கள்
நீங்காத பொன்னாசை மண்ணாசை மிக்க
நெட்டைஐ ரோப்பியரின் ஆட்சியினை உணர்த்தும்

**கட்டளைக் கலித்துறை**

பிறந்தோருக் கிவ்வுலகு தரும்பரிசுப் பொருளாகும் பெரிய துன்பம்
பிறவாதா ருறுகின்ற பேரின்பம் அவ்வுலகப் பேறே யென்று
அறிந்ததினா லரசினையே யவமதித்துக் காவியுடை அணிந்தக் காலம்
துறந்தாரே புத்தமகான் அவர்போதம் கையேற்றுத் தொழுகின்றாளே

நுதல்விழியான் முன்னாளில் மொழிந்தளித்த வேதசிவா கமத்தை நோற்று
இதமாக ஏற்றவர்க்கு எவ்வகையுஞ் சித்திக்கும் இடருமில்லை
மதமான பேய்பிடியா தருள் நிலையில் எஞ்ஞான்றும் மலர்வையீந்து
பதமுத்தி சேர்த்துதவும் பைந்தமிழர் சைவ மதிற் பற்றே கொண்டாள்.

மக்கா பிரசவித்த மகமதிய குருநாதன் மனிததேவன்
முக்காலமு முணர்ந்து முஸ்லீம்கள் வாழும்வகை முறைமையாக்கி
பக்குவமா யுமிழ்ந்துரைத்த திருக்குரான் பகர்பண் பாட்டை
எக்கணமும் பேணுகின்ற இஸ்லாமிய மதத்தில் இன்புற்றாளே.

கருணைநெறி யிதுவென்று மேதினிவாழ் மக்களுக்குக் கனிந்துகூற
பெருமைசேர் ஜெருஜலேம் நகரிலே யுதித்தருள் பொங்கியோடும்
அருமைநூல் பைபிளை ஓதிய யேசுவின் ஆன்மநேயப்
பெருமிதஞ் சிந்திடும் கையணி வளையலாய்ப் பூரித்தாளே.

**எழுசீர் விருத்தம்**

புத்திரரின் சாயலது பெற்றோரின் நினைவினைப்
புந்தியில் மீட்ட வாறு
எத்திசையும் புகழ்மணக்கும் சிகிரியாச் சித்திரம்
எண்ணிடத் தருமஜந் தாவையே
தித்திக்கும் பொலநறுவைச் சிவாலயம் புலிக்கொடிச்
சோழரின் விறலாட்சி செப்புமே
பத்தினித் தெய்வமாம் கண்ணகி வழிபாடு
படைபலக் கஜபாவைச் சொல்லுமே.

கைவண்ணக் கலையுணர்வை டம்புலாக் குகையோடு
களனிமகா விகாரை காட்டும்
மைவண்ணக் கரும்பாறை கன்னியா யூற்றுக்கள்
மனதினில் வியப்பை யூட்டும்
சைவ நெறி நாவலரின் திருநல்லூர் ஆலயம்
சங்கைக்கு விளக்கங் கூறும்
ஐவகைச் சீலமது தழைத்தோங்கு மானிடர்தம்
அகவுணர்வுப் பண்பு கலையே.

நவகோள்க ளாதவனை வலம்வந்து எப்போதும்
நயவொளி கொள்ளல் போன்றே
யவன ரொடுரோமர் சீனர் எகிப்தியர்தம்
எண்ணில்லா மரக்க லங்கள்
கவளமாய் உண்கின்ற யானையின் தந்தம்
கறுவா தரளம் ஏலம்
உவப்புடன் வாங்கவே பண்டைநாட் சுற்றின
உத்தமி யீழத் தாயை.

பட்டினப் பாலையது பளிச்சிடவுரைக்குமே
பழையநெற் செய்கை தன்னை
கட்டினார் முன்மன்னர் கலவீவா மின்னேரி
கந்தளாய் நீர்த்தேக் கங்கள்
பட்டிப் பளையாற்றைத் தடுத்தணை போட்டுமே
பரவுகல் லோயாப் பண்ணையாக்கும்
திட்டமதில் மறுமலர்ச்சி கண்டிடத் தெண்டித்தார்
தேசபிதா சேனநாயக்கா

ஒருதரத் துற்பவித்தும் உரிமைபெறு வேட்கையால்
ஒற்றுமை காணா மக்கள்
வேறுபட்ட வுணர்வகற்றி பிதிர்க்கடனிற் குழுவாகி
வேற்றுமையி லொருமை காண்பார்
மாறுபட்ட மதத்தவரும் கிருபைபெற்று மனங்குளிரும்
மணிபல்ல வத்தினிற் கதிர்காமத்தில்
ஏறுதற் கரிய சிவனொளிக் கிரியினில் மடுமாதாவில்
எம்மதமுஞ் சம்மதமாவ ராங்கே.

பவமெடுத்த எவ்வுயிர்க்கு மிவ்வுலக சீவனத்தில்
பலவகையுந் துன்பந் தானே
தவஞ்சிறிது முன்னமைந்தால் மட்டுமே கடுகளவு
தண்மையுறு மகிழ்வே யுண்டு
நுவரெலிக் குன்றமும் கீரிமலை நெய்தலும்
நுவலரு மிதத்தையே நல்கி
உவகையைக் கொடுக்க அருமையாய் அமைந்த
உயர்திரு புண்ணிய தலங்களே.

உண்டிடும் உணவை ஏற்று
உடம்பினை இயக்கி ஓம்பும்
திண்டிறல் இரைப்பை யாகத்
திகழ்ந்திடு மலைய ரட்டைக்
கண்டிமா நகருக் கென்றே
கவினுறப் பிரபை காலும்
மண்டபத் தலதாக் கோவில்
மாட்சியை உலகங் கூறும்.

இரத்தின புரியின் கல்லும்
இந்துவின் வெண்மைச் சங்கும்
விரலணி பூண்க ளாக
விளங்கிடப் பெருமை கொள்வாள்
இரதியுடை கோலங் காட்டி
இலங்கிடும் பெண்மைப் பண்பால்
வரமது வேண்டி நின்றே
வடிவுமாங் கனியை ஒத்தாள்.

ஐந்நூறு ஆண்டு அந்நியரின் கைப்பிடிக்குள்
நெஞ்சார நொந்து நெட்டுயிர்த்தாள் - விஞ்சுபுகழ்
ஏற்று மதிமறந்தாள் இறக்கு மதியாகும்
வேற்றுப் பொருள்மயக்கில் வீண்.

சிறைக்கூட வாழ்வில் நினைவிழந்த கைதிவிடு
முறைவரவே மீண்டு வீடேகி -மரபு வழிச்
சார்ந்த கலாசாரந் தழுவியுறும் இன்பம் போல்
நேர்ந்த நிலை இன்று நினை.

மாதா தியாகம்போல் மாநிலத்தில் வேறில்லை
பாதார விந்தமதிற் பணிவோமே - ஏதேனும்
ஏறுமாறில்லாது எல்லீரும் முன்னேற
பேறுபல ஈவாள் பெறு

**தேசிய கலாசாரச் சேவைப் போட்டியில் பரிசு பெற்ற கவிதை–1968**

## எது கவிதை?

கருப்பொருள் எதையும் உருப் பொருளாக்கக்
கவர்ச்சியிற் குழைப்பவர் கவிஞர் - அவரது
விருப்புறு கற்பனை, சொல்பொருள் யாப்பணி
வேலியுள் அமைவது கவிதை!

இலக்கியப் பாக்கள் இலட்சண மாகிடும்
இசைவினைத் தருவது ஓசை - பாவில்
அலங்கார உவமை முதலாய - அணிகள்
அகத்தே இனித்திடுங் கனிகள்!

மனித வாழ்க்கையில் மாபெரும் பங்கினர்
மங்கையர் என்பது யதார்த்தம் - அந்தப்
புனித வனிதையர் பொற்பையும் பண்பையும்
புகழ்ந்து பாடுதல் தவறோ?

பட்டுக் கோட்டையின் தத்துவப் பாடல்கள்
பாரதி பல்வகை பாடல்கள் - அனைத்தும்
கட்டுக்கடங்கிய ஓசை ஒழுங்கினில்
கவித்துவம் பெற்றன சிறந்தே!

இழவில் அழுதிடும் பெண் கூட
இசையோ டழுவது கண்கூடு - அந்தப்
பழைமை அமைப்பில் உதித்திடும் கவிதைகள்
பல்லாண்டு காலம் வாழும்

உரைவீச் செல்லாம் கவிதை ஆகிடில்
உரைநடைக் குறைவிடம் எங்கே ? - அது
நரைதிரை மூப்பில் நம்மை விட்டகன்று
நமனுல கெய்தி மறையும்

சொன்னதைச் செய்கின்ற செய்வதைச் சொல்கின்ற
சூக்கும நேர்மையர் சிலரே - ஆனால்
தன்னல ஆசையில் தப்பிதம் செய்வோர்
தரணியில் மிகமிகப் பலரே

கவிதைச் சொல்லில் முதலெழுத் தகன்றால்
கமத்தினில் போடும் "விதை" வருமே
கவிதைச் சொல்லில் முதலெழுத் தகன்றால்
கற்பனை உலகின் "கதை" வருமே

கவித்துவ உணர்வின் கற்பனைப் போக்கின்
கற்பகப் பொருளே கவிதை - அது
புவித்துவ மனிதம் போற்றிடும் பண்பைப்
போதித்து வாழும் கீதம்.

13.02.1999.
உதயன் - சஞ்சீவி

# இலட்சிய வீரன் கே.டானியல்

யாழ்ப்பாணம் ஆனைக்கோட்டையில் பிறந்து வளர்ந்து 59 வயது வரை வாழ்ந்து இலங்கையின் பிரபல தமிழ் எழுத்தாளராகக் கௌரவிக்கப்பட்ட திரு.கே.டானியலின் 12வது நினைவுதினம் 23.03.1998ம் திகதியாகிய இன்றாகும்.

நிலப்பிரபுத்துவ முதலாளித்துவ அமைப்பில் மிகவும் பின் தங்கிய சமூகத்தில் தோன்றிய அவரது கல்வி ஆரம்பநிலையிலேயே நின்றுவிட்டது. யாழ் மத்திய கல்லூரியின் முதல் அதிபராக இருந்த பேர்சிவல் பாதிரியாரின் வேண்டுகோளின் பேரில் ஆறுமுகநாவலர் அவர்களால் தமிழில் பெயர்க்கப்பட்ட விவிலிய வேதமான பைபிள் என்ற தமிழ் மொழி பெயர்ப்பான நூலை, நன்கு படித்தமையால் டானியலின் தமிழ் மொழிமூல அறிவு மிகத்தீவிரமாக விருத்தியடைந்தது.

1950 களின் நடுப்பகுதியில் வீரகேசரி, தினகரன் ஆகிய பத்திரிகைகளில் டானியலின் சிறுகதைகள் பிரகாசமாகின. சிறுகதைகளின் கருவூலங்கள் முதலாளித்துவ பொருளாதாரக் கட்டமைப்பைச் சாடுவதாக அமைந்திருந்தன. பொதுவுடைமைக் கண்ணோட்டமே அவரது பூசனைக் கனவாகச் சென்று கொண்டிருந்தது.

1960 களின் நடுப்பகுதியில் சமூக மாற்ற மேம்பாட்டுக்கான களம் அமைந்த நாவல்கள் எழுதினார். போராளிகள் காத்திருக்கின்றனர், பஞ்சமர், அடிமைகள், கானல், பஞ்சகோணம், கோவிந்தன், தண்ணீர் என்பனவே அவரது நாவல்களாகும். முருங்கையிலைக் கஞ்சி. மையக்குறி, இருளின் கதிர்கள், ஆகியன குறு நாவல்களாகும்.

யாழ்ப்பாணத் தமிழர் சமுதாயத்தில் காலங்காலமாக ஊறிப் போயிருந்த சாதிமத பேதமாகிய சமூக முரண்பாடுகள் ஒழிக்கப்பட வேண்டும். எல்லோரும் வாழ வேண்டும் உலகம் இன்புற்று இருக்க வேண்டும்" என்ற சமத்துவக் கோட்பாட்டின் அடிப்படையில் அவரது சிந்தனையோட்டம் மிகத் துல்லியமாகச் செயற்பட்டது. அறுபதுகளின் பிற் பகுதியில் அடக்கி ஒடுக்கிப் பிற்படுத்தப்பட்ட மக்களின் விடுதலைக்கான களமாகிய "தீண்டாமை ஒழிப்பு வெகுசன இயக்கம்" என்ற அமைப்பை உருவாக்கினார், கடைசி வரை அதன் அமைப்புச் செயலாளராகவே

வழிநடத்திப் பல சாதனைகளை நிலை நாட்டினார். வரலாற்றுப் புகழ் மிக்க மாவிட்டபுரம் கந்தசாமி கோவில். செல்வச் சந்நிதி முருகன் கோவில், பன்றித் தலைச்சி அம்மன் கோவில், பெரிய கோவில்களில் சத்தியாக்கிரக வழிகளில் சமத்துவ வழிபாட்டுரிமையை நிலை நிறுத்தினார். இதனை உணர்ந்த கிராமப்புறக் கோவில்களின் நிர்வாகத்தினர் பலர் தத்தம் ஆலயங்களின் சமத்துவ வழிபாட்டுரிமையைத் தாமாகவே முன்வந்து வழங்கினர். வெகுசன இயக்கத்தின் தொழிற்பாடுகள் எங்கெங்கு நடக்குமோ அங்கெல்லாம் டானியல் முன்னணியில் நிற்பார். இதனால் சட்டத்தின் பிடியிற் சிக்குண்டு இரண்டு முறை சிறையும் சென்றார்.

சமூகத்தில் பிற்படுத்தப்பட்ட மக்களின் ஒற்றுமையும் ஒத்துழைப்பும் ஒருங்கிணைந்து உயர்வடைய வேண்டு மென்று கூடும் பிரசார மேடைகளில் அவர்பேசும் போது "பிறிது மொழிதல்" எனப்படும் இலக்கிய அணி ஓடி விளையாடும் சாதி முறைக்கு எதிரான கேலியும் கிண்டலும் தர்க்கரீதியாகத் தாண்டவமாடும். சாதிமுறை சாடும் தமது நாவல்களுக்கு களம் அமைக்கு முன்னர் அவ்விடத்தில் உள்ள முதியவர்கள் பலரைச் சந்திப்பார். சாதி சம்பந்தமான வரலாற்றுக் கொடுமைகளை அவர்களிடம் படிப்பார். படித்தவைகளை கலையம்ச மெருகேற்றி நாவலாக்கி அம்மக்களின் சிந்தனைக்கு விடுவார். அவரது நாவல்களில் விறுவிறுப்பான மொழி நடை, சிலேடையான கருத்துக்கள் ஓடிக் கொண்டிருக்கும். அவரது "பஞ்சமர்" நாவல் தமிழகத்தில் பெரும் வரவேற்புப் பெற்றது. அதுமட்டுமல்ல இந்நாவல் பேராசிரியர் சண்முகதாஸ் அவர்களின் மனைவி திருமதி மனோன்மணி அம்மையாரால் ஜப்பானிய மொழியிலும் பெயர்க்கப்பட்டது.

டானியலின் சிந்தனையிற் கிளர்ச்சி மிகுந்திருக்கும். அதனால் அவரது நாவல்களைப் படிப்போர் அடிமை குடிமை முறையில் வாழ்வோர், உணர்வேறிப் புரட்சிச்சிந்தனைக்கு ஆளாகி நிச்சயம் தொழிற்படுவர். விடுதலை பெறுவர். 18ம்நூற்றாண்டில் இத்தாலி என்ற பெரிய நாடு பல மாகாணங்களாகச் சிதறுண்டு காணப்பட்டது. மாஜினி என்ற எழுத்தாளராலும் கவூர் என்ற முதன் மந்திரியாலும் கரிபால்டி என்ற படைத்தளபதியாலும் விக்டர் இமானுவேல் என்ற அரசரின் ஆணையின் கீழ் மீண்டும் பழையபடி ரோமப்பேரரசு தலையெடுத்தது. அவ்வாறே

டானியலின் சிந்தனை, எழுத்து, செயற்திட்டம், துணிவு, வழிநடத்தல் ஆகிய முற்போக்கு முன்னேற்றங்கள் காரணமாகவே இன்றைய நிலையில் கணிசமான அளவுக்கேனும் சாதி முறை தளர்ந்துள்ளது என்பதை எவரும் ஏற்றுக் கொள்வர். ஆகவே பஞ்சப்பட்ட மக்களோடு ஒன்றிணைந்து வாழ்ந்து செயற்கரிய செயல்செய்த டானியல் அவர்களின் நாவல்கள் பிற்படுத்தப்பட்ட மக்களின் வரலாற்று ஆவணங்களாக அமைந்துவாழும் என்பதற்கையமில்லை. கர்மவீரனான அவர் கடைசியில் தஞ்சாவூர் மண்ணில் இயற்கை மரணம் எய்தினார். இலக்கிய கர்த்தாக்களும் ஒடுக்கப்பட்ட மக்களும் டானியலை மறக்கவே மாட்டார்கள்.

**வீரகேசரியில் பிரசுரமானது.**

## "மக்கள் இலக்கியம்" சஞ்சிகைக்கு எழுதிய வாழ்த்துக் கவிதை

செக்கச் சிவந்த கீழ்வானம்
செங்கதிர்ச் செல்வன் வரவுணர்த்தும்
முக்காலங்களும் ஏற்கின்ற
முழுமையான யதார்த்தம் இது!
தக்கோர் போற்றுந் தன்மானம்
தளரா உழைப்பில் மிக்குயர்ந்து
மக்கள் இலக்கிய ஏடேநீ
மாநிலஞ்செழிக்க வாழுதியே!

நாட்டு வளங்களில் முதன்மை பெறும்
நவயுக மனிதனின் மூலவளம்
வீட்டில் பழுத்த பலாக்கனியாய்
வேண்டும் வகையில் இரசித்திடவே
பாட்டில் பண்பில் பல்சுவையில்
பலரும் வியக்கும் பொருள் நிறைவில்
ஊட்டும் சமூக வாழ்வினிலே
உலகில் மாற்றம் காணுகுதியே!

1982 ஐப்பசி - கார்த்திகை - மார்கழி



21.10.1979 இல் யாழ் .வீரசிங்கம் மண்டபத்தில் க.கிருஷ்ணபிள்ளை அவர்களின் தலைமையில் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்பு வெகுஜன இயக்கத்தின் மகாநாட்டின் போது இடது புறமாக கே.டானியலும் வலது புறமாக எஸ்.ரி.என்.நாகரத்தினமும் அமர்ந்திருக்கின்றார்கள். சண்முகதாசனின் வாழ்த்துச் செய்தியை வி.ரி.இளங்கோவன் வாசிக்கின்றார்.

நன்றி: தேசம் நெற்

மதுரன் கிரா(f)பிக்ஸ் & ஒவ்செற் பிறின்ரேர்ஸ், அல்வாய். 021 226 3099, 0776688318